1011-09

இந்திரா சௌந்தர்ராஜனின்

புத்தம்புதிய படைப்பு

# நாவல் அரசு

வழங்கும்

(Nov - Dec)



# கண்ணான என் கண்மணி

குடும்ப நாவல்

ரூ.10/-

முழு நாவல்!

# கண்ணான என் கண்மணி

– இந்திரா சௌந்தர்ராஜன்

## 1

'ஒருவரை ஒருவர்
தின்று தீர்த்தோம்
ஆயினும் இருவரும்
மீதமும் இருந்தோம்
மூன்றாவ தொன்றையும்
சேர்ந்து பிடித்தோம்
காதலே... அழியமுடியாத
விசித்திரம் நீ!'

அனுஷா பள்ளிக்கு புறப்பட தயாராகி விட்டாள். ஐந்து வயதில் ஒரு பூச்செடிக்கு கால் கை முளைத்தது போல் இருந்தாள். அவளுக்கு தனக்குத் தெரிந்த விகிதத்தில் தலை வாரி விட்டு முகத்துக்கு பௌடர் போட்டு, சிகப்புச் சாந்து பொட்டு இட்டு, பின் யூனிஃபார்மெல்லாம் அணிவித்து இரண்டடி பின்னால் நின்று அழகு பார்த்தான் சங்கர நாராயணன்.

"போதும்ப்பா டெய்லி தானே என்னை பாக்கறே.." - என்று செல்லமாக சிணுங்கினாள் அவளும்.

"பொட்டு நேரா இருக்கான்னு பார்த்தேம்ப்பா. அப்புறம் தலைவகிடும் நேரா இருக்கான்னு பார்த்தேன்.."

"நீ எவ்வளவு தான் பாத்து பாத்து தலை சீவினாலும் உனக்கு கோணலா தான் வரும்.." என்று ஒரு மாதிரி கையை ஆட்டி அவள் சொன்ன போது அவனுக்கு அது மிக பிடித்தமாக இருந்தது.

"ஏம்ப்பா அப்படி?"

"நீ ஆம்பள - அதனால அப்படித்தான் வருமாம் - எங்க கிளாஸ் மிஸ் சொன்னாங்க..."

"அடேங்கப்பா.. ஆமா நீ உன் மிஸ்கிட்ட நான் தலை சீவி விட்டேன்னுல்லாம் சொல்லியா என்ன?"

"ஆமாம்.. ஏன் உன் தலை வகிடு மட்டும் கோணலா இருக்கு - பொட்டும் நெத்தியில எங்கியோ இருக்குன்னு அவங்க கேட்கும் போது நான் சொல்லாம என்ன செய்யறதாம்?"

- அனுஷா திரும்பவும் ஒரு தினுசாக கையை ஆட்டி கேட்கவும் அவனுக்கு அதை ரசிக்க வேண்டும் போலவும் இருந்தது. அதே சமயம் கண்ணிரண்டும் கலங்கவும் செய்தது. வெளியே ஆட்டோகாரன் வந்து நின்று சப்தமும் கொடுத்தான்.

"அப்பா டாட்டா..." - என்று முதுகில் புத்தக மூட்டையை ஏற்றிக் கொண்டு ஓடினாள் அனுஷா.

ஆட்டோவில் ஏற்கனவே ஐந்தாறு பிள்ளைகள்.

அதனுள் முண்டிக் கொண்டு உள் புகுந்தாள்.

அந்தக் காட்சியே சங்கர நாராயணனை சங்கடப் படுத்தியது.

நாளை முதல் நாமே அனுஷாவை பள்ளிக்கு சென்று விட்டுவிட்டு வரவேண்டும் என்கிற ஒரு எண்ணம் மிக வேகமாக உள்ளே எழும்பியது.

"பாத்துப்பா... ஸ்லோவா போ... அவ்வளவு பேரும் குழந்தைங்க..." - என்று அவன் சொல்லச் சொல்ல ஆட்டோ ஓடியே போனது.

பார்த்துக் கொண்டே வந்தாள் ராஜேஸ்வரி!

அவள்தான் சங்கர நாராயணனின் சமையல்காரி.

காலை ஒன்பது மணிக்கு வந்து சமைத்து வைத்து விட்டு வீட்டையும் கூட்டிப் பெருக்கி சுத்தப்படுத்திவிட்டு ஒரு பன்னிரண்டு மணியைப் போல பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு போய்விடுவாள். ஆபீசுக்கு செல்லும் சங்கர நாராயணன் ஒரு மணியைப் போல வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு இரண்டு மணிக்கு திரும்பவும் ஆபீசுக்கு புறப்பட்டு செல்வான்.

ஆறு மணிக்கு அவன் வரும் போது அனுஷா வீட்டு வாசலில் உட்கார்ந்து ஹோம் ஒர்க் செய்தபடி இருப்பாள். அவனைப் பார்க்கவும் ஓடிவந்து கழுத்தை வளைத்து கட்டிக் கொள்வாள்.

இதை அன்றாடம் பார்க்கும் அக்கம் பக்கம் வீட்டவர்களுக் கெல்லாம் ஒரு பெருமூச்சு தினமுமே தோன்றி அடங்கும். ராஜேஸ்வரிக்கோ அந்த பெருமூச்சு ஒரு புயலாகவே வீசும்.



"ஏன் தம்பி.. எதுக்கு இந்த அடம்? உங்களுக்கென்ன வயசா ஆயிடிச்சு... ஒரு நல்ல பொண்ணா பார்த்து கட்டிகிட்டா அனுவுக்கும் ஒரு நல்ல அம்மா கிடைச்ச மாதிரி இருக்கும். என் சமையல்ல இருந்தும் விடுதலை கிடைக்கும் இல்ல?" என்று பலமுறை கேட்டுவிட்டாள்.

அன்றும் அந்த கேள்வியை கண்களில் சுமந்தபடியே அவனைப் பார்த்தாள். அவனுக்கா தெரியாது?

அவளது பார்வையை தவிர்த்தவனாக வீட்டினுள் சென்றான். ஆபீஸ் புறப்படத் தயாரானான்.

ஆண்களின் அன்றாட அவஸ்தையான முகச்சவரத்தை சுயமாக செய்து கொள்ளத் தொடங்கினான். அவளும் ஃபிரிட்ஜைத் திறந்து காய்களை எடுத்து கழுவி நறுக்கத் தொடங்கினாள். நடுநடுவே அவனைப் பார்த்தாள். அப்படியே சுவற்றில் படமாய் தொங்கிக் கொண்டிருந்த நர்மதாவையும் பார்த்தாள். நர்மதாவின் படத்துக்கு ஒரு பிளாஸ்டிக் பூ மாலை ஒன்று போடப்பட்டிருந்தது. ஒரு சிறு மின் விளக்கு ஒன்றும் அணையாதபடி எரிந்து கொண்டிருந்தது. நெடுநாட்களாகவே ராஜேஸ்வரிக்கு நர்மதா எப்படி காலமானாள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசை.

அன்று கேட்டு விடுவது என்கிற முடிவுக்கு வந்து கேட்கவும் செய்தாள்.

அவனும் ஷேவ் செய்து முடித்திருந்தான்.

டவலால் முகம் துடைத்தபடியே ராஜேஸ்வரி எதிரில் டைனிங் டேபிள் நாற்காலியை சற்று இழுத்துப் போட்டு அமர்ந்தான்.

அவன் பெரிதாக ஏதோ சொல்லப் போகிறான் என்பது போல அவளிடமும் ஒரு ஆர்வத்துடிப்பு.

"மஞ்சக்காமாலை வந்துச்சு ராஜேஸ்வரிக்கா. நர்மதாவை காப்பாத்த முடியல. அப்ப அனுஷாவுக்கு ரெண்டு வயசு." என்று சிம்பிளாக கூறி முடித்தான்.

"காமாலைங்கறது கொடுமையான வியாதிதான். ஆனா அதுல இருந்து காப்பாத்த இன்னிக்கு எவ்வளவோ வழிகள் இருக்கே தம்பி.."

"முடியணும்னு விதி இருந்தா எல்லா வழியும் அடைஞ்சு போயிடும்கா. நர்மதா விஷயத்துலயும் அப்படிதான் ஆச்சு. காமாலைக்கு போட்ட தடுப்பூசியே மாறிப் போச்சு. எங்க போய் சொல்லி அழ.. அழுதாலும் போனவ வரவா போறா..?"

"அடக் கொடுமையே.. போகட்டும் உங்க அப்பா அம்மா,

அவங்க அப்பா அம்மான்னு யாருமே இல்லையா.. எதுக்கு இப்படி தனியா குழந்தையோட கஷ்டப்பட்டுகிட்டு..?"

"நான் காதல் கல்யாணம் செய்துகிட்டவன்கா. பெரியவங்கள எதுத்து கல்யாணம் பண்ணிகிட்டோம்.."

"நினைச்சேன்.. இப்படிதான் இருக்கணும்னு நினைச்சேன். போவட்டும் அனுக்குட்டியை பாத்தாதான் எப்பேர்ப்பட்ட கொரங்கு மனசு உள்ளவங்களுக்கும் மனசு மாறிடுமே... உங்க அப்பா அம்மாவுக்கு தானா மாறலை?"

- ராஜேஸ்வரியின் கேள்விக்கு ஒரு சிரிப்பை மட்டும் பதிலாக வைத்துவிட்டு "இது வரை மாறலை.. இனி தெரியாது. சரி நான் குளிச்சிட்டு கிளம்பறேன். நீங்க சமையலை முடிச்சிட்டு கிளம்புங்க. போற வழில மறக்காம அனுவுக்கு சாப்பாடு கொடுத்துட்டு போயிடுங்க." - என்றான்!

அடுத்த பத்தாவது நிமிடம் மளமளவென்று உடை மாற்றிக் கொண்டு கழுத்தில் ஒரு டையையும் கட்டிக் கொண்டு ஒரு பிரீஃப் கேஸோடு அவன் புறப்பட்ட கோலமே அவளை அசத்தியது.

'இளமைக்கு இளமை
வளமைக்கு வளமை
வாழ்க்கையை அதன் போக்கில் எடுத்துக் கொள்ளும் ஆண்மை'

எந்த பெண்ணுக்குத் தான் இப்படி ஒருவனை பிடிக்காமல் போகும்

"தம்பி.." - என்று அழைத்தாள்.

திரும்பினான்.

"ஆசையா கட்டிகிட்டவ அல்பாயுசுல போய்ட்டா என்ன தம்பி நல்ல பொண்ணா பார்த்து கட்டிக்கிலாமே தம்பி."

"ஏன்.. இந்த வாழ்க்கைல எனக்கு என்ன கஷ்டம்?"

"கஷ்டம் உங்களுக்கு இல்லாம இருக்கலாம். அனுஷாவுக்கு ஒரு அம்மா இருந்தா இன்னும் நல்லாயிருக்குமே.."

"அதுபத்தி அனுஷாவே கவலைப்படல ராஜேஸ்வரிக்கா. பொண்டாட்டி செத்துட்டா புதுமாப்பிள்ளைங்கற பழமொழியை நான் மாத்த விரும்பறேன். என் நர்மதா உடம்போட என் கூட இல்லை. ஆனா அவ காத்தா என்னை சுத்திச்சுத்தி வர்றா. என் மகளுக்கும் துணையா இருக்கா. இது போதும். தயவு செய்து இனிமே இதைபத்தி பேசாதீங்க. பேசறதா இருந்தா வேலைக்கும் வராதீங்க." - என்று கடுமையாக சொல்லிவிட்டு ஆபீசுக்கு புறப்பட்டு போனான்.

ராஜேஸ்வரிக்கு அவன்மேல் மதிப்புதான் அதிகரித்தது!



## 2

'எண்ணங்களாலே
உயிரோடு எரிந்தோம்
ஆனாலும்
பூத்த பூக்கள் போல
மிகவே மலர்ந்தோம்
நொடிகளை எல்லாம்
கணங்களாய் உணர்ந்தோம்
கண்களாலேயே
கடித்தும் தின்றோம்
இருந்தும்
காயங்களே இன்றி
காயமாய் கிடந்தோம்!
காதலே – அழியமுடியாத
அதிசயம் நீ!'

வகுப்பறை தொடங்கி விட்டது!

பாடம் நடத்த ஆரம்பித்து விட்டிருந்தாள் பாரதி.

பிள்ளைகளை கவனிக்க வைத்து பாடம் நடத்துவது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல. ஆனால் பாரதிக்கு அது கை வந்த கலையாக இருந்தது. புதிதாக வந்திருக்கிறாள்.

முன்வரிசையில் தான் உட்கார்ந்திருந்தாள் அனுஷா. பாரதி பாடம் நடத்துவதை மிகவே ரசித்தாள். அவள் கேட்ட கேள்விக்கெல்லாமும் டாண்டாணென்று பதில் கூறி பாரதியையும் அசத்தினாள்.

"அனுஷா.. நீ ஒரு பிரில்லியண்ட் ஸ்டூடண்ட். எல்லா ஹோம் ஒர்க்கையும் சரியாவும் செய்துட்டே.. உனக்கு நான் இன்னிக்கு ஒரு கிஃப்ட் தரப் போறேன்..." - என்று ஒரு ஸ்கெச் பேனாவை அனுஷாவுக்கு பரிசாகத் தந்தாள் பாரதி. அப்படியே உச்சந்தலையில் ஒரு முத்தமும் இட்டாள்.

அனுஷாவுக்கும் அவள் முத்தம் மகிழ்ச்சியை தந்தது.

"அனும்மா.. வர்ற பேரண்ட்ஸ் மீட்டும் போது நான் உன் மம்மி கிட்ட உன்னை பத்தி ஒரு ரகசியத்த சொல்லப் போறேன்" - என்றாள்.

"எனக்கு மம்மி இல்ல மிஸ்.. டாடி மட்டும் தான்.." என்றாள் அனுஷா.

"ஓ.. வெரிசாரி.. ஆமாம் உன் டாடி என்ன பண்றாரு?"

"என் டாடி பேங்க்ல ஃபீல்ட் ஆபீசரா இருக்கார் மிஸ்.."

"பேரண்ட்ஸ் மீட்டுக்கு அவர் மட்டும் தான் வருவாரா இல்ல உன் பாட்டி தாத்தான்னு யாராவது வருவாங்களா?"

"அப்பா மட்டும் தான் வருவார். தாத்தா பாட்டியை எல்லாம் நான் பார்த்ததே இல்லை.."

"ஓ.. அப்ப வீட்ல யார் சமைக்கறாங்க.."

"ராஜேஸ்வரின்னு ஒரு ஆண்ட்டி.."

- அனுஷா சொல்லும் போதே டிபன் கேரியருடன் ராஜேஸ்வரி வகுப்பறை வாசலில் வந்து நின்றாள்.

"அதோ ஆண்ட்டி வந்துட்டாங்க.." - அனுஷா கை காட்டவும் பாரதியும் பார்த்தாள். ராஜேஸ்வரியும் சிரித்தபடியே 'மிச்சம் வைக்காம சாப்ட்டுடணும்..' என்று சொல்லிக் கொண்டே டிபன் கேரியரை வைத்து விட்டுச் சென்றாள்.

"ஆமாம் இந்த ஆண்ட்டி உங்களுக்கு சொந்தமா?"

"அதெல்லாம் எனக்கு தெரியாது. ஆனா இவங்க சாடர்டே சண்டேஸ்ல வேலைக்கு வரமாட்டாங்க.."

"ஓ.. அப்ப இவங்க சர்வண்ட் குக்கா தான் இருக்கணும்."

- என்றபடியே அவள் கன்னத்தில் செல்லமாக தட்டி விட்டாள். லஞ்ச் பெல்லும் அடிக்கத் தொடங்கியது.

கூண்டு திறந்த கிளிகள் போல பிள்ளைகள் சீட்டை விட்டு ஓடத் தொடங்கின. ஆனால் அனுஷாவிடம் அப்படி எல்லாம் ஒரு ஓட்டம் இல்லை. மிக பதவிசாக "மிஸ் நான் சாப்பிட போகட்டுமா?" என்று கேட்டாள்.

அவள் விலகவும் பாரதிக்குள் ஒரு இனம்புரியாத நெகிழ்ச்சி. ஒரு வித குழைவு!

"பாரதிமாம்.. சாப்பிட போகலாமா?" - என்று ஒரு குரல் கேட்டது. திரும்பினாள். பக்கத்து வகுப்பின் டீச்சரான ஜாஸ்மின் தான் கேட்டவள்.

பாரதியும் தனது டிபன் பொட்டலத்துடன் ஜாஸ்மினோடு செல்லத் தொடங்கினாள்.

அவளோடு செல்லும்போது அழுத்தமாய் ஒரு மௌனம்.

"என்ன பாரதி எதுவுமே பேசாம வர்றீங்க?"



"என்னோட ஸ்டூடண்ட் அனுஷாவை நினைச்சேன். மனசுக்கு ரொம்ப பாரமா இருக்கு.."

"அனுவா.. க்யூட் அண்ட் பிரில்லியண்ட் ஆச்சே அவ.."

"எனக்கு இன்னிக்கு தான் தெரியும். அம்மா இல்லாத பொண்ணுன்ன உடனேயே மனசுக்குள்ள ஒரு இனம்புரியாத வேதனை... கூட தாத்தா பாட்டின்னு யாருமே இல்லைன்னு சொன்னா.."

"ஆமாம் பாரதி... அனுவோட அப்பா லவ் மேரேஜ் பண்ணிகிட்டவர். அதனால இரண்டு குடும்பமுமே பகையாகிட்டாங்க. இதுல மஞ்சக்காமாலைல அனுவோட அம்மா இறந்து போனப்ப அனுஷா கைக்குழந்தை."

"ஓ.. கேட்கவே ரொம்ப கஷ்டமா இருக்கு. ஆமாம் அனு அப்பா வேற ஒரு கல்யாணம் பண்ணிக்கலையா?"

"என்னன்னு தெரியல. பண்ணிகிட்டிருந்தா அப்பவே பண்ணிகிட்டு இருக்கணும். இனிமே பண்ணிக்குவாங்கன்னு எனக்கு தோணலை."

- இருவரும் ஒன்றாக ரெஸ்ட் ரூமில் சாப்பிடத் தொடங்கும் போதும் அனுவின் அப்பா பற்றியே பாரதி பேசினாள்.

"இந்தக் காலத்துலயும் இப்படி ஒரு மனுஷனான்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு ஜாஸ்மின்.."

"ஆமாம்... அனுவும் ஒரு ஆச்சரியம்தான். அவளோட அப்பாவும் ஆச்சரியம்தான்.."

- பேச்சு வளர்ந்து கொண்டே போன போது பாரதியின் செல்போன் சிணுங்கியது.

செம்மொழியான தமிழ்மொழியாள்...' என்கிற ஏ.ஆர்.ரகுமானின் இசை வழி காதுகளை கிறக்கியது. பாரதியும் அதன் திரையைப் பார்த்தாள்.

வசந்த்' என்கிற எழுத்துக்கள் தோன்றியிருந்தன.

அந்த எழுத்துக்களை ப்ார்த்த மாத்திரத்தில் அவள் முகத்தில் ஒரு பிரகாசம்.

"வசந்த்.."

"வசந்தே தான் பாரதி.."

"எங்க இருந்து பேசறே?"

"சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் இருந்தே தான்.."

"பாவி.. நீ எப்ப மதுரை வந்தே?"

"காலைல தான்.. பாண்டியன் எக்ஸ்பிரஸ்ல.."

"என்னப்பா - மதுரைல எதாவது ஆபீஸ் மீட்டிங்கா?"

"ஆபீஸ் மீட்டிங்கா... ஏன் நான் உன்னை மீட் பண்ண வந்திருக்கேன்னா நம்பமாட்டியா?"

"ரியலி..?"

"அடிப்பாவி.. அவனவன் காதலுக்காக என்னென்னவோல்லாம் பண்றாங்க. நான் உன்னை பார்க்க மதுரை வரக் கூடாதா?"

"வரக் கூடாதுன்னு சொல்ல நான் யார், ஆனா நீ ஒரு சரியான அம்மா பிள்ளை. அவங்கள விட்டுட்டு எப்படி வந்தேன்னு தான்.." - இழுத்தாள் பாரதி.

"அம்மா பிள்ளைன்னு என்னை சொல்லலைன்னா உனக்கு தூக்கம் வராதா பாரதி... நான் அம்மாபிள்ளை மட்டுமில்ல பாரதியோட வசந்தும் கூட.."

"என்ன இருந்தாலும் முதல்ல அம்மா பிள்ளை தானே?"

"பாரதி நான் ஆசையா உன்னை பார்க்க வந்து போன் பண்ணியிருக்கேன். எதுக்கு இப்ப அம்மாவை இழுத்து மூட் அவுட் பண்றே?"

"சாரிப்பா.. வெரிசாரி!"

"உன் சாரியும், துப்பட்டாவும் யாருக்கு வேணும்.. நான் இப்ப உன்னை மீட் பண்ணணும் - எங்க இருக்கே நீ - முதல்ல அதை சொல்."

"நான் இப்ப ஸ்கூல்ல லஞ்ச் டயத்துல லஞ்ச் சாப்ட்டுகிட்டே தான் உன்கூட பேசிகிட்டிருக்கேன்."

"ஓ.. நீ ஸ்கூல்ல டீச்சரா ட்யூட்டில ஜாய்ன் பண்ணிட்டியா?"

"ஆமாம்.. ஒரு வாரம் ஆகுது."

"பாரதி.. நான் உன்கிட்ட என்ன சொல்லியிருந்தேன் - மறந்து போச்சா உனக்கு?"

"நான் வேலைக்கெல்லாம் போகக் கூடாதுங்கறது உன் விருப்பம். ஆனா நமக்கு கல்யாணம் ஆகறவரை வேலைக்கு போறதுல தப்பில்லேன்னு நான் நினைக்கறேன்."

"கல்யாணம் ஆகறவரைன்னு ஒரேயடியா இழுக்கறியே பாரதி. அதுக்கென்ன பல வருஷங்களா இருக்கு.."

"அப்ப.. வர்ற முகூர்த்தத்துலயேவா நம்ம கல்யாணம்?"

"டாமிட்.. போன்ல நான் உன் கூட சண்டை போட விரும்பல சரி நீ லீவு போட்டுட்டு உடனேவா. நாம மதியம் மேட்னி ஷோ சினிமாவுக்கு போவோம். அப்படியே நைட் பசுமலை தாஜ் ஹோட்டல்ல டின்னரும் சாப்பிட்றோம்.."



"சாரி வசந்த்.. இப்பதான் நான் ஜாய்ன் பண்ணியிருக்கேன் லீவு கேட்டா உதைப்பாங்க.."

"அப்ப வேலையே வேண்டாம் விட்று.."

"அது சரி... உன்கூட ஊரை சுத்தறதுக்காக ஒரு நல்ல வேலையை விடச் சொல்றியே - பயங்கர சுயநலவாதிப்பா நீ.."

"வேண்டாம் பாரதி - என் வாயைக் கிளறாதே! இந்த உலகத்துல சுயநலம் இல்லாத ஒரு ஆளை கண்ணுல காட்டிடு பாப்போம்."

"வசந்த்.. சும்மா இப்படி சித்தாப்பா பேசற வேலை எல்லாம் வேண்டாம். நாம கற்பனை கூட செய்து பார்க்க முடியாத மாதிரி எல்லாம் இந்த உலகத்துல மனுஷங்க இருக்காங்கப்பா.."

"எந்த விதத்துல..?"

"இது என்ன கேள்வி.. எல்லாவிதத்துலயும் தான் வசந்த்.."

"பாரதி... எதுக்கு இப்ப மொக்க போட்றே... நான் உனக்காகவே ஆபீஸ்ல லீவு போட்டுட்டு சென்னைல இருந்து மதுரை வந்துருக்கேன். என்கிட்ட காதல் உணர்ச்சியை காட்டாம கடமை உணர்ச்சியை போய் காட்றியே - நியாயமா?"

- வசந்த் வழியத் தொடங்கினான். பாரதிக்கும் பாவமாகத் தான் இருந்தது.

"சரிப்பா.. எனக்கு கடுமையான வயித்து வலின்னு சொல்லி லீவு போட்டுட்டு வரேன். நீ என் ஹாஸ்டலுக்கு வெளியே இருக்கற ஜூஸ் கடை வாசல்ல நில்லு. நான் ஒரு அரைமணி நேரத்துல ஒரு ஆட்டோவுல அங்க வருவேன். அதே ஆட்டோவுல வேகமா நீ ஏறிக்கணும். உன் கூட நான் சுத்தறதை எங்க ஸ்கூலைச் சேர்ந்த யாரும் பார்த்துடக் கூடாது ஜாக்ரதை.." - என்றாள் பாரதி. அவள் பேச்சில் அவ்வளவு எச்சரிக்கை - அவ்வளவு பயம்!

அவனுக்கு அப்போதே வானில் ஏறிப் பறக்கிறார் போல் இருந்தது!

# 3

'சிறகில்லாமலே பறக்க
காதலித்தால் போதும்
அழுக்கேயில்லாதபடி அழகாகவும்
காதலித்தால் போதும்
கண்கள் திறந்து கனவு காண
காதலித்தால் போதும்
காரணம்
காதல் ஒரு மாயாஜாலம்!'

மதுரை சொக்கி குளத்தில் இருந்தது அந்த லேடீஸ் ஹாஸ்டல்.

வெளியே பிளாட்பாரத்தில் ஒரு இளநீர்கடை! சற்று தள்ளி பழமுதிர்ச்சோலை எனும் பெயரில் ஒரு ஜூஸ் கடை...

சோலைக்கும் அந்த கடைக்கும் சம்பந்தமேயில்லை.

ஜூஸ் கடை என்றால் இப்படித்தான் பெயர் இருக்க வேண்டும் என்று தீர்மானித்து வைத்த பெயர் போல இருந்தது. அந்த கடையை அடையாளம் கண்டு கொண்டு வந்து நின்று கொண்டான் வசந்த்.

ப்ளூ கலர் ஜீன்ஸ் பேண்ட்டும், டீ ஷர்ட்டில் காவி வண்ணமுமாய் பார்த்தால் பளிச்சென்று தெரிகிறார் போல் இருந்தான். உச்சந்தலைமேல் கூலிங்கிலாஸ் வானம் பார்த்தபடி படுத்திருந்தது.

ஜூஸ் கடை முகப்பில் இரண்டு பேர் ஸ்ட்ரா போட்டு ஜூஸை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தனர். ஏராளமான ஈக்கள் பறந்து கொண்டிருந்தன. கடைக்காரர் வசந்தை பார்த்தார்.

அவனுக்கும் ஜூஸ் குடிக்க விருப்பம் ஏற்பட்டது. ஆனால் ஈக்கூட்டம் அவன் முடிவை மாற்றி விட்டன! எனவே அவருக்கு முதுகைக் காட்டிக் கொண்டு திரும்பி நின்று கொண்டான்.

பாரதிக்காக தவிக்க ஆரம்பித்தான்.

வாழ்க்கையில் இளமை என்பதே ஒருமுறை தான் வருகிறது. அந்த இளமை பலர் வரையில் போராட்டத்திலேயே கழிந்து விடுகிறது. மேலும் பலருக்கு அது ஹாஸ்டலில் படிப்பதில் கழிந்து விடுகிறது. அபூர்வமாக சிலர்தான் காதலில் விழுந்து ஒரு அழகான பெண்ணின் நிமித்தம் தவிக்கிறார்கள்.



வசந்தும் அவர்களில் ஒருவனாக இருந்தான்.

இந்த காதலுக்கு சில கோணல் புத்தியும் உண்டு.

தன் காதலியைத் தவிர வேறு எந்த பெண்ணைப் பார்த்தாலும் ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்கி விடும். கூந்தல் எவ்வளவு நீளம், தோல் வெளுப்பா சிவப்பா? உயரம் எவ்வளவு? நடை எந்த மாதிரி..? சிரிக்கும் போது முத்து தெரிக்குமா இல்லை எச்சில் வந்து விழுமா..? இப்படி அது ஆராய்ச்சியில் இறங்கி விடும். ஒருவேளை பூலோக ரம்பையே எதிரில் வந்தாலும் தன் காதலியை விட அவள் பலமாற்று குறைவுதான் என்று எண்ண வைக்கும்.

வசந்திடமும் அந்த கிறுக்குத்தனங்கள் கும்மி கொட்ட ஆரம்பித்து விட்டன. அவன் எதிரில் ஒரு பெண் பாவாடை தாவணியில் எதிர் வரிசை பிளாட்ஃபாரத்தில் நடந்தபடி இருந்தாள். சென்னையில் காணமுடியாத காட்சி அது. ஒரு பெண் பாவாடை தாவணியை மறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது. சுடிதாரும் மிடியும், பெர்முடாஸ் ட்ரவுசரும் அந்த இடத்தைப் பிடித்து அவர்களை எல்லாம் தலைமுடியை வைத்து மட்டுமே வித்யாசம் காணும்படி செய்துவிட்டன.

எனவே வசந்த் அந்த பெண்ணை வெகுவாக ரசித்தான். பெண்களுக்கு உண்மையில் இளமையில் பாவாடை தாவணியும், முதுமையில் புடவையுமே பேரழகு என்பார்கள். அதுதான் எவ்வளவு நிஜம் என்பதுபோல அந்த பெண்ணையே பார்த்தபடி நகம் கடிக்க ஆரம்பித்தான்.

அவள் ஒரு வளைவில் திரும்பி காணாமல் போனாள். பிறகே பாரதியின் நினைவு அவனுக்கு வந்தது. அப்போதுதான் ஒரு உண்மையும் அவனுக்கு புரியத் தொடங்கியது. அவன் அழகாய் தெரியும் எல்லா பெண்களையுமே ரசிக்கத் தயாராக இருக்கிறான். பெண்களை ரசிப்பது என்றால் அதில் சைவ ரசனைக்கெல்லாம் ஏது இடம்?

அவ்வளவும் அசைவ ரசனை தான்!

பாரதிக்கு சமமாகவோ இல்லை ஒரு படி மேலாகவோ ஒரு பெண் அவனை விரும்பத் தயாரானால் அவன் பாரதியை மெல்ல கைகழுவி விடுவான் என்பது தான் நிதர்சனமோ?

இந்த கேள்வி அவனுக்குள்ளேயும் எழும்பியது.

அதன் காரணமாக ஒரு சின்ன நெருடலும் ஏற்பட்டது. ஏன் இந்த மனது அழகான பெண்களைக் காணும் பட்சத்தில் இப்படி அலை பாய்கிறது? - என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். அவன் நெருடலை அதிகமாக்குவது போல் புதிதாய் ஒரு பெண்

அவன் அருகிலேயே வந்து நின்றாள். மிக வாளிப்பாக இருந்தாள். திருத்தமாக புடவை கட்டி தலை வாரிப் பின்னியிருந்தாள். அதில் ஏராளமாய் மல்லிகைப் பூ. அவள் கையில் ஒரு பெரிய பை. அந்த பைக்குள் ஊதுபத்திக் கட்டுகள் மற்றும் சில மேல்நாட்டு சோப்புகள்.

வசந்த்தை பார்த்து வசீகரமாய் சிரித்தவள்

"சார் நல்ல குவாலிடியான ஊதுபத்தி சோப்பெல்லாம் இருக்கு.. வாங்கிக்கிறீங்களா?" - என்று ஆரம்பித்தாள்.

வசந்த் அவளால் நிறையவே பாதிப்புக்குள்ளானான். அவள் மட்டும் அழகாய் இருந்திராத பட்சத்தில் "போம்மா... போ... தொந்தரவு பண்ணாதே" என்று தான் சொல்லியிருப்பான்.

அவளது அழகு அவனைத் தடுத்து நிறுத்தியது.

"ஊதுபத்திங்களா? என்ன ஊதுபத்தி...?" - அவன் கேட்க அவள் எடுத்துக் காட்ட அங்கே வியாபாரத்தை மீறி வசந்தின் ரசனை உடைப்பெடுத்துக் கொண்டது. இறுதியில் ஒரு இருநூறு ரூபாய்க்கு அவளும் அவன் தலையில் எதை எதையோ கட்டி முடித்தாள். ஸ்ப்ரே பாட்டில் ஒன்றை விற்க முனைந்த போது துளியும் நெருடலின்றி அவன் கையைப் பிடித்து ஸ்ப்ரே செய்து அவனுக்குள் ஒருவித சிலு சிலுப்பையும் உருவாக்கினாள்.

வசந்த் அவளிடம் இருந்து அதையும் வாங்கிக் கொண்டான். அவளுக்கு நல்ல வியாபாரம்.

"சார் எங்க இருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?" - என்று நைச்சியமாக விசாரித்தாள்.

"நான்.. நான் மதுரை இல்ல சென்னை."

"சென்னையா... அப்பவே நினைச்சேன். இந்த மதுரைல இவ்வளவு ஹேண்ட்சமா யாரும் இருக்க மாட்டாங்களேன்னு.."

"நீங்களும் நல்ல அழகி தான்.."

"தேங்க்ஸ் சார்.. அழகுல என்ன சார் இருக்கு மனசு சுத்தமா இருக்கணும் அதுதான் முக்கியம்.."

- அவள் கிண்டலாக பேசினாளா இல்லை நிஜமாலுமே உணர்வு பூர்வமாக பேசினாளா என்பது தெரியவில்லை.

அவனுக்கு திணறலாக இருந்த போது ஆட்டோவில் பாரதியும் வந்து சேர்ந்தாள்.

ஆட்டோவில் இருந்தபடியே 'வசந்த்...' என்று குரல் கொடுக்கவும் அவனும் பார்த்தான். தன் கை வசம் உள்ள ஊதுபத்தி, சோப், ஸ்ப்ரேவுடன் பாரதியின் ஆட்டோவிலும் சென்று ஏறினான்.



ஆட்டோவும் ஓடத் தொடங்கியது.

"என்ன இதெல்லாம்?"

"ஊதுபத்தி, செண்ட் ஸ்ப்ரே.. இது சிலோன் லக்ஸ் சோப்.."

"மண்ணாங்கட்டி.. அவ்வளவும் டூப்ளிகேட்.."

"டூப்ளிகேட்டா.. உனக்கு எப்படி தெரியும்?"

"இதையும் தெரியும். இதை வித்தவளையும் தெரியும். எங்க ஹாஸ்டலுக்கும் அம்மணி வந்து கடை விரிச்சு பார்த்தாங்க. பொம்பளைக்கு பொம்பளை பருப்பு வேகலை. ஆனா நீ அவ வலையில விழுந்துட்டேன்னு நல்லா தெரியுது.."

- வசந்துக்கு ஒரு 15 நிமிட நேரத்தில் தான் ஒரு பெரிய முட்டாள் ஆகிவிட்டது புரிய வந்து கூச்சமாகவும் இருந்தது.

"கொஞ்சம் வாட்ட சாட்டமா ஒரு பொண்ணு வந்து வழிஞ்சா உடனே எல்லா ஆம்பளைங்களையும் போல மெல்ட்டாகற ஜாதி தானடா நீயும்?"

- அவளிடம் கோபக் கேள்விகள் பிறக்க ஆரம்பித்தன.

"இல்ல பாரதி... ஒரு பொண்ணு வேகாத வெய்யில்ல அலைஞ்சு திரியறத நினைச்சு பரிதாபப்பட்டுட்டேன்.."

"நிஜமாவா?"

"நிஜம்மா பாரதி.."

"சத்யமா?"

"இதுக்கெல்லாமா சத்யம் பண்ணச் சொல்றே?"

"இந்த பரிதாபமும் கருணையும் ஒரு கிழவிகிட்டயோ இல்ல ஒரு ஆண்கிட்டையோன்னா எனக்கு பிரச்சினை இல்லை - ஒரு வயசுப் பொண்ணுன்னு வரும் போதுதான் சந்தேகமா இருக்கு."

"ஐயோ... நான் யாரா இருந்தாலும் பரிதாபப்பட்டிருப்பேன் பாரதி.."

"பாத்துடா.. நான் உன்னையே நம்பி இருக்கற ஒருத்தி. எனக்கு துரோகம் பண்ணிடாதே."

"சேச்சே.. துரோகம் பண்றவனா இருந்தா பாக்கற வேலைக்கு லீவு போட்டுட்டு ரயிலேறி உன்னை தேடி வருவேனா பாரதி.."

"அதான்... அந்த அளவுதான் என்னையும் இன்னிக்கு லீவு போட வெச்சிருக்கு.." - என்று அவன் தோள் மேல் சாய்ந்தாள்.

அவனுக்கு அப்படியே ஆகாயத்தில் இலவம் பஞ்சாகி மிதப்பது போல இருந்தது!

## 4

'அனல் மின்சாரம், புனல் மின்சாரம்
அனலும் புனலும் உள்ள வரை தான்!
இதனினும் ஒரு மின்சாரம்
இளம்பெண் ஒருத்தியை தீண்டும்வரை.
அந்த மின்சாரம் விளக்கெரிக்கும்,
இதுவோ உயிரையே எரிக்கும்!'

தனது கம்பீரமான ஹீரோ ஹோண்டா பைக்கில் வீட்டு முகப்பை சங்கர நாராயணன் அடைந்த போது வாசலில் விளையாடிக் கொண்டிருந்தாள் அனுஷா!

பைக் சப்தம் அவள் வரையில் சங்கீதம்.

ஓடி வந்து அணைத்து கொண்டாள். அப்படியே "அப்பா அங்க பாருங்க.. யாரோ உங்கள பாக்க வந்துருக்காங்க.." என்று கை காட்டினாள்.

அவள் கை காட்டிய திசையில் அவனது தாய்மாமா பத்மநாபன்! அவனுக்கே அவரை பார்க்க ஆச்சரியமும் அதிர்வுமாக இருந்தது.

"மாமா.." - என்றான் பரவசமாய்.

"சங்கரா.."

"வாங்க மாமா.. எப்ப வந்தீங்க..?"

"நான் அப்பவே வந்துட்டேம்பா... உன் வீட்டை கண்டு பிடிக்கறதும் ஒண்ணும் கஷ்டமா இல்லை. இந்த தெருவுல உன் பேரைச் சொன்ன நொடி வீட்டை காமிச்சுட்டாங்க.."

- அவர் சொல்லும் போதே பூட்டிய கதவை திறந்து முடித்தான் சங்கர நாராயணன். புத்தகப் பையுடன் ஷர்ர்ர்..' என்று வாயால் பைக் ஓட்டியபடி வீட்டினுள் புகுந்தாள் அனுஷா.

அவரும்..!

"வாங்க மாமா... உக்காருங்க." - அவன் சோபாவை காட்டினான். அவரும் அமர்ந்தார். அமரும் முன் வீட்டை ஒரு பார்வை பார்த்தார்.

குறிப்பாய் புகைப் படத்தில் தெரியும் சங்கர நாராயணனின் காதல் மனைவி முகத்தையும் பார்த்தார். ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.



"இருங்க மாமா காபி போட்டு கொண்டு வரேன்" - என்று சங்கர நாராயணன் உள்ளே சென்றான்.

டையை மட்டும் கழற்றி டேபிள் மேல் வைத்தான்.

"அப்பா எனக்கு பூஸ்ட்.." - என்றபடியே டிவியை போட்டு அதில் போகோ சேனலில் மூழ்க ஆரம்பித்தாள் அனுஷா.

"ஷ்யூர் டார்லிங்க்.." - என்றான்.

பத்மநாபனும் உட்காரப் பிடிக்காமல் எழுந்து சமையல் கட்டுக்குள் அவனை நோக்கிச் சென்றார்.

"என்ன மாமா.. உட்காருங்க வந்துட்றேன்."

"இருக்கட்டும் சங்கரா.. ஆமா இந்த வீட்ல சமையல் எல்லாம் நீ தானா?"

"ஆமாம் மாமா... பகல்ல மட்டும் ராஜேஸ்வரின்னு ஒரு சிஸ்டர் வந்து பண்ணிக் கொடுத்துட்டு போயிடுவாங்க.."

"இது என்னப்பா கொடுமை... எதுக்கு உனக்கு இந்த கஷ்டங்களெல்லாம்..?"

"கஷ்டமா?" - ஸ்டவ்வில் வென்னீர் வைத்தபடியே அவன் திரும்பிக் கேட்டான்.

"இல்லையா பின்னே.. உன் பொண்ணு அநாதை மாதிரி வாசத்திண்ணைல உக்காந்துகிட்டிருக்கா. நீயோ வேலை முடியாம வர முடியாது.. இல்லையா?"

"விடுங்க மாமா... இது தான் என் வாழ்க்கைன்னு ஆகிப் போச்சு. போகட்டும் உங்கள நான் ஒண்ணு கேட்கலாமா?"

- சங்கர நாராயணன் அவரை தூண்டத் தொடங்கினான்.

"தெரியும்பா.. இத்தனை வருஷமா வராதவன் இப்ப மட்டும் எதுக்கு வந்துருக்கேன்னு தானே?"

"இல்ல மாமா.." - அவன் மிக வேகமாக மறுத்தான்.

"இல்லையா..?"

"ஆமாம்.. நான் என் அப்பா அம்மா எப்படி இருக்காங்கன்னு கேக்கத்தான் அப்படி ஒரு பீடிகை போட்டேன்.."

"ஓ.. நீ அவங்கள பத்தி கேட்கறியா.. உம் நல்லா இருக்காங்க சங்கரா.."

"என் மேல இன்னும் அதே கோபத்தோட தான் இருக்காங்களா?"

"ஆமாம்ப்பா.. அதெல்லாம் கொஞ்சமும் குறையல."

"நீங்களும் அவங்களோட இருந்து என்மேல கோபமா தானே

இருந்திங்க.. இப்ப என்ன மாமா திடீர் மனமாற்றம்?"

- கொதித்த வென்னீரை காபி பொடி போட்ட ஃபில்டரில் ஊற்றியபடியே அவரைப் பார்த்து அவன் கேட்கவும் அவர் முகத்திலும் ஒரு சலனம் பரவ ஆரம்பித்தது.

"சாரி மாமா... உங்களை வருத்தப்படுத்தறதுக்காக நான் இப்படி கேட்கல.."

"இல்ல சங்கரா.. நீ அப்படியே கேட்டாலும் தப்பு இல்ல. உன் காதலியோட எதிரிகள் தானே நாங்க எல்லாருமே.."

"இப்ப மாறிட்டீங்களா - அதான் என் கேள்வி.."

"மாறலேன்னா வந்துருப்பேனா?"

"சந்தோஷம் மாமா.. ஆமா நீங்க மட்டுமா வந்தீங்க கூட அத்தை, அஜந்தால்லாம் வரலை.."

- சங்கர நாராயணன் அவர்கள் இருவர் பேரைச் சொல்லவும் அவர் முகத்தில் வேகமான மாற்றங்கள்.

"என்ன மாமா அமைதியாயிட்டீங்க.. அத்தை அஜந்தால்லாம் நல்லா இருக்காங்க தானே?"

"அது-"

"என்ன மாமா?"

"அஜந்தாவுக்கு கல்யாணம் ஆனது உனக்கு தெரியும் தானே?"

"என்னது... அஜந்தாவுக்கு கல்யாணம் ஆயிடிச்சா? எப்ப மாமா.. எனக்கு தெரியாது மாமா.."

"அடக் கடவுளே... உனக்கு தெரியும்னு நாங்க நினைச்சு கிட்டிருக்கோம். திருட்டுத்தனமா உன் அத்தை உனக்கு பத்திரிகையும் அனுப்பி வைச்சேன்னு சொன்னாளே.."

"அனேகமா அது என்னோட திருச்சி அட்ரசுக்கா இருக்கும். நான் அங்க இருந்து இங்க வந்து இரண்டு வருஷம் ஆகுது மாமா... போகட்டும் அஜந்தாவுக்கு எப்ப கல்யாணம் ஆச்சு?"

"அது ஒரு ஆறு மாசமிருக்கும் சங்கர்.."

"ஓ இப்பதானா.. மாப்ளை என்ன பண்றார்?"

- சங்கர நாராயணன் உற்சாகமாகத்தான் கேட்டான். ஆனால் பத்மநாபன் கண்களில் கண்ணீர் திரண்டு வர ஆரம்பித்தது. அது சங்கர நாராயணனை அதிரச் செய்தது.

"மாமா... எதனால அழறீங்க... நான் எதாவது தப்பா கேட்டுட்டேனா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல சங்கரா... நீ மாப்ளைன்ன



உடனே அஜந்தாவை தவிக்க விட்டுட்டு போயிட்ட அவர் நினைப்பு வந்துடுச்சி.."

"எங்க மாமா போய்ட்டாரு... அஜந்தாவை பிடிக்காம எங்கையாவது போய்ட்டாரா?"

"ஐயோ சங்கரா.. அப்படி போயிருந்தா நான் இந்த உலகத்துல எந்த மூலைல இருந்தாலும் பிடிச்சு இழுத்து வந்துருப்பேனே.. இந்த உலகத்தை விட்டே போய்ட்டவரை நான் எப்படி இழுத்துகிட்டு வருவேன்?"

- மாமா பொங்கி வெடித்து விட்டார். சங்கர நாராயணனுக்கும் பகீர் என்றது. மாமாவிடம் அழுகை தொடர்ந்தது. ஹாலில் அமர்ந்திருந்த குழந்தை அனுஷாவும் அவர் அழுவதை ஒரு ஆச்சரியம் போல பார்த்தாள்.

"சாரி மாமா.. இப்படி ஒரு சோகம் அஜந்தா வாழ்க்கைல இருக்கும்னு நான் எதிர் பார்க்கல.."

"அந்த சோகம் தான் சங்கரா உன்னோட சோகத்தை எனக்கு புரிய வெச்சிச்சு. அதான் உன் அப்பா அம்மா கூட சேர்ந்துகிட்டு உன் காதலையும் கல்யாணத்தையும் எதிர்த்த என்னையும் மாத்தியிருக்கு.."

- அவர் கண்ணீரை துடைத்து விட்டுக் கொண்டார். அவன் பாலில் டிகாக்ஷன் கலந்து காபியை அவர் முன் நீட்டினான்.

அவரும் வாங்கிக் குடித்தார்.

அனுஷாவுக்கு பூஸ்ட் உற்சாகமாக குடித்தாள்.

ஹாலில் சோபாவில் எதிரெதிரில் அமர்ந்தும் கொண்டனர்.

மாமா பத்மநாபன் காபியை குடித்து முடித்தவராக

"உடையை மாத்திகிட்டு வா சங்கர்... உன்னை இந்த கோலத்துல பாத்தா நீ ஆபீஸ்ல இருக்கற மாதிரியே இருக்கு.."

"இருக்கட்டும் மாமா... அப்பா அம்மா இப்ப நல்லா இருக்காங்க தானே?"

"எப்படிப்பா நல்லா இருக்க முடியும்.. நீ இங்க கஷ்டப்படும் போது எப்படி அவங்க நல்லா இருக்க முடியும்?"

"அதான் என்னை வெட்டி விட்டுட்டாங்களே மாமா.. அப்புறம் எதுக்கு என்னை நினைச்சு வருத்தப்படணும்?"

"சங்கரா தாய் பிள்ளை உறவை யாராலயாவது வெட்டி விட முடியுமாப்பா?"

"நான் எங்க மாமா வெட்டிவிட்டேன்.. அவங்க தானே நான் நர்மதாவை கல்யாணம் பண்ணிகிட்டு வந்தப்போ எங்க பேச்ச

கேக்காத நீ எங்க பிள்ளையே இல்லைன்னு சொன்னாங்க.."

"அது ஒரு கோபத்துல சொன்னதுப்பா.. நீ செய்தது மட்டும் சரியா?"

"வேண்டாம் மாமா.. என்னை கேள்வி கேட்டு உங்க கூட நான் சண்டை போடும்படி பண்ணிடாதீங்க. ஏன்னா ரொம்ப நாளைக்கு பிறகு நீங்க வந்திருக்கீங்க.."

"நான் ரொம்ப நாள் கழிச்சு வந்துருக்கலாம். ஆனா ஒரு நல்ல முடிவோட நான் வந்துருக்கேன்.."

"அது என்ன மாமா நல்ல முடிவு?"

"இப்படியே நீ எவ்வளவு நாள் தாம்ப்பா இருப்பே?"

"இது என்ன மாமா கேள்வி.. எனக்கு என்ன குறை?"

"என்ன குறையா.. சரிதான்! பகல்ல ஆபீஸ்ல ஆபீசர், ராத்தரி வீட்ல சமையல்காரன் இது என்ன தலையெழுத்து சங்கரா?"

"மாமா நீங்க என்ன சொல்ல வர்றீங்க.."

"உனக்கென்னப்பா வயசாயிடிச்சு. நீ ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்க கூடாது..?"

"ஓ- இதுதான் உங்க கேள்வியா..? என் ஆபீஸ்ல என்னை சுத்தி இருக்கறவங்க இந்த தெருவை சேர்ந்தவங்க அவ்வளவு ஏன் - இந்த வீட்டு சமையல்காரி கூட இந்த கேள்வியை என் கிட்ட கேட்டாச்சு. உறவினர்கள்ள யாரும் கேட்கலையேன்னு ஒரு குறை இருந்தது. அதை நீங்க வந்து நீக்கிட்டீங்க.."

"இவ்வளவு பேர் கேட்டும் நீ இப்படியே எதனால இருக்கே?"

- அவர் கேட்கவும் அவன் பார்வை வீட்டிலுள்ள நர்மதாவின் புகைப்படம் நோக்கித்தான் சென்றது.

அவளோடு ஒரு நாள் பீச்சுக்கு போன போது ஏற்பட்ட சம்பவம் ஒன்றும் மனதுக்குள் அலை மோதத் தொடங்கியது!



# 5

**'உலகின் மாபெரும் ஈர்ப்பு இது!
ஒவ்வொரு உயிருமே
ஈர்க்கப்பட்டதால் தோன்றிய
உயிர்களே!
இரண்டு ஒன்றாகி பின்
மூன்றாகவே ஆகிடும் இந்த
விந்தைக்கு பெயர்தான்
காதல்!'**

அந்த திரைப்படம் ஓடி முடிந்த போது அது ஏன் முடிந்து போனது என்று இருந்தது வசந்துக்கு.

இருள் விலகி வெளிச்சம் பரவியதும் அதுவரை பாரதியை அணைத்திருந்த கைகளை விலக்கினான். அவளுக்கும் தனியொரு சுகத்தில் மிதந்து கொண்டிருந்தது போல் இருந்தது.

எல்லோரும் எழுந்து வெளியேறவும் இருவரும் எழுந்து கொண்டனர்.

அவன் கன்னத்தில் அங்கங்கே பாரதியின் உதட்டு முத்தத்தால் உருவாகியிருந்த லிப்ஸ்டிக் கறை இருந்தது. அதை வெளியே வந்து வெளிச்சத்தில் கவனித்த பாரதி மிக வேகமாக தன் துப்பட்டாவால் துடைத்தும் விட்டாள்.

அதை சிலர் கவனித்து நமுட்டுச் சிரிப்பு சிரித்தனர்.

ஒருவர் அவர்கள் காதுபடவே 'வரவர சினிமா தியேட்டரெல்லாம் லாட்ஜாவே மாற ஆரம்பிச்சிடுச்சு.' என்றார்.

பாரதிக்கு அந்த கருத்து வலியை ஏற்படுத்தியது.

அதுவரை நிலவி வந்த சந்தோஷம் அவ்வளவும் விலகிக் கொண்டு அவளது தன்மானம் தவறு செய்து விட்டதைப் போல உணரத் தொடங்கியது.

வசந்தும் கவனித்தான்.

"என்ன பாரதி... எந்த நாயோ குலைச்சதுக்கு நீ எதுக்கு கவலைப்பட்றே?"

"அதுல கொஞ்சம் உண்மையும் இருக்கே வசந்த்.."

"பைத்தியம்... எந்த உண்மையும் அதுல இல்லை. அவன்

பொறாமைல பேசறான். அவன் தலையை கவனிச்சியா? ஒரு முடி இல்லை. இவனை எந்த பொண்ணு விரும்புவா? கிட்ட போனாலே போடா பரோட்டா தலையான்னு சொல்லி கேலிதான் பண்ணுவாங்க. அவனுக்கு அந்த ஆத்திரம்.."

- வசந்த் சொன்னவிதம் நகைச்சுவையாக சிரிக்கும் விதத்தில் இருந்தது. அவளுக்கும் சிரிப்பு வந்தது. வந்த வேகத்தில் கலைந்தும் போனது.

"என்ன பாரதி- இன்னும் என்ன வருத்தம்?"

"வசந்த் இப்படியே இன்னும் எத்தனை நாளைக்கு வசந்த்?"

"ஹோட்டல்ல போய் டிபன் சாப்ட்டுகிட்டே பேசுவோமே.."

"பேசறதுக்காக தான் நான் இப்ப ஹோட்டலுக்கே வரேன் சாப்பிட்றதுக்கு இல்ல.."

"சாப்பிட்றதுக்காகதான் போறோம் - அப்படி போற இடத்துல பேசப் போறோம் இப்ப என்ன?"

- எதிரிலேயே ஹோட்டல் ஒன்று கண்ணில் பட்டது.

இருவரும் உள்ளே நுழைந்தனர். ஏசி அறை எங்கே என்று தேடிச் சென்று அங்கேயும் ஒரு இருண்ட மூலையாக பார்த்து அமர்ந்து கொண்டனர்.

இப்படி வரும் ஜோடிகளிடம் நிறைய டிப்ஸ் கிடைக்கும் என்பதாலேயே பேரர்கள் ஆவலாக வருவார்கள்.

ஒரு பேரரும் வந்தான்.

"ரெண்டு நெய் தோசை..." என்று வந்தவனை வசந்தும் அவசரமாக கட் செய்தான்.

"உம் இப்ப சொல்லு.."

"என்னத்த சொல்றது- என்னால இப்படி உங்க கூட ஊர் சுத்த முடியாது. யார் பாத்துடுவாங்களோன்னு பயந்து பயந்து சாக வேண்டியிருக்கு.."

"இதோ பார் உனக்கும் இந்த ஊர் புதுசு. எனக்கும் புதுசு.. எதுக்கு பயந்து சாகணும்?"

"இந்த ஊர்லயும் எனக்கு உறவுக்காரங்க இருக்காங்க தெரிஞ்சுக்குங்க.."

"சரி பாரதி.. எதுக்காக உனக்குள்ளே இப்படி ஒரு பயம் என்மேல உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"நம்பிக்கை இல்லாம தான் இருட்டுல முத்தம் கொடுக்க விட்டேனா?"



"நீ எங்க விட்டே.. நான்தான் இழுத்து வெச்சு கொடுத்தேன்."

"பேச்ச மாத்தாத வசந்த். சீக்கிரமா கல்யாணத்துக்கு நாள் பார்.."

"நான் இப்பவே இங்கையே தயார். ஆனா எனக்கு ஒரு அக்கா இருக்கறதும், அவங்க ஒரு போலியோ பேஷண்ட்டுங்கறதும் உனக்கு நல்லா தெரிஞ்சிருந்தும் நீ அவசரப்பட்டா எப்படி பாரதி.."

"வசந்த் இதையே எவ்வளவு நாள் சொல்வே. உன் அக்காவுக்கு தான் சீக்கிரம் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யலாம்ல?"

"செய்யாமலா இருக்கோம். தினமும்தான் பேப்பர்ல விளம்பரம் கொடுக்கறோம் - ஆனா அக்காவுக்கு ஒரு கால் போலியாவுல செயலிழந்ததை பார்த்துட்டு அப்படியே பின் வாங்கிட்றாங்க.."

"அப்ப உன் அக்கா கல்யாணம் முடிறயவரை இப்படி எல்லாம் நாம பாத்துக்க வேண்டாம் வசந்த்."

"பாரதி... காதல்ல களவொழுக்கத்துக்கு கொஞ்சம் இடமுண்டுங்கறத புரிஞ்சுக்கோ. இதை எல்லாம் காதலிக்கும் போதுதான் செய்ய முடியும்."

- அவன் கருத்தில் நல்ல அழுத்தம். அவன் சொன்ன விதத்திலும் அழுத்தம். இடையில் மூக்கை நிமிண்டியபடியே நெய் தோசையும் நுழைந்தது.

"சாப்பிடு.. உனக்கு அநாவசியமான குற்ற உணர்ச்சி. நீ ரொம்பவே அலட்டிக்கறே.."

"சத்யமா இல்ல. நான் என்ன மரக்கட்டையா? எனக்கும் உணர்ச்சிகள் இருக்கு வசந்த்."

"அப்ப இந்த சந்திப்பை ஏன் ஒரு தப்பா நினைச்சு இனி வேண்டாங்கறே?"

"சந்திப்போம் - பேசுவோம் - ஆனா சினிமால்லாம் வேண்டாம். நீ கல்யாணத்துக்கு அப்புறமா என்னை என்ன வேணா பண்ணிக்கோ.."

"ஓ- நீ ஒரு தமிழ்ப் பெண்ணுன்னு சொல்லாம சொல்றே அப்படி தானே?"

"நீ எப்படி வேணா எடுத்துக்கோ.."

"சரிங்க மேடம்.. நான் இனி லீவெல்லாம் போட்டுட்டு சென்னைல இருந்து மதுரைக்கு வரலை. போன்லயே பேசிப்போம். பை த பை என் அக்காவுக்கு கல்யாணமே ஆகாம போயிட்டா

என்ன பண்றது?"

"வசந்த்.. என்னடா இப்படி எல்லாம் பேசறே?"

"இல்ல.. உன்கிட்ட கேட்டு வெச்சுக்கறேன். ஏன்னா அதுக்கும் வாய்ப்பு இருக்கு."

"அப்படின்னாலும் நீ தானே முடிவு செய்யணும்?"

"நான் என்னத்த முடிவு பண்றது.. நீயே சொல்."

"நீ பேசறத பார்த்தா உன் அக்காவுக்கு கல்யாணம் ஆகலேன்னா உனக்கும் வேண்டாம்னு ஒரு முடிவுக்கு வருவே போல தெரியுதே.."

"அது நீ எடுக்கற முடிவைப் பொருத்தது.."

"நான் என்னடா முடிவெடுக்கறது. எனக்கு எப்பவும் ஒரே முடிவு தான். அது நம்ம கல்யாணம்."

"சரி... நான் அக்காவை எப்படியாவது தள்ளிவிட முயற்சி செய்யறேன்.."

"தள்ளி விட்றியா.. அவங்க உன் அக்கா. பிரேக்டவுன் ஆகிப் போன உன் டப்பா ஸ்கூட்டர் இல்லை. யோசிச்சு பேசு.."

"யோசிச்சு தான் பேசுறேன். சரி சரி சாப்டு.."

- மிகமிக சந்தோஷமாகவும், உல்லாசமாகவும் ஆரம்பித்த அவர்களின் சந்திப்பு கல்யாணம் என்றவுடன் முட்டிக் கொண்டதோடு அதில் மெல்லிய கசப்பும் பரவ ஆரம்பித்து விட்டது.

பாரதியும் வேகவேகமாக சாப்பிட்டாள்.

கைகெடிகாரத்தையும் பார்த்தாள்.

மணி எட்டு!

"மைகாட்... நான் ஹாஸ்டலுக்கு போகணும் லேட்டா போனா உள்ள விட மாட்டாங்க.."

"சரி கிளம்பு.."

"நீ எப்ப சென்னைக்கு கிளம்பப் போறே?"

"அப்படியே போய்கிட்டே இருக்க வேண்டியது தான்.."

"போய்கிட்டேன்னா..? எதுல போற.."

"மாட்டுத்தாவணி போய் அங்கிருந்து பஸ்ல.."

"சரி.. நான் கிளம்பறேன். நாளைக்கு சென்னைக்கு போய்ட்டு உடனே போன் பண்ணு."

"நிச்சயமா?"



- இருவரும் ஒருவாறாக பிரியும் கட்டத்துக்கு வந்தனர். தனித்தனி ஆட்டோக்களில் ஏறிக் கொண்டனர்.

இந்திய ஆட்டோக்கள் வினோதமானவை.

குறைந்த தூரத்துக்கு விமானப் பயணமளவு அழுதாக வேண்டும்.

பாரதியும் அழுது கொண்டே பணத்தை கொடுத்துவிட்டு ஹாஸ்டல் கேட்டை நெருங்கினாள். பூட்டப்பட்டிருந்தது!

அதிர்ச்சியாகவும் இருந்தது.

குரல் கொடுத்தாள். வாட்ச்மேன் அருகில் வந்தான்.

"கதவைத் திறங்க.."

"மணி இப்ப என்ன தெரியுமா?"

"எட்டு இருபது.."

"எட்டு மணிக்குள்ள வரணும்கறது ரூல் - தெரியுமா தெரியாதா?"

"சாரி.. கோவில்ல சரியான கூட்டம்.."

"சினிமா தியேட்டர்லன்னு சொல்லும்மா.."

- வாட்ச்மேன் பளிச்சென்று சொன்னபடி கேட்டைத் திறந்தான். அவளுக்கு பகீரென்றது. உள்ளே கால் வைத்தாள். "போய் வார்டனைப் பார்த்துட்டு போம்மா.." என்றான்.

அவளுக்குப் புரிந்து விட்டது.

வார்டன் ஒரு முசுடு.. ஹாஸ்டல் வார்டனாக முசுடுகள் தான் வரவேண்டும் என்பதும் என்ன சாபமோ?

"குட் ஈவினிங் மேடம்.." - குரல் கொடுத்தபடியே உள்ளே நுழைந்தாள்.

"இது ஈவினிங்காம்மா.. இப்ப என்ன டைம்?"

"எட்டு இருபது மேடம்.."

"இப்படியா லேட்டா வருவே?"

"சார்ரி மேடம்.."

"என்ன சாரி... உன்னை சினிமா தியேட்டர்ல யாரோ ஒரு பையன் கூட பார்த்ததா தகவல்.. உண்மையா?"

- வார்டனின் பிடி பலமாக இருந்தது.

பாரதியும் பொய் பேச விரும்பாமல் "யெஸ் மேடம் அவர் என் வருங்கால கணவர்" என்றாள்.

"அப்ப இன்னிக்கு காதலர்.. அப்படிதானே?"

"அ- ஆமாம்-"

"சாரிம்மா... இந்த காதல், ஊர் சுத்தறதெல்லாம் இந்த ஹாஸ்டல் லைஃபுக்கு சரிப்பட்டு வராத விஷயங்கள்."

"மேடம்- இதென்ன காலேஜ் ஹாஸ்டலா-? நான் ஒரு டீச்சர். நான் ஒண்ணும் உங்க அடிமை இல்லை-"

"நானும் அப்படி சொல்லலையே-?"

"அப்புறம் எதுக்கு மேடம் என் காதல், ஊர் சுத்தறதப் பத்தி நீங்க பேசறீங்க-?"

"அம்மாடி... இங்க எங்களுக்குன்னு சில ரூல்ஸ் இருக்கு. நாளைக்கே நீ கெட்டுப் போய் கர்பம் தரிக்கறே- அதோட இங்க வரே- இல்ல காதலன் கைவிட்டதனால இங்க எங்க ஹாஸ்டல் ரூம்ல தற்கொலை செய்துக்கறேன்னு வை. அது எங்க ஹாஸ்டலுக்கு தானே கெட்ட பெயர்?"

- வார்டன் கற்பனையில் எங்கோ போய்விட்டாள். அதைக் கேட்டு ஆடிப் போனாள் பாரதி. அதற்கு மேல் அவளிடம் வாதம் செய்யவும் அவளுக்கு தெம்பு இல்லை.

"இது ஒண்ணும் உன் வீடு இல்லம்மா- ஒரு வேளை வீடாவே இருந்தாலும் உன் அம்மா நிச்சயம் கேக்கத்தானே செய்வாங்க-"

"ஆமாம் மேடம்-"

"அப்ப நீ இந்த இடத்துக்கு தகுந்தபடி நடந்துக்கப்பார். இல்லேன்னா தயவு செய்து இடத்தை காலி பண்ணிடு."

"சரி மேடம்-"

"என்ன சரி- இனி உன் வரைல ஒரு நிமிஷ தாமதத்தை கூட நான் அனுமதிக்க மாட்டேன். அதேபோல நீ வெளிய சுத்தறது என் கவனத்துக்கு வந்தாலும் சும்மா இருக்க மாட்டேன்-"

- வார்டனின் கண்டிப்பில் தூள் பறந்தது. பாரதியும் கலங்கியவளாக தன் அறை நோக்கிச் சென்றாள். வசந்தோடு கூடி குலாவிய காதலின் உணர்ச்சிகள் அவ்வளவும் காட்டாற்று வெள்ளம் போல் ஓடி வடிந்து விட்டது போல் இருந்தது!



# 6

**'உணர்வில் உச்சம் கருணை**
**கருணையின் உச்சம் பாசம்**
**பாசத்தின் உச்சம் அன்பு**
**அன்பின் உச்சம் காதல்**
**காதலின் உச்சம் காமம்**
**காமத்தின் உச்சம் பிறப்பு!'**

பொழுது விடியவும் கண்களை கசக்கிக் கொண்டு எழுந்தார் பத்மநாபன். ஆனால் அவருக்கு முன்பாக எழுந்து விட்டிருந்தான் சங்கர நாராயணன். வீட்டு வாசலிலும் விளக்கு எரிந்தபடி இருந்தது. ஆச்சரியமும் அதிர்வுமாக எழுந்து கண்களை கசக்கியபடி பார்த்தார்.

அனுஷா கோலம் போட்டபடி இருந்தாள்! - சங்கர நாராயணன் அருகில் இருந்து சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

"அனும்மா அப்படி இல்லடா- இந்த பக்கமா லேசா இழுத்து விடு - அது போதும்-"

"எல்லாம் எனக்கு தெரியும்பா- நீங்க சும்மா இருங்க-"

- அவர்களின் கான்வர்சேஷன் அவர் கண்களில் ஈரம் பூக்கச் செய்தது. அவர்களும் மாமா வந்து நிற்பதை பார்த்தனர்.

"அடடே மாமா எழுந்துட்டீங்களா?"

"என்னப்பா இது... எப்பவும் நான்தான் சீக்கிரம் எழுந்திருக்கறவன்னா எனக்கு மேல இருக்கியே நீ-"

"இது எங்களோட ரெகுலர். நான் போய் இப்ப பால் வாங்கிட்டு வந்து காபி போடுவேன். அனுஷா ஹோம் ஒர்க்கை எல்லாம் பண்ணி முடிச்சிடுவா. எட்டு மணிக்கெல்லாம் சமையக்காரம்மாவும் வந்துடுவாங்க-"

- என்றவாறே இருவரும் உள்ளே வந்தனர்.

மாமா பின்னாலேயே வந்தார். அவருக்கு தானும் எதாவது செய்ய வேண்டும் போல் இருந்தது. ஆனால் என்ன செய்வது என்று தான் தெரியவில்லை.

சங்கர நாராயணன் ஒரு சட்டையை மாட்டிக் கொண்டு வயர் கூடையோடு வந்தான்.

"மாமா பால் பூத் வரை போய்ட்டு வந்துட்றேன்-"

"சங்கரா நானும் கூடவரேன்பா-"

"வாங்க.. என்ன இப்போ?"

- இருவரும் தெருவில் இறங்கிட அனுஷா அழகாய் கதவை சாற்றிக் கொண்டாள்.

தெருவில் பெரிதாய் இருள் பிரிந்திருக்கவில்லை.

காலைப்பனி சன்னமாய் பெய்தபடி இருந்தது.

சில வீட்டு வாசல்களில் கோலங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. பேப்பர் போடும் பையன்களின் சைக்கிள்கள் அவ்வப்போது வேகமாய் கடந்து போயின.

காலை நேரமே மிக இனிய நேரம் தான்!

அதில் காலார நடப்பது ஒரு தனி சுகம்.

நன்றாக உறங்கி எழுந்துவிட்ட நிலையில் கையை வீசிக் கொண்டு நடக்கும் போது உடம்பின் உள் உறுப்புக்களுக்கெல்லாம் புதிதாய் சக்தி ஊற்றெடுப்பது போல இருக்கும். சங்கர நாராயணனும் வேகமாக கை வீசித்தான் நடந்தான். மாமாவால் அவன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. ஆனால் மனதுக்குள் அவன் மிக உயர்ந்த ஒரு இடத்துக்கு அவர் வரையில் போய்விட்டிருந்தான்.

அந்த உணர்வின் நெகிழ்வு குறையாதபடி அந்த காலை வேளையில் அவனிடம் பேச்செடுத்தார்.

"சங்கரா.."

"சொல்லுங்க மாமா.."

"இந்த காலை நேரம் ரொம்ப நல்லா இருக்குல்ல..?"

"அதானே மாமா காலை நேரத்துக்கே உள்ள சக்தி."

"இப்ப சிந்தனையும் பேச்சும் கூட தெளிவா இருக்கும்...: ஆமாம் தானே?"

"மாமா நீங்க எங்க வரப்போறீங்கன்னு எனக்கு தெரிஞ்சு போச்சு.."

"அப்படியா.. எங்க சொல்லு பார்ப்போம்."

"திரும்பவும் என் கல்யாணம் பத்தி பேசப் போறீங்க... சரிதானே?"

"ஆமாம்ப்பா.. உன்னை இப்படி எல்லாம் பாக்கும் போது மனசுக்கு எவ்வளவு வருத்தமா இருக்கு தெரியுமா?"

"என்ன மாமா... நான் என்ன கல்லா உடைச்சுகிட்டு இருக்கேன். என்னை பார்த்து வருத்தப்பட்றதுக்கு..?"

"அது கூட உன் முன்னால ஒண்ணுமில்லப்பா. நீ எல்லார் மனசையுமே உடை உடைன்னு உடைச்சுகிட்டிருக்கே.."



"நானா?" - தெருவென்றும் பாராமல் நின்று அவரை ஊன்றிப் பார்த்து கேட்டான்.

"என்னப்பா நானான்னு ஒரு மாதிரி குரல்ல கேட்கறே.. நீயே தான்.."

"இல்ல மாமா... எனக்கு அப்படி எல்லாம் நடந்துக்க தெரியாது மாமா.."

"தெரியாம தான் ராத்திரி நான் கேட்ட கேள்விக்கு பதிலே சொல்லாம வேற பேச்ச பேசினியா?"

"நான் பதில் சொல்ல முடியாம வேற பேச்சு பேசல.. பதில் சொல்ல வேண்டாம்னுதான் பேசலை.."

"ஏம்ப்பா அப்படி?"

"அது அப்படி தான் மாமா... எனக்கும் என் மனைவி ஜெயந்திக்குமான பந்தம் முடிஞ்சு போனதாவே நான் நினைக்கல. அவளால உடம்போட என் கூட இருக்க முடியல அவ்வளவு தான்னு நான் நினைக்கறேன்."

"இது பொண்டாட்டிய இழந்த எல்லா ஆம்பளைகளும் பாட்ற பல்லவி சங்கர நாராயணா.."

"பல்லவியோ சரணமோ என் வரைல அதுதான் உண்மை.. உங்களுக்கு தெரியாது மாமா என் நர்மதா என் மேல எவ்வளவு காதலும் பாசமும் வெச்சிருந்தா தெரியுமா?"

- அவன் கேட்கும் போதே குரல் கம்மியது... கண்களில் கண்ணீர் பீறிடத் தொடங்கி விட்டது!

"சங்கரா.. நான் உன்னை அழ வைக்கறதுக்காக வரலைப்பா உண்மைல நான் வந்த நோக்கமே வேற.."

"தெரியும் மாமா அது என்னன்னு..?"

"என்னப்பா தெரியும் உனக்கு - உனக்கு தெரிஞ்சதை தான் கொஞ்சம் சொல்லேன்.."

"உங்க மகள் அஜந்தா கணவனை இழந்துட்டு நிக்கறா நானோ என் மனைவி ஜெயந்தியை இழந்துட்டு நிக்கறேன். அல்ஜிப்ரா கணக்குல மைனஸ் இண்ட்டு மைனஸ் ப்ளஸ்னு ஒரு கணக்கு உண்டு, அந்த மாதிரி இரண்டு மைனஸ்களான நாங்க ஏன் ஒண்ணு சேர்ந்து வாழக் கூடாதுன்னு நீங்க நினைக்கறீங்க - சரி தானே?"

- சங்கர நாராயணன் கேட்கவும் பொலபொலவென்று பொழுது விடியவும் சரியாக இருந்தது.

"சங்கரா..." - என்று தொண்டை கமர அவன் கையை பிடித்தார். திக்கித் திணறவும் தொடங்கினார்.

"சரிதானே மாமா..?"

"ஆமாம்ப்பா… நான் அந்த எண்ணத்தோட தான் உன்னை பார்க்கவே வந்தேன். ஒரு தகப்பனா நான் என் பொண்ணை வாழ வெச்சு பாக்க நினைக்கறதுல ஒண்ணும் தப்பு இல்லையே?"

"நிச்சயமா இல்ல மாமா… ஆனா என்னை மன்னிச்சிடுங்க உங்க விருப்பத்தை என்னால பூர்த்தி செய்ய முடியாது. இந்த முடியாத விஷயத்தை எதுக்கு பேசணும்னு தான் நான் ராத்திரி உங்களுக்கு பதில் சொல்லல…"

"சங்கரா… ஒரு விதவைப் பெண்ணுக்கு மறுவாழ்வு தரச் சொல்லி மட்டும் நான் இப்ப பேசலை. உன் வாழ்க்கையையும் இதை சாக்கா வெச்சு சரிபண்ணிக்கப்பா. அஜந்தா உன் மகளுக்கு நல்ல தாயா இருப்பாப்பா…"

- அவர் விட்டால் வாய்விட்டு அழுது விடுவார் போல இருந்தது. ஆனாலும் அவன் துளியும் அதற்காக கலங்காமல் அவன் முன்பே எண்ணிப் பார்க்க ஆசைப்பட்ட நர்மதாவுடனான கடற்கரைச் சம்பவத்துக்குள் நினைவுகளில் மூழ்கத் தொடங்கினான். எந்திரமாய் கைகள் பால் பாக்கெட்டுகளை வாங்கிக் கொண்டன. கால்களும் வீடு நோக்கி நடக்கத் தொடங்கின. மாமாவும் ஒரு பிரக்ஞையின்றி அவனோடு நடந்தார்! அவனுக்குள்ளோ நர்மதா தொடர்பான எண்ணங்கள்.

கடற்கரையில் எப்போதும் போல நல்ல கூட்டம். கட்டு மர நிழல்கள் தானே காதலர்கள் ஒதுங்கும் இடங்கள். நர்மதாவுக்காக வந்து காத்திருந்தான் சங்கர நாராயணன். கண்ணுக்கெட்டிய தூரம் வரை அவள் வருவது தெரியவில்லை. அலுப்பாய் இருந்தது. கடற்காற்றிடமே அன்று பெரிய வேகமில்லை. ஏதோ பெயருக்கு வீசியபடி இருந்தது. மண் துகள்களில் பகல் பொழுதின் வெப்பம் மிச்சம் இருந்து அமர்ந்திருந்த நிலையில் பேண்ட்டுத் துணியை மீறிக் கொண்டு தொடை பாகத்தில் சூடானது ஊடுருவியது. அதைத் தவிர்ப்பதற்காக காலை உயர்த்தி கூமாச்சி போல் வைத்து கையிரண்டாலும் கட்டிக் கொண்டு தலையையும் அதன் மேல் வைத்துக் கொண்டான்.

நேராக நீண்ட கடல்வெளியும் ஓரமாய் அலைகளின் குதியாட்டமும் கண்ணில் பட்டது. உலகில் பெரியது எது என்று கேட்கிறவர்களுக்கு கடல்தான் என்று பட்டென்று கூறி விடலாம். இதைவிட வேறு எது பெரியது… பூமியிலேயே மூன்றில் இரு பங்கு நீர்தானே…? அந்த நீர்வெளியில் கால் பதித்து நிற்கும் போது பெரியதோடு தொடர்பு ஏற்பட்டு விடுவதால் நிற்பவர்களும் பெரியவர்களே… ஒரு மனிதன் உண்மையில் பெரியவனாக இது



தான் சரியான வழி - சுலபமான வழியும் கூட… இதை விட்டுவிட்டு பணம் பட்டம் பதவி என்று அலைகிறார்களே…?

சங்கர நாராயணன் மனதுக்குள் கடலானது இப்படித்தான் சிந்திக்க வைத்துக் கொண்டிருந்தது. இப்படியும் சிந்திக்க முடியும் போலவும் இருந்தது. அதேசமயம் இந்த மாதிரி எந்த ஒரு எண்ணமும் இல்லாமல் ஒரு ஜோடி மிக அழகாக தப்பு செய்து கொண்டிருந்தது. ஜென்மம் கண்டிருப்பதே கட்டித் தழுவவும் முத்தமிட்டுக் கொள்ளவும் தான் என்பது போல் இருந்தது. கிட்டத்தட்ட சங்கர நாராயணன் கடலைப் பார்த்தபடி அமர்ந்திருக்கும் அதே திசையில் தான் அந்த ஜோடி உல்லாசித்தபடி இருந்தது. யாராவது பார்த்தால் சங்கர நாராயணனும் அந்த காட்சியைத் தான் பார்த்தபடி இருக்கிறான் என்றே நினைப்பார்கள்.

அப்படித்தான் அங்கு அப்போது வந்து சேர்ந்த நர்மதாவும் நினைத்தாள். அவளுக்கு அறுவறுப்பாக இருந்தது. வலது காலால் மணலை உதைத்தவளாக "சங்கர்…" என்று சற்று அதிர்வான குரலில் அவனை அழைத்தாள்.

அவனும் நிமிர்ந்தான்.

"நர்மதா…"

"என்ன நர்மதா… அந்த கண்றாவியை என்ன லுக் விட்டுகிட்டிருக்கீங்க… இவ்வளவு சீப் டேஸ்ட்டா உங்களுக்கு…?"

- அவள் கேட்ட பிறகு தான் பார்க்கவே செய்தான். பார்த்த வேகத்தில் கண்களையும் மூடிக் கொண்டான்.

"இதெல்லாம் சும்மா நடிப்பு… முதல்ல பாத்துட வேண்டியது - அப்புறம் நான் இப்படி கேட்டதுக்காக கண்களை மூடிக்கற மாதிரி நடிக்க வேண்டியது…"

- அவளிடம் படபடவென்று வெடிப்பு.

"நர்மதா சத்யமா சொல்றேன் - நான் சமுத்திரத்தை தான் பார்த்துகிட்டு இருந்தேன். அந்த கண்றாவியை எல்லாம் நான் பாக்கவே இல்லை என்னை நம்பு…"

"சரி முதல்ல இந்த இடத்தை விட்டு கிளம்புங்க…"

- அவள் அவனை அழைத்தபடி வேறு பக்கமாய் மிக வேகமாக நடக்கத் தொடங்கினாள். அவனும் 'இரு நர்மதா… உனக்காக நான் எவ்வளவு நேரமா காத்துகிட்டு இருந்தேன் தெரியுமா… ஆமாம் ஏன் லேட்டு…' - என்றபடியே அவளை பின் தொடர்ந்தான். காத்திருந்தது ஒரு கட்டுமர மறைவிடம்.

அதில் அமர்ந்து கொண்டவள் முகத்தில் கோபம் அப்பட்டமாக தெரிந்தது.

"நர்மதாம்மா…"

"ஒண்ணும் பேசாதீங்க.."

"ஐயோடா... காதல்ல இதெல்லாம் ரொம்ப சகஜமான விஷயம்மா.."

"அவங்களுக்கு வக்காலத்தா..?"

"நோநோ.. அது காதல் ஜோடிகளே கிடையாது. தள்ளிகிட்டு வந்த கேசுங்க அவங்க.."

"அது எப்படி உங்களுக்கு அவங்களை கவனிக்காம தெரியும்?"

"நான் தான் கவனிச்சேனே.."

"அப்ப ஏன் கடலை பாத்துகிட்டிருந்தேன்னு பொய் சொன்னீங்க.."

"கடவுளே.. நீ கத்திய பிறகுதான் பார்த்தேன். அதை தான் கவனிச்சதா சொன்னேன்."

"நல்லா சமாளியுங்க.."

"இருந்தாலும் நீ இவ்வளவு சென்சிடிவால்லாம் இருக்க கூடாது நர்மதா."

"இப்படி இருக்கறதுக்கு பேர் சென்சிடிவ்வா?"

"இல்லையா பின்னே.. நாளைக்கு கல்யாணத்துக்கு பின்னால உன்னை பாக்கணும்னா கூட பாஸ்போர்ட் விசால்லாம் வாங்கிட்டு வரணும்னு சொல்வே போல இருக்கே..?"

"ச்சீ...!" - அவளிடம் ஒரு மாற்றம் ஏற்பட்டு வெட்கம் வெளிப்பட்டது.

அவனும் நெருக்கமாய் அமர்ந்து கொண்டான்.

"இங்க எவ்வளவு நேரமா நான் தேவுடு காத்துகிட்டு இருக்கேன் தெரியுமா?"

"நான் வேணும்னுதான் லேட்டா வந்தேன்.."

"அப்படியா சங்கதி - காக்க வெச்சு வேடிக்கை பாக்க ஆரம்பிச்சிட்டியா நீ"

"வேடிக்கை பார்க்கலை.. பரிசோதனை செய்தேன்."

"பரிசோதனையா?"

"ஆமாம்... எனக்காக காத்திருப்பீங்களா - இல்ல காத்திருந்ததுக்காக எரிஞ்சு விழுவீங்களா - அதுவுமில்லை இப்படி சீன் பாத்துகிட்டு இருப்பீங்களான்னு எனக்குள்ள எவ்வளவு கேள்விகள் தெரியுமா?"

- அவள் தன் மை விழிகள் சுழல கேட்ட விதமே அலாதியாக இருந்தது.

"நர்மதா.. இப்படி எல்லாம் யார் நடந்துக்குவாங்க தெரியுமா!"



"யாரு?"

"கொஞ்சமும் நம்பிக்கை இல்லாதவங்க - சந்தேகப்பிராணிங்க சாடிஸ்டுங்க. இவங்கதான் இப்படி எல்லாம் நடந்துக்குவாங்க இதுல நீ எந்த ரகம்னு தெரியல.."

- அவள் அடுத்த நொடியே அவனை அம்பு குத்துவது போல குத்தல் பார்வை பார்த்தாள்.

"என்ன பாக்கறே.. நான் ஒண்ணும் தப்பால்லாம் சொல்லல. உள்ளதைத் தான் சொன்னேன்.."

"இல்ல சங்கர்.. நாலாவது கேட்டகிரி ஒண்ணும் இருக்கு அதை நீங்க விட்டுட்டீங்க.."

"நாலாவது கேட்டகிரியா.. அது என்ன?"

"தன் காதலனைத் தவிர இந்த உலகத்துல வேற எதுவுமே பெருசு இல்லன்னு நினைக்கற ஒருத்தியும் இப்படித்தான் நடந்துக்குவா.."

"நர்மதா.."

"ஆமாம் சங்கர்... சாதாரண இந்த காத்திருத்தலுக்கே பொறுமை இல்லாத ஒரு காதலனா சாதி மதம் குடும்பம் சமுதாயம் இதை எல்லாம் புறம் தள்ளிட்டு ஒரு பெண்ணை கை பிடிப்பான்?"

"ஓ.. உன் சிந்தனை இப்படிப் போகுதா?"

"வேற எப்படி சங்கர் போகணும்?"

"இது ஒரு சின்ன விஷயம் நர்மதா.. இதுக்கும் நீ சொன்ன மற்ற எந்த விஷயங்களுக்கும் சம்மந்தம் இருக்கறதா நான் நினைக்கல.."

"இல்ல சங்கர்.. நான் உறுதியா நினைக்கறேன்."

"சரி.. இதை வெச்சு நாம மோதிக்க வேண்டாம். நீ அப்படியே நினை நான் இப்படி நினைச்சுட்டு போறேன்.."

"பாத்தீங்களா.. இந்த சின்ன விஷயத்துல கூட நம்மகிட்ட கருத்து ஒற்றுமை இல்லாதத.."

"என்ன நர்மதா.. எதுக்காக இன்னிக்கு காண்ட்ரவர்ஸியாவே பேசிகிட்டு போறே.."

"பயமா இருக்கு சங்கர்.. ரொம்ப பயமா இருக்கு."

"என்ன பயம்?"

"ஆமா நமக்கு கல்யாணம் ஆகி நாம நல்லா இருப்போமா?"

"திடீர்னு ஏன் உனக்கு இந்த சந்தேகம்.."

"இல்ல... என் வீட்ல என்னை கொன்னு போட்டாலும் போடுவாங்க நிச்சயம் நம்ம கல்யாணத்துக்கு சம்மதிக்க மாட்டாங்க. கிட்ட தட்ட உங்க வீட்லயும் அதுதான் நிலை."

"இது தெரிஞ்ச விஷயம் தானே நர்மதா.."

"இதுக்குள்ள இன்னொரு சிக்கலும் இருக்கு சங்கர்.."

"என்ன நர்மதா புதுசுபுதுசா எதையோ சொல்றே?"

"புதுசாதானே எல்லாம் முளைக்குது.."

"நீ பீடிகை போடாம விஷயத்தை சொல்.."

"சங்கர் என் அண்ணன் உங்களை கொல்றதுக்கு அடியாட்களை ஏவிவிடப் போறான்னு கேள்விப்பட்டேன்."

"வரட்டும். நான் சந்திக்கறேன். ஆனா பயந்து போய் உன்னை விட்டு மட்டும் விலகிட மாட்டேன்."

"அது எனக்கும் தெரியும்... உங்க உயிருக்கு எதாவது ஆயிட்டா.."

"என்ன நர்மதா இப்போ.. நீயும் தற்கொலை பண்ணிகிட்டு என்னை தேடி வந்துடு.."

"சங்கர்.." - அவள் மிகுந்த உணர்ச்சியோடு அப்படியே அவன் மடிமேல் விழுந்து அழத் தொடங்கினாள்.

"என்ன நர்மதா... நான் இப்படி சொல்வேன்னு நீ எதிர்பார்க்கலையா?"

"ஆமாம் சங்கர் - ஆனா இந்த பதில் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. போகட்டும் இதே விஷயம் உல்டாவா எனக்கு நடந்து நான் முதல்ல செத்துட்டா.."

"இது என்ன கேள்வி - நான் உன்னை தேடிகிட்டு வந்துடுவேன்."

"நிஜமா..?"

"என்ன நிஜமா.. சத்யமாவே சொல்றேன். எது மேல சத்யம் பண்ணணும் - யார் மேல சத்யம் பண்ணணும்."

"அப்ப இன்னொரு கல்யாணமெல்லாம் பண்ணிக்க மாட்டீங்க.."

"இந்த ஜென்மத்துல ஒரு கல்யாணம் தான். அது உன் கூட மட்டும் தான்.."

"இதெல்லாம் சினிமால தான் சங்கர் சாத்யம்.. நிஜத்துல நான் இந்த மாதிரி ஒருத்தரை கூட பார்த்ததில்ல.."

"நர்மதா நீ ரொம்பவே பயப்பட்றே.. என்னை நீ நேசிக்கறதும் நிறைய. எல்லாம் சேர்ந்துதான் உன்னை இப்படி எல்லாம் பேச வைக்குது.."

"ஆமாம் சங்கர்... எனக்கென்னவோ நாம நல்லபடியா குடும்பம் நடத்துவோம்னே தோண மாட்டேங்குது. ஏன்னா என் குடும்பம் அப்படி.."

"அது அநாவசியமான பயம் நர்மதா. இது ஒண்ணும் ஜாதீய



காலம் இல்ல. ஜாதிகள் கொஞ்சம் கொஞ்சமா உடைஞ்சு சிதறிகிட்டிருக்கற காலம். நமக்கு கல்யாணமாகி ஒரு குழந்தையும் பிறந்திட்டா எல்லாம் மாறிடும் நர்மதா. உன் வீடு, என் வீடு இரண்டும் சேர்ந்துடும்.."

"அப்படி நடந்துட்டா சந்தோஷம் தான்.. ஆனா எனக்கு நம்பிக்கை இல்லை சங்கர்.."

"சரி என்ன பண்ணலாம்னு தான் நீயே சொல்லேன்.."

மிகுந்த கோபத்துக்கு சங்கர நாராயணனும் மாறத் தொடங்கினான்.

"ஏன் சங்கர் கத்தறீங்க..?"

"பின்ன.. நாம காதலிக்க வந்த இடத்துல கோர்ட் மாதிரி விவாதம் பண்ணிகிட்டிருக்கறது கொஞ்சமும் பிடிக்கல எனக்கு.."

"சாரி சங்கர்.. நான் பேசல.. பேசலப்பா.. பேசல.."

"நர்மதா ஏன் இப்படி அப்படியும் இப்படியுமா அல்லாட்றே. வாழணும்னு விதி இருந்தா வாழ்வோம். இல்ல சாவோம். அதான் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு நான் முடிவு பண்ணி தெளிவாவும் சொல்லிட்டேனே.."

"ஆமால்ல.."

"இனியும் நான் வார்த்தைல சொல்லிகிட்டிருக்க விரும்பல. இதோ தெரியுதே இந்த வானம் இது சாட்சியாவும், அதோ இருக்கே அந்த கடல் சாட்சியாவும், வீசற காத்து, வானத்து சூரியன், அப்புறம் இந்த மணல் வெளிங்கற பஞ்ச பூதம் சாட்சியா உன் மேல சத்தியம் செய்து சொல்றேன். இந்த ஜென்மத்துல நீ தான் என் மனைவி. உன் கூட வாழ முடியலேன்னா செத்து வேணா போவோன். இன்னொரு பெண் இன்னொரு வாழ்க்கைன்னு மட்டும் நான் மாறமாட்டேன். இது சத்தியம்.. இது சத்தியம்.. இது சத்தியம்... இது சத்தியம்... இது சத்தியம்.." - என்று ஐந்து முறை சத்தியம் செய்து முடித்தான்.

அவளும் கேட்டாள்.

"ஆமாம் எதுக்கு அஞ்சு தடவை பண்ணீங்க?"

"பஞ்சபூத சாட்சியான்னு சொல்லிட்டு ஒரு தடவை மட்டும் சத்தியம் பண்ணா எப்படி? அதான் அஞ்சு பூதத்துக்கும் சேர்த்து அஞ்சு தடவை செய்தேன்.."

- அவள் அடுத்த நொடியே அவனை அது ஒரு கடற்கரை என்றும் பாராமல் கட்டிக் கொண்டாள்.

## 7

'இது மதங்களைக் குடையும்,
ஜாதிகளை உடைக்கும்...
பணம் காசை எதிர்க்கும்...
பட்டினியும் கிடக்கும்...
பற்றியும் எரியும்!
காதல் ஒரு சர்வாயுதம்!'

வீட்டுக்குள் நுழைந்த ராஜேஸ்வரிக்கு பத்மநாப மாமாவை பார்க்கவும் ஆச்சரியமாக இருந்தது. அவரும் அவளைப் பார்த்தார். அப்படியே அவனையும் பார்த்தார். பின் எதுவும் பேசாமல் சட்டையை மாட்டிக் கொண்டு கொண்டு வந்த பேக்கையும் எடுத்துக் கொண்டார்.

அவனும் புரிந்து கொண்டு கேட்டான்.

"ஊருக்கு கிளம்பிட்டீங்களா மாமா.."

"ஆமாம்.. அதான் நான் வந்த காரியம் நடக்கலியே அப்புறம் எனக்கு என்ன வேலை?"

"எப்பவும் எதையும் எதிர்பார்த்து வந்தாலே இப்படித்தான் மாமா.."

"எதிர்பார்ப்பே இல்லாம வாழ நான் ஒண்ணும் சாமியாரில்ல சங்கர்.."

"சரி மாமா நீங்க புறப்படுங்க.. அஜந்தாவுக்கு நிச்சயம் நல்ல மாப்ளை கிடைப்பான்.."

"அதை நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்ப்பா. எனக்குத் தெரியும்.."

- கோபமாக சொல்லிவிட்டு விறுவிறுவென்று வெளியேறியும் விட்டார். ராஜேஸ்வரிக்கும் அது சற்று ஆச்சரியமாகவும் குழப்பமாகவும் இருந்தது.

"ஆமா அவர் யாருன்னே சொல்லலியே தம்பி.."

"என் தாய் மாமாக்கா.."

"ஓ... உங்க குடும்பத்துல இருந்து சமாதானமாகி வர ஆரம்பிச்சிட்டாங்களா ரொம்ப சந்தோஷம். ஆமா ஏன் ஒரு மாதிரி கோபமா பேசிட்டு போறாரு.. அது யார் அஜந்தா..?"

"அவர் பொண்ணு.. நான் கல்யாணம் பண்ணிக்கணும்னு



கேட்டு வந்தார். முடியாதுன்னு சொன்னதால கோவிச்சுகிட்டு திரும்பி போறார்.."

"அடடா.. அடடா.. முந்தியே தெரியமா போயிடிச்சே. தம்பி - இப்படியா தேடி வந்த தேவதையை உதறிவிடுவீங்க."

"தேவதையோ இல்ல மகாலட்சுமியோ.. என் மனசுல இடம் கிடையாது. நீங்களும் இதை தெரிஞ்சுகிட்டா நல்லதுன்னு தான் இதை உங்க கிட்டயும் சொன்னேன். நீங்க வந்த வேலையை பார்க்கத் தொடங்குங்க. நானும் ஆபீசுக்கு கிளம்பறேன். அனும்மா நீயும் ரெடியாகு அப்பா ஸ்கூல்ல விட்டுட்டு போய்கிட்டே இருக்கேன்.."

- என்று துரிதமானான். அனுஷாவும் பாத்ரூம் நோக்கி ஓடினாள். ஓடும் முன் "அத்தை நீங்கதான் இன்னிக்கு தலைசீவி விட்றீங்க.. ரெட்டை ஜடை.." என்று இருவிரல்களை காட்டிவிட்டு ஓடினாள். ராஜேஸ்வரி அவனைத்தான் பதிலுக்கு வெறித்துப் பார்த்தாள். அவனோ அவள் பார்ப்பதை எல்லாம் லட்சியம் செய்யாமல் தனது லேப் டாப்பை திறந்து கொண்டு அப்போதே மெயில் பார்க்கத் தொடங்கி விட்டான்!

ஹாஸ்டலை விட்டு பாரதி புறப்பட்ட போது மணி சரியாக எட்டு முப்பது! கேட்டை தாண்டும் போது வாட்ச்மேன் "டயத்துக்கு வந்துருங்கம்மா..." என்று அவளுக்கு எரிச்சல் மூட்டினான். அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டே தான் நடந்தாள். மனது ரணமாக இருந்தது. பாரதி எப்பொழுதும் எதையும் சுதந்திரமாக உணர்பவள். அந்த உணர்ச்சி தான் அவளை சுயமாக எம்.ஏ.பி.டி வரை படிக்க வைத்து பள்ளிக்கூட வேலை தேடிக் கொள்ளவும் தூண்டியது. தைரியமாக மதுரைக்கு வந்து வேலை பார்க்கவும் வைத்திருந்தது. சொந்த ஊர் ராமநாதபுரம் பக்கமாய் ஒரு கிராமம். சென்னையில் கல்லூரியில் படித்த போது தான் வசந்த் பழக்கமானான். துரத்தித்துரத்தி காதலித்து ஒரு வழியாக அவளையும் வீழ்த்தி விட்டான். இனி ஒரு நல்ல வாழ்க்கை வாழ வேண்டியது தான் பாக்கி என்றிருந்த போது ஹாஸ்டலில் சட்ட திட்டம் என்னும் விஷயம் அவளை கட்டுப்படுத்தியதோடு வார்டனை மட்டமாகவும் பார்க்க வைத்ததை கடைசிவரை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.

ஒரு இளம்பெண் காதலிக்கிறாள் என்றாலே அவள் மயங்கி விட்டாள் மதிகெட்டு விட்டது, கெட்டுப் போக போகிறாள் என்று கருதுபவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள்.

உண்மையான சுதந்திரத்தோடு மனதுக்கு பிடித்தவனோடு வாழ துணிச்சலாக தயாராகி விட்டாள் என்று நல்ல விதமாகவே

யாரும் நினைக்க மாட்டேன் என்கிறார்களே!

வெளியில் வந்து டவுன் பஸ்சுக்காக காத்திருக்கும் போதும் பாரதிக்குள் மனது குமுறிக் கொண்டே தான் இருந்தது. இதே ஊரில் இதே ஹாஸ்டலுக்கு எதிரிலோ இல்லை பக்கத்திலோ வசந்தோடு ஒரு நல்ல குடும்ப வாழ்க்கை வாழ்ந்து காட்டிவிட்டு மறு வேலை பார்க்க வேண்டும் என்றெல்லாம் அவளுக்குள் எண்ணங்கள் பொங்கி எழுந்தபடி இருந்தன. பஸ் ஸ்டாப்பில் ஓரளவு கூட்டம். ஒரு விடலை அவளை பக்கவாட்டில் ரசித்தபடி இருந்தான். மேல் சட்டை பட்டனை திறந்துவிட்டுக் கொண்டு கை பேசியோடு இருந்தவன் அரைகுறை இங்கிலீஷில் யார் யாரிடமோ பேசியபடி இருந்தான். சில நாட்களாகவே அவன் இதே வேலையாகத்தான் இருக்கிறான்.

இந்த நாட்டின் எல்லா பஸ் ஸ்டாப்புகளிலும் ஒரு இளம் பெண்ணை ஒருவன் கண்ணாலேயே காமுறுவதும், அதை காதல் என்று கருதிக் கொள்வதும் நடந்தபடிதான் இருக்கிறது. பெண்கள் இதை எல்லாம் கடந்துதான் வாழ்வில் நிலைபெற வேண்டியுள்ளது. கழுத்தில் தாலி என்று ஒன்று இருக்கும் போது இதில் சரிபாதி பிரச்சினை குறைகிறது. அப்போது கூட பாதிதான் குறைகிறது.

வீட்டை விட்டே வெளியே வராமல் வாழ முடிந்தால் மட்டுமே இந்த மாதிரி காமக் கழுகுகளிடம் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

இந்த உண்மைகளை எல்லாம் நினைக்கும் போதே பாரதிக்கு கசப்பாக இருந்தது. பஸ்சும் வருவதாகத் தெரியவில்லை. சட்டென்று ஒரு முடிவு செய்தாள். அவனை நோக்கிச் சென்றாள். உற்றுப் பார்க்கத் தொடங்கினாள். அவனிடம் தடுமாற்றம் ஆரம்பமானது.

"என்னண்ணே லவ்ஸா?" - அவள் ஆரம்பமே அசத்தலாக இருந்தது. அதிரடியும் தெரிந்தது. அவன் அதைக் கேட்டு பதில் கூற முடியாதபடி திண்டாடத் தொடங்கினான்.

"அண்ணே... நான் ஏற்கனவே ஒருத்தரை காதலிச்சுகிட்டு இருக்கேன். அவர் பேர் வசந்த். சென்னைல ஒரு ஐடி கம்பெனில நல்ல வேலைல இருக்கார். கிட்டதட்ட மூணு நாலு வருஷ காதல்! என் சொந்த ஊர் இங்க ராமநாதபுரம் பக்கம்... காலேஜ்ல படிக்க ஆசைப்பட்டேன். கவுன்சிலிங்குல சென்னைல தான் இடம் கிடைச்சது. அதனால் அங்க போய் படிச்சேன். சென்னைக்கு முன்னால மதுரை பஸ் ஸ்டாப்பெல்லாம் பச்சாதான். கிட்டதட்ட மூணு வருஷம் சென்னை பஸ் ஸ்டாப்பையே பாத்துட்டு தான் இங்க வந்துருக்கேன். அங்க தான் என் காதலும் உருவாச்சு. இப்ப அது கல்யாணத்தை நோக்கி போய்கிட்டும் இருக்கு-

இது தான் என் காதல் பயோ டேட்டா.



இதுக்கு மேலயும் லுக்கு விட்டுகிட்டு செல்போன்ல கிராமர் மிஸ்டேக்கோட இங்கிலீஷ்லாம் பேசமாட்டீங்கன்னு நம்பறேன்..."

- சொல்ல வேண்டியதை சொல்லி விட்டு வந்தாள் அலுமினியப் பளபளப்போடு டவுன் பஸ்சும் வந்தது. பின்னாலேயே தாழ்தளப் பேருந்து - சொகுசுப் பேருந்து என்று நவீனமாயும் டிக்கட் கட்டண உயர்வை மறைமுகமாகவும் கொண்டிருக்கும் பஸ்களின் அணிவகுப்பு.

நேராகக் கேட்டால் ஆ ஊ என்று போராடுபவர்கள் இப்படி கழுத்தைச் சுற்றி மூக்கைத் தொடும் போது மட்டும் அமைதியாக இருப்பதெல்லாம் இந்திய விசித்திரம்!

அவன் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை.

அவளும் பஸ்ஸைப் பிடித்தாள்.

பள்ளிக்கு முன்னாலும் உதிர்ந்தாள். உள்ளே செல்லும் போது சங்கர நாராயணன் தன் மோட்டார் பைக்கில் இருந்து அனுஷாவை இறக்கி விட்டுக் கொண்டிருந்தான்.

அவளும் அவனைப் பார்த்தாள்.

"பாத்துப் போம்மா..." - அவன் பாசத்தோடு சொல்லிவிட்டு செல்லத் தொடங்கினான். முதுகில் புத்தகச் சுமை அழுத்த ஒரு ஹார்பர் கூலியை போல ஒவ்வொரு பிள்ளைகளும் நடந்து கொண்டிருந்தனர்.

அனு பாரதியை பார்த்துவிட்டு 'வணக்கம் டீச்சர்' என்றாள். அவள் குட்மார்னிங் சொல்லாமல் தமிழில் வணக்கம் சொன்னதே பாரதியை மிக ஈர்த்து விட்டது.

"யாரும்மா அது...?"

"எங்கப்பா டீச்சர்..."

"ஓ- அவர்தான் உங்கப்பாவா? ஆமா எங்க லஞ்ச் பாக்ஸை காணோம்?"

"அதை ராஜேஸ்வரியம்மா லஞ்சும் போது கொண்டுகிட்டு வருவாங்க..."

"அது யாரு ராஜேஸ்வரியம்மா..."

"எங்க வீட்டுல சமைக்கறவங்க... ரொம்ப நல்லவங்க..."

"ஓ- உனக்கு அம்மா இல்லைல்ல..."

- பாரதி யதார்த்தமாய் கேட்டுவிட அது அனுஷா முகத்தில் வேறுமாதிரி எதிரொலிகளை உருவாக்கி விட்டது.

கலக்கத்தோடு பார்த்தாள். பாரதிக்கும் தான் அப்படிக் கேட்ட தவறு புரிந்து.

"சாரி அனுஷா- நான் அப்படி கேட்டுருக்க கூடாது - உங்கம்மா

இறந்துட்டாங்கன்னு தெரிஞ்சும் நான் அப்படி கேட்டுருக்க கூடாது-"

"இறந்துட்டாங்கன்னா என்ன டீச்சர்?"

"இறந்துட்டாங்கன்னா செத்துட்டாங்கன்னு அர்த்தம்-"

"எங்கப்பா எங்கம்மா சாமிகிட்ட இருக்கறதால்ல சொல்றாரு-"

"ஓ- அப்படியா? அதுவும் சரிதான் அனுஷா-"

"சாமி கிட்ட போனா பாக்க முடியாதா டீச்சர்-?"

"அது-அது-பாக்கலாமே-யார் சொன்னா பாக்க முடியாதுன்னு-ஆனா அதுக்கு நீ என்ன மாதிரி பெரியவளா ஆகணும்."

"அப்படியா டீச்சர்-?"

- அனுஷாவிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டமாதிரி தான் பாரதிக்கு தோன்றியது.

பிஞ்சு மனது!

எப்படி சமாளித்தாலும் சமாளிக்கும் விஷயமே விபரீதத்துக்கு கொண்டு செல்லலாம்- வேகமாய் பேச்சை மாற்ற முடிவெடுத்தாள். நல்ல வேளையாக மணி அடிக்கும் சப்தம் கவனத்தை திருப்பியது. அனுஷா பிரேயர் ஹால் நோக்கி ஓடினாள்!

## 8

**'காதலிப்பவர்களுக்கும் பைத்தியம் என்கிற பெயர் பொருந்தும்...! ஆனால் வைத்தியம் பார்த்திட மருந்து மாத்திரை தேவையில்லை! மாறாக கவிதையும் கடிதமுமே மருந்தாகும்!'**

பயணக்களைப்போடு வசந்த் தன் வீட்டிற்குள் நுழைந்த போது தூரத்து உறவுக்காரர் ஒருவரோடு அவன் அம்மா பேசிக் கொண்டிருந்தாள். சற்று தள்ளி தரையில் அமர்ந்தபடி பூ கட்டிக் கொண்டிருந்தாள் வசந்தின் அக்காவான உஷா!

அவளுக்கு பக்கத்தில் கிடந்தது அவளை தாங்கிப் பிடித்துக் கொண்டு நடந்திடப் பயன்படும் ஸ்லிப்பர் கட்டை



மகனைப் பார்க்கவும் ஒரு மலர்ச்சி வசந்தின் அம்மா காந்திமதியிடம்-

"வாப்பா... உன் ஃப்ரெண்டோட கல்யாணமெல்லாம் நல்லபடியா முடிஞ்சதா?" - என்று மகனையும் எதிர்கொண்டாள்.

அவன் அப்படி ஒரு பொய்யைச் சொல்லிவிட்டுத்தான் மதுரைக்கு ரயில் ஏறியிருந்தான்.

"ஆங்- ஆச்சும்மா-"

"என்னடா கல்யாணத்துக்கு போனேங்கறே - கைல ஒரு தாம்பூலப்பைய கூட காணோம்..." - உஷா பூ கட்டியபடியே கேட்டாள்.

அவனுக்கும் திணறலாகத்தான் இருந்தது.

"அது- அது-"

"ஏம்ப்பா- ஒரு தேங்கா பழத்தை எதுக்கு தூக்கிகிட்டுன்னு வாங்காமலே வந்துட்டியா?"

- அவன் அம்மாவே அவன் தப்பிக்க வழிகாட்டினாள்.

"அ- ஆமாம்மா-" - அவனும் பிடித்துக் கொண்டான்.

"இவர் தான் நம்ப பிள்ளைங்களா?" - என்று உறவுக்காரரும் ஆரம்பித்தார்.

"ஆமாங்க- என் மகன் - பேர் வசந்த்! M.Sc., படிச்சிட்டு நல்ல வேலைலயும் இருக்கான். மாசம் நாப்பதாயிரம் சம்பளம்..." - அம்மாவிடம் பெருமை பொங்கி வழிந்தது.

உறவுக்காரர் ரத்தினம் கண்களை அகட்டிக் கொண்டு பார்த்து விட்டு

"அகல்யாவுக்கு பொருத்தமான வரன் தான்-" - என்றார்.

அவனுக்கு பகீர் என்றது.

"யாரும்மா அது அகல்யா?" - வேகமாக கேட்டான் வசந்த்.

"சொல்றேம்ப்பா- நீ போய் கை கால் கழுவிகிட்டு உடையை மாத்திகிட்டு வா. ஆமா இன்னிக்கு நீ ஆபீசுக்கு போகணுமில்ல-?"

"அரை நாள் லீவு போட்ருக்கேன்மா... மதியம் போனா போதும்."

"ரொம்ப சௌகரியமா போச்சு- உன் கல்யாண விஷயமா தான் பேசிகிட்டிருக்கேன்."

"கல்யாணமா- எனக்கா?"

"ஆமாம்ப்பா- அது ஏன் அப்படி கேக்கறே-?"

"அம்மா- அக்கா-"

"அக்காவுக்கும் தான் கல்யாணம்..."

"என்னம்மா சொல்றே?"

"நீ போய் ஃப்ரெஷ் பண்ணிகிட்டு வா. விபரமா சொல்றேன். இவ்வளவு நாளா நான் பண்ண பூஜையும் புனஸ்காரமும் வீண் போகலப்பா, வீண் போகல..."

- காந்திமதி பலமான பீடிகை போட்டாள்.

"அம்மா என்னம்மா சொல்றே..."

"முதல்ல போய் ட்ரெஸ்ஸாவாது மாத்திகிட்டு வாப்பா..."

- அவள் உள் பக்கம் கை காட்டினாள். அவனும் பதட்டத்தோடு உள்ளே சென்று ஒரு பத்து நிமிட நேரத்தில் வந்தான்.

"உக்காரு இப்படி..."

"அம்மா சொல்லும்மா..."

"அட உக்காருங்க தம்பி. முதல்ல நான் யார்னு சொல்லிட்றேன். காந்திக்கு நான் அத்தை மகனாகணும் பேர் ரத்னம். காந்தி ஒரு வகைல என் முறைப் பொண்ணு." - உறவுக்காரர் ரசனையோடு பேசுவதாக நினைத்துக் கொண்டு அறுத்தார்.

"நீங்க கொஞ்சம் நேரா விஷயத்துக்கு வர்ரீங்களா?"

"அதுக்கென்ன வந்துட்டா போச்சு... கதிரேசன் மாமா குடும்பம் பத்தி கேள்விப்பட்டிருப்பீங்கன்னு நினைக்கறேன்."

"அதுக்கென்ன இப்போ...?"

"என்ன தம்பி அதுக்கென்ன இப்போன்னு சாதாரணமா கேட்டுட்டீங்க. எப்பேர்பட்ட கோடீஸ்வர குடும்பம் அது...?"

"ரத்னம் நீ இரு நான் பேசிக்கறேன். வசந்தா... கதிரேசன் மாமாவுக்கு இரண்டு சம்சாரங்கறதும் இரண்டு குடும்பங்களும் தனித்தனியா இருக்கறதும் எல்லாருக்கும் தெரியும். இதுல கதிரேசன் மாமா முறைப்படி கட்டிக்கிட்ட கண்மணியம்மாவுக்கு இரண்டு பசங்கப்பா. ஒரு பொண்ணு, ஒரு பையன்..."

"அம்மா... எதுக்கும்மா இப்படி போட்டு மாவாட்றே... கண்மணியம்மாவுக்கு இரண்டு பசங்க என்ன இருபது பசங்க கூட இருந்துட்டு போகட்டும் - இதை எல்லாம் நான் தெரிஞ்சுகிட்டு என்னம்மா பண்ணப்போறேன்?"

"பைத்தியகாரா... நான் ஒண்ணும் உன்கிட்ட அரட்டை அடிக்கல. கண்மணியம்மாவோட பசங்க இரண்டு பேரும் தான் எனக்கு மாப்பிளையா, மருமகளா வரப் போறாங்க... அதுக்காகத் தான் அந்த குடும்பம் பத்தி சொன்னேன்."

"அம்மா..."



"என்ன அம்மா... கண்மணியம்மா மகன் உன்னைப் போலவே கை நிறைய் சம்பாதிக்கறான். இது போக கோடிக் கணக்கான ரூவா சொத்து... உங்க அக்காவை கட்டிக்கவும் சம்மதிச்சுட்டான்பா..."

"ரொம்ப சந்தோஷம்... எனக்கு எதுக்கு இப்ப கல்யாணம்?"

"அது சரி... இங்க உன் அக்கா போலியோவுல கால் போய் இருக்கற மாதிரியே அங்க கண்மணியம்மா பொண்ணுக்கும் போலியோ வியாதிப்பா..."

- காந்திமதி எங்கே வரப்போகிறாள் என்பது வசந்துக்கு புரிந்து விட்டது.

"பயப்படாதே... உன் அக்கா மாதிரியே கால்லதான் கோளாறு. மத்தபடி எல்லா வேலையும் பாக்கறா... உனக்கு இணையா பட்டப் படிப்பும் படிச்சிருக்கா. பார்க்கவும் சிகப்பா லட்சணமா இருக்காப்பா..."

"அம்மா..."

"என்னடா... பொண்ணு கொடுத்து பொண்ணு எடுக்கறது எங்கேயும் உள்ளது தாம்ப்பா. அதுலயும் ஊனப்பட்டுட்டவங்களுக்கெல்லாம் இது தான்பா ஒரே வழி..."

"இல்லம்மா... எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம்மா."

"ஏம்ப்பா அப்படி சொல்றே... ஒரே சமயத்துல நீங்க ரெண்டு பேரும் கல்யாண வாழ்க்கைல இறங்கப் போறத நினைச்சு நான் எவ்வளவு சந்தோஷப்பட்றேன் தெரியுமா?"

"இல்லம்மா... அக்காவுக்கு முதல்ல நடக்கட்டும்மா..."

"அது எப்படிப்பா... இந்த கல்யாண ஏற்பாடே பரஸ்பரம் ரெண்டு பக்கமும் பிரச்சினை தீருதுங்கறதால தானப்பா நடக்குது..."

"இல்லம்மா... இப்படி வியாபாரம் மாதிரி கல்யாணம் பண்றது எனக்கு பிடிக்கலம்மா..."

- வசந்த் கொஞ்சம் போல கோபமும் கொண்டான்.

பூ கட்டிக்கொண்டிருந்த உஷா வெடுக்கென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனுக்குள் அவள் பார்ப்பதன் அர்த்தம் புரிந்தது.

"டேய் வசந்த்... நீ என் பேச்சை கேட்பேங்கற நம்பிக்கைல கண்மணியம்மா போன்ல பேசினப்ப நான் இந்த கல்யாணம் கூடிய சீக்கிரம் நல்லபடியா நடக்கும்னு சொல்லிட்டேன்பா. உன் அக்காவுக்காகவாவது நீ இதுக்கு ஒத்துக்கோப்பா..."

"அது இல்லம்மா... என்க்கு வேற மாதிரி நிறைய திட்டங்கள் இருக்கும்மா..."

"புடலங்கா திட்டம்.. உஷாவுக்கு ஒரு நல்ல வரன் தானா தேடி வந்துருக்கு.. பொறுப்புள்ள ஒரு தம்பியா சரின்னு சொல்லாம என்னடா வேறமாதிரி திட்டம்னு என்னென்னவோ சொல்றே? அப்படி என்னடா திட்டம்?"

"அம்மா அது வந்து.."

"காந்திமதி எனக்கு புரிஞ்சு போச்சு.. உன் மகனுக்கு ஒரு நொண்டிய கட்டிக்கறதுல இஷ்டம் இல்ல.. அப்படித்தானேப்பா..?"

- ரத்னம் இடையில் மூக்கை நுழைத்து கேட்டார்.

"நீங்க எப்படி வேணா எடுத்துக்குங்க... என்னை இப்ப கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தாதீங்க. அவ்வளவு தான் சொல்வேன்.."

- வெடுக்கென்று பேசிவிட்டு அதற்குமேல் அங்கு நிற்க விரும்பாதவன் போல வெளியேறவும் செய்தான் வசந்த்.

காந்திமதிக்கு முகத்தில் அவன் குத்திவிட்டு போவது போல இருந்தது. உஷாவிடம் கண்ணீர் பீறிட ஆரம்பித்தது. ரத்னமோ புலம்பத் தொடங்கி விட்டார்.

"காந்திமதி.. என்னமோ உன் பையன் கிழிச்ச கோட்டை தாண்டமாட்டான் - அப்படி இப்படின்னே. இப்ப என்னடான்னா பிடியே கொடுக்காம பேசிட்டு வெளியவும் போய்ட்டான். கண்மணியம்மா கேட்டா நான் என்ன சொல்ல?" - ரத்னம் கேட்டார்.

"இந்த கல்யாணம் நடக்கும் ரத்னம்.. நீ போய் முகூர்த்த நாள் குறிக்க சொல்.."

"உன் மகனை வற்புறுத்தி சம்மதிக்க வைக்கப் போறியா?"

"வேற என்ன வழி இருக்கு எனக்கு..?"

"பாத்து காந்திமதி.. உன் கண்டிப்புக்காக தாலிய கட்டிட்டு நாளைக்கே உன் மகன் தன் ஆசைக்குன்னு எவளையாவது இழுத்துகிட்டு வந்து நின்னுடப் போறான்.."

"அப்படி எல்லாம் நடக்காது. நீ அநாவசியமால்லாம் கற்பனை பண்ணாதே. நீ போய் சம்மதம்னு சொல். என் பையனை எப்படி சம்மதிக்க வைக்கறதுன்னு எனக்கு தெரியும்.."

- தீர்க்கமாய் பேசினாள் காந்திமதி.

உஷா மட்டும் அழுது கொண்டே இருந்தாள்.



# 9

'இது ஒரு பருவப்புயல்!
இதில் பெற்றோர்களே
பெரும்பாலும் விழுவர்.
இது ஒரு இளமைச் சூறாவளி
இதில் எதிர்ப்பவர்கள்
எல்லாம் அழிவர்.
இது ஒரு இன்பச் சுனாமி
காதலிப்பவர்க்கு
மாத்திரம்.....!'

பள்ளியில் விளையாட்டுக்கான பீரியட் பிள்ளைகளுக்கு மிகமிகப் பிடித்தமான ஒரு வகுப்பு. விளையாட்டு மைதானமே அல்லோலகல்லோலப்பட்டபடி இருந்தது. அனுஷாவும் தன் சக தோழிகளுடன் ஓடியாடி விளையாடியபடி இருந்தாள்.

அப்போது தான் அந்த விபரீதமும் நிகழ்ந்தது.

விளையாடிக் கொண்டிருந்த அனுஷாவுக்கு திடீரென்று காக்காய் வலிப்பு போல் ஒரு விபரீதம் தாக்கத் தொடங்கி திடீரென தரையில் விழுந்து கை கால் இரண்டையும் உதைத்துக் கொள்ளத் தொடங்கினாள்.

பிள்ளைகளும் அவளைச் சூழ்ந்து கொள்ள அதை பாரதியும் கவனித்து விட்டு ஓடினாள். அதற்குள் வாயில் நுரையும் ததும்பத் தொடங்கி விட்டது.

ஓடிப்போய் தேடிப்பிடித்து இரும்புத் துண்டை கொண்டு வந்து அனுஷாவின் கையில் வைத்து அவளை எழுப்புவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

கீழே பொத்தென்று விழுந்ததில் அங்கங்கே காயங்கள் வேறு-

"அனு.. உனக்கு வலிப்பு நோய் இருக்கா?"

- என்று அந்த காயங்களை துடைத்தபடி கேட்டாள் பாரதி.

"அப்படின்னா என்ன டீச்சர்?"

"இப்ப உனக்கு வந்துச்சே அதுக்கு பேர்தான் வலிப்பு.."

"எனக்கு இந்த மாதிரி இதுக்கு முந்தி வந்தது இல்ல டீச்சர்."

"மைகாட்.. இது தான் முதல் தடவையா?"

- பாரதியிடம் பெருமூச்சோடு ஆழ்ந்த அனுதாபமும்

வெளிப்பட்டது. அனுவை கிலாஸ் ரூமில் உட்கார்த்தி வைத்துவிட்டு ஹெட்மிஸ்ட்ரஸ் அறை நோக்கித்தான் சென்றாள். அங்கே அனுஷாவுக்கு ஏற்பட்ட விபரீதத்தை கூறி முடித்தாள்.

"சரி என்ன பண்ணலாம்மா... நீயே சொல்லு..." - என்றார் ஹெட் மிஸ்ட்ரஸ்.

"நான் சொல்றதுக்கு என்ன மேடம் இருக்கு. இதான் ஃபர்ஸ்ட் டைம். சிவியரா ட்ரீட்மெண்ட் எடுத்தா குணப்படுத்திடலாம்கறது என் அபிப்ராயம்."

"ட்ரீட்மெண்ட் எடுக்க நாம யார்.. அனு பேரண்ட்ஸ் தான் அந்த முயற்சியை செய்யணும்."

"சாரி மேடம்... அனு ஒரு அனுதாபத்துக்குரிய குழந்தை அவளுக்கு அம்மா இல்ல. அப்பா மட்டும் தான்.."

"ஓ- இட்ஸ் ஓகே - அவங்க அப்பாகிட்ட ஃபிட்ஸ் பத்தின விஷயத்தை சொல்லி ட்ரீட்மென்ட்டுக்கு ஏற்பாடு செய்யச் சொல்லு நாம வேற என்ன பண்ண முடியும்.

பை த பை இன்னொறு தடவை ஸ்கூல்ல படிக்க வந்த இடத்துல அந்த பொண்ணுக்கு ஃபிட்ஸ் வந்தா ஐ ஆம் வெரி சாரி டு சே... டெஃபனட்டா அந்த குட்டிப் பொண்ணுக்கு நான் டாக்டர்சர்ட்டிபிகேட் கொடுத்து ஸ்கூலை விட்டே வெளியேத்திடுவேன்.

ஏன்னா இது ஒரு ரிஸ்க்கான வியாதி.

இதுகிட்ட நாம மாட்டிக்க கூடாது."

- ஹெட் மிஸ்டரஸ் பொதுவாகத் தான் பேசினாள். ஆனால் பாரதிக்கு அது வலியைத் தந்தது.

"அனு ஒரு பிரில்லியண்ட் ஸ்டூடன்ட் மேடம்.."

"அதுக்கு நாம என்ன பண்ண முடியும்?"

"இல்ல.. இந்த ஃபிட்ஸ் மேட்டரை தயவு செய்து பெருசு படுத்த வேண்டாம் மேடம்."

"புரியாம பேசாத... அனுமாதிரி ஃபிட்ஸ் ஸ்டூடண்டை ரொம்ப கவனமா பார்த்துக்கணும். இவ கூட யாராவது ஒருத்தர் எப்பவும் இருக்கணும். தனியா இவளை எங்கேயும் போகவோ, விடவோ அனுமதிக்க கூடாது..

இவளுக்கு இப்ப தேவை கல்வி இல்ல... ட்ரீட்மென்ட். படிப்பை அடுத்த வருஷம் கூட படிச்சுக்கலாம்.."

"அப்படின்னா?"

"அவ அப்பாவை முதல்ல ட்ரீட்மென்ட்டுக்கு ஏற்பாடு செய்யச் சொல். ஒரு மாசம் கூட லீவு போட்டுக்கட்டும் ஆனா



டாக்டர் சர்ட்டிபிகேட் இல்லாம என்னால ஸ்கூல்ல சேர்த்துக்க முடியாது."

- கண்டிப்புடன் பேசிய ஹெட் மிஸ்ட்ரசிடம் இருந்து விலகி வந்த பாரதிக்கு வாழ்க்கை என்பது நொடிக்கு நொடி விதம் விதமாக மாறும் ஒரு அதிசயம் என்பது மெல்ல அர்த்தமாகத் தொடங்கியது.

முழுவதுமாய் இருபத்தி நான்கு மணி நேரம் ஆகவில்லை. இதில் வசந்தால் அனுபவித்த உல்லாசம், ஹாஸ்டல் வார்டனிடம் அனுபவித்த கண்டிப்பு பஸ் ஸ்டாப்பில் அனுபவித்த வாலிப அவஸ்தை இப்போது அனுபவிக்கும் அனு தொடர்பான விஷயம்..

யோசித்தபடியே வகுப்பறைக்கு வந்தாள்.

லஞ்ச் வந்திருந்தது. ராஜேஸ்வரி அனுவின் காயங்களைப் பார்த்து பதறிக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா கண்ணு இப்படியா விழுந்து அடிபட்டுக்கற மாதிரி விளையாடுவே.. அப்பா பார்த்தா பதறிப் போயிடுவாரேப்பா.."

பாரதி அவளிடம் விசாரிக்கத் தொடங்கினாள்.

"நீங்க..?"

"ராஜேஸ்வரிம்மா.. பாப்பா வீட்டு சமையல்காரி"

"ஓ- ஆமா எவ்வளவு வருஷமா வேலை பாக்கறீங்க?"

"ஒரு ஒருவருஷமா தாம்மா.. ஏன் கேக்கறீங்க..?"

"இல்ல... அனுவுக்கு ஏற்பட்டிருக்கறது வெறும் காயம் மட்டுமில்ல.."

"என்னம்மா சொல்றீங்க?"

"ஆமாம்.. அனுவுக்கு திடீர்னு ஃபிட்ஸ் வந்துடிச்சி.."

"ஃபிட்ஸா.. அப்படின்னா?"

"காக்கா வலிப்பு.."

"என்னது வலிப்பா?"

"ஆமா... அனுவை கேட்டா இதான் முதல் தடவைங்கறா உங்களுக்கு இது சம்மந்தமா எதாவது தெரியுமா?"

"என்னம்மா சொல்றீங்க.. அனுஷா ஒரு பூத்த பூ மாதிரி பொண்ணும்மா. இதுக்கு காக்கா வலிப்பா..?"

"ஆமா.. அனு நாளைல இருந்து ஸ்கூலுக்கு வரவேண்டாம் ஸ்கூல்ல ஒரு மாசம் மெடிகல் லீவு தர சம்மதிச்சிருக்காங்க. அவங்க அப்பா கிட்ட சொல்லி நல்ல டாக்டர் கிட்ட காட்டச் சொல்லுங்க. அது மட்டுமில்ல. கூடவே எப்பவும் யாராவது இருக்கறதும் நல்லது."

- பாரதி சொல்லச் சொல்ல ராஜேஸ்வரிக்கு நெஞ்சைத் திருகியது.

"அம்மா இது ஏற்கனவே தாயில்லாக் குழந்தை. இவ அப்பா மறு கல்யாணத்தை ஒரு பஞ்சமா பாதகமா நினைக்கறாரு. இதுவும் தனியா பாடா படுது. எப்படிம்மா ஒருத்தர் கூடவே இருக்க முடியும்?"

"ஏன் நீங்க இருக்கலாமே.."

"அது சரி... நான் சமையக்காரிம்மா. எனக்கும் குடும்பம் குட்டிங்க இருக்குது. இந்த ஒரு வீடு மட்டுமில்ல எனக்கு இந்த மாதிரி நாலு வீடு. நாலு வீட்டுக்கும் போய் வேலை செய்தாத்தான் என் குடும்ப வண்டி ஓடும்."

- ராஜேஸ்வரியின் பதிலால் பாரதிக்குள் புழுதி பறந்தது.

"சரி.. இவ அப்பா போன் நம்பர் உங்க கிட்ட இருக்கா?"

"அதுக்கென்ன தர்றேன்.."

"நான் அவரை போன்ல கூப்பிட்டு எல்லா விஷயத்தையும் சொல்றேன்."

"முதல்ல சொல்லுங்க. இதுக்கெல்லாம் ஒரே தீர்வு அவரு கல்யாணம் பண்ணிக்கறது தான். நேத்து கூட அவரோட மாமா தன் பொண்ணை கட்டிக்கன்னு சொல்லி கெஞ்சியிருக்கார். இவரு முடியவே முடியாதுன்னு சொல்லி அவரை திருப்பியனுப்பிட்டார்.."

"அந்த அளவு இறந்துட்ட மனைவி மேல அவருக்கு பாசமா?"

"காதலிச்சு கல்யாணம் செய்துகிட்டவர் ஆச்சே... பாசம் மட்டுமா - காதலும் தான்.."

"ஓ.." - ஆமோதிக்கும் போதே பாரதிக்கு வசந்த் நினைப்பு தான் வந்தது. தன் வரையில் வசந்தும் இதே போல காதலும் பாசமும் கொண்டிருப்பானா?

அப்படியே அவன் எண்ணத்தில் மூழ்கத் தொடங்கி விட்டாள்.

"என்னம்மா... அப்படியே வேற ஏதோ ஞபாகத்துக்கு போயிட்டீங்க போல இருக்கு..?"

"ஆமாம்மா.. சரி விடுங்க. அனுவுக்காக நான் என்னவெல்லாம் செய்ய முடியும்னு பாக்கறேன்.."

- ஒரு முடிவோடு தான் பேசினாள்.

"எதாச்சும் பண்ணுங்கம்மா.. படிப்பை மட்டும் நிறுத்திடாதீங்க. எனக்கு தெரிஞ்சு அனு மாதிரி படிக்கற ஒரு பொண்ணை நான் பார்த்ததில்ல. இதை வியாதின்னு சொல்லி வீட்ல தனியா விட்டா இது அதை நினைச்சே செத்துடும்.."

- ராஜேஸ்வரி பயமுறுத்தி விட்டு விலகிப் போனாள். அனுவும் தன் மற்ற தோழிகளோடு அமர்ந்து சாப்பிட்டு முடித்து விட்டு வந்தாள்.



காயம் பட்ட இடங்கள் கன்றிப் போயிருந்தன.

பார்க்கவே பாவமாக இருந்தது.

வகுப்பறைக்குள் போய் உட்காரச் சொல்லி விட்டு தன் செல்போனை எடுத்து சங்கர நாராயணன் எண்ணுக்கு தொடர்பு கொள்ள முயன்றாள். 'ஸ்விட்சுடு ஆஃப்' என்றே வந்தது.

சரி பிறகு பேசுவோம் என்று எண்ணிய போது அவளை வசந்த் அழைக்கத் தொடங்கினான்.

அவன் பெயர் திரையில் தெரியவும் அவளிடம் ஒரு புது உற்சாகம்.

"வசந்த்.. நல்லபடியா ஊருக்கு போய் சேர்ந்தியா?"

"உம்.."

"இப்ப எங்க இருந்து பேசறே.. ஆபீஸ்ல இருந்து தானே?"

"அ.. ஆமா.."

"என்ன தந்தி பாஷைல பேசறே.. காலைல போய் சேர்ந்துட்டு மத்யானம் போன் பண்றே - அவ்வளவு பிசியா நீ.."

"அ.. ஆமா.."

"போதும் வசந்த்.. நாலு வார்த்தை பேசு.."

"என்ன பேச பாரதி.. மனசே சரியில்ல.."

"என்ன ஆச்சு..?"

"அது.. அது.."

"ஓ.. நேத்து நான் உன்கிட்ட கண்டிப்பா பேசினத வெச்சு ஒரே கவலையா இருக்கா.."

"அ.. ஆமாம்.."

"வசந்த்.. இப்ப கூட கொஞ்சம் முந்தி நான் உன்னை தான் நினைச்சேன். என் கிலாஸ்ல அனுஷான்னு ஒரு பொண்ணு. நம்மை போல ஒரு காதல் ஜோடிக்கு பிறந்த குழந்தை. ஆனா இந்த குழந்தைக்கு இப்ப அம்மா உயிரோட இல்ல.."

"மை காட்.."

"பாவமா இருக்குல்ல... அதே சமயம் இந்த அனுவுக்கு இன்னிக்கு ஃபிட்ஸ் வேற வந்துடுச்சி இவளை பாத்துக்க ஒருத்தர் கட்டாயம் தேவை.."

"நீ பாத்துக்க போறியா பாரதி.."

"முட்டாள் மாதிரி பேசாதே. நான் எப்படி பாத்துக்க முடியும். அனுஷாவுக்கு அம்மா ஸ்தானத்துல ஒருத்தி வேணும். ஆனா அவங்க அப்பாவோ தன் மனசுல அனு அம்மாவைத் தவிர யாரையுமே நினைக்க தயாரா இல்லையாம்.."

"நிஜமாவா?"

"வந்து பார்... நான் சொல்றது எவ்வளவு உண்மைன்னு தெரியும். அனு அப்பா இடத்துலதான் நான் உன்னை வெச்சு ஒரு நிமிஷம் கற்பனை பண்ணி பார்த்தேன்... நீயும் அனு அப்பா மாதிரியே என்னை தவிர யாரையும் நினைக்கமாட்டே தானே?"

- பாரதியின் கேள்வி வசந்தை திணற அடித்தது.

"அ- ஆமா பாரதி.."

"அதை எதுக்கு தயங்கிகிட்டே சொல்றே. நல்லா கான்ஃபிடன்டோட சொல் வசந்த்.."

"ஷ்யூர் ஷ்யூர்.."

"இல்ல.. ஷ்யூர் ஷ்யூர்னு நீ சொல்றதுல உயிரே இல்ல என்ன ஆச்சு..?"

"இல்ல பாரதி.. நான் பயணக்களைப்போட இருக்கறதால உனக்கு டல்லா கேட்குதாட்டம் இருக்கு.."

"அப்ப சரி.. பை த பை வசந்த் நேத்து ஹாஸ்டல்ல உள்ள விடமாட்டேன்னுட்டாங்க.."

"அப்புறம்?"

"அப்புறம்னு என்ன சாதாரணமா கேட்கறே.. வார்டனோட ஒரே சண்டை.. அந்தம்மாவுக்கு நம்ப லவ் தெரிஞ்சிருக்கு.."

"எப்படி பாரதி?"

"சினிமா தியேட்டர்ல நம்பள யாராவது பாத்துருக்கலாம். போய் பத்த வெச்சிருக்கலாம்."

"சரி நீ என்ன சொன்னே?"

"நான் என்ன சொல்வேன் - காதலிக்கறது என் தனிப்பட்ட விஷயம்கறது அவங்களுக்கும் தெரியாதா என்ன? ஆனா அவங்க சொன்ன ஒரு விஷயம் என்னை யோசிக்க வெச்சது.."

"அப்படி என்ன சொல்லிட்டாங்க.."

"நாளைக்கே உன் காதல்னால நீ கர்ப்பவதியாகி - காதல் தோல்வி ஏற்பட்டு அதனால வாழ்க்கை வெறுத்து எங்க ஹாஸ்டல் ரூம்ல தற்கொலை செய்துகிட்டா எங்க ஹாஸ்டல் பேருல்ல கெட்டுப் போயிடும்னு கேட்டாங்க.."

- பாரதியின் பேச்சு அந்த பக்கத்தில் வசந்த்தை அப்படியே வாயடைக்க வைத்து விட்டது.

"என்ன வசந்த்.. நான் பேசறது காதுல விழுதா?"

"உம்.."

"என்ன ஷாக் ஆயிட்டியா?"

"அ- ஆமாம் பாரதி - இப்படி எல்லாம் கூடவா கற்பனை பண்ணுவாங்க."



"வெரிகுட்.. இதை நீ கற்பனைன்னு சொன்னதுக்காக நான் சந்தோஷப்பட்றேன். நான் அப்ப என் மனசுல என்ன நினைச்சுகிட்டேன் தெரியுமா?"

"என்ன?"

"இந்த அம்மா முன்னாடியே நாம இரண்டு பேரும் கல்யாணம் பண்ணிகிட்டு நல்ல தம்பதியா வாழ்ந்து காட்டணும்னு முடிவு செய்தேன்.."

"ஓ ஹோ.."

"என்ன கதையா கேட்கறே.. ஒஹோங்கறே - சபாஷ் சரியா சொல்லியிருக்கேன்னு என்னை பாராட்டாம ஒஹோன்னு இழுக்கறே..?"

"இல்ல பாரதி.. நீ சரியாதான் சொல்லியிருக்கே.."

"இல்ல வசந்த்.. உன்னை எனக்கு நல்லா தெரியும். நீ எப்படி பேசுவே - அதுல எவ்வளவு உற்சாகம் இருக்கும்கறதெல்லாம் எனக்கு அத்துபடி. இன்னிக்கு உன் குரல்ல உயிரே இல்ல.. கேட்டா பயணக்களைப்புங்கறே..

ராத்திரி பன்னெண்டு மணிக்கு தூக்க கலக்கத்துல கூட என் குரலைக் கேட்டா பரபரன்னு மாறிட்ற நீ இன்னிக்கு கொஞ்சம் கூட சரியில்லை. சம்திங்ராங். ஆமா உன் வீட்ல எதாவது பிரச்சினையா?"

"சேச்சே.. அதெல்லாம் எதுவுமில்லை.."

"நிஜமா?"

"நிஜமாதான் பாரதி.."

"சரிடா.. உன்னை நான் நம்பறேன்.. சரி லஞ்ச் டைம் முடியப் போகுது. நான் அப்புறம் பேசறேன்.."

- என்று அவனது தொடர்பையும் துண்டித்துக் கொண்டாள். வகுப்பறைக்கு வந்த போது மாணவர்கள் காத்திருந்தனர். அனுஷா சோர்ந்து போய் மேஜை மேல் சாய்ந்து படுத்திருந்தாள். பார்க்கவே பாவமாக இருந்தது. ராஜேஸ்வரி கொடுத்திருந்த எண்ணைக் கொண்டு சங்கர நாராயணனை அழைத்து அப்போது பேசி விடுவது நல்லது என்று தோன்றியது. அதற்காக அவனை தொடர்பு கொள்ள முயன்றாள். ஆனால் 'ஸ்விட்ச்டு ஆஃப்' என்று வந்தது. அலுவலகத்தில் இருக்கும் போது பலர் இப்படி செல்போனை 'ஸ்விட்ச்டு ஆஃப்' செய்து கொள்வது உண்டு.

சரி பிறகு முயற்சிக்கலாம் என்று பாடம் நடத்தத் தொடங்கினாள்.

# 10

**'காதல்'**

**'இது சாதியை உடைக்கும் உளி!**
**இதயத்தில் பறந்திடும் கிளி...**
**இது அந்தஸ்தை அலட்சியம்**
**செய்யும் நெருப்பு...**
**இதனால் பேதங்கள்**
**உடைவது இதன் சிறப்பு!'**

மாலை பள்ளி முடிந்தது!

அனுஷா வீட்டுக்கு கிளம்ப தயார் ஆனாள். வலிப்பின் போது அடிபட்ட பாகங்களில் வீக்கம் ஏற்பட்டு கன்றிப் போயிருந்தது. பார்க்கவே மிக சோர்வாக இருந்தாள். தனியே அவளை அனுப்புவது உசிதமாக படவில்லை.

"எப்படி அனு நீ வீட்டுக்குப் போவே?"

"ஆட்டோ பிடிச்சு போவோன் டீச்சர்.."

"அப்ப காலைல அப்பா கூட வந்தியே..?"

"காலைல மட்டும் அப்பா கொண்டுகிட்டு வந்து விட்டுடுவாரு.."

"சரி இப்ப நீ ஆட்டோவுல போயிடுவியா?"

"போயிடுவேன் டீச்சர்.."

- என்றவளை காத்திருந்த ஆட்டோவில் ஏற்றிவிடச் சென்றாள். ஆட்டோ பிதுங்கி வழிந்தது.

ஒரு ஆட்டோவுக்குள் கிட்டத்தட்ட 16 பிள்ளைகள்!

ஆட்டோ டிரைவர் சேவை செய்கிறாரா - இல்லை சித்ரவதை செய்கிறாரா என்கிற கேள்வியும் கோபமும் சேர்ந்து வந்தது பாரதிக்கு..

"இப்படியாப்பா பிள்ளைகளை போட்டு அடைப்பே?"

"என்ன டீச்சர் பண்றது - பெட்ரோல் விக்கற விலைக்கு கட்டுப்படியாகணுமில்ல."

"மீட்டர் போட்டு ஓட்டினா தாராளமா கட்டுப்படியாகி ஆட்டோங்கறதும் பொதுமக்களோட முதல் வாகனம்னு ஆயிடும். ஆனா அப்படி ஆயிடக் கூடாதுன்னு திட்டம் போட்டு எல்லாரும் திரியும் போது உங்களை எல்லாம் எப்படி திருத்த முடியும்..?"



"போதும் டீச்சர்.. இந்த தொழிலை செஞ்சு பாருங்க அப்ப தெரியும் உங்களுக்கு.."

"அதுசரி.. ஒழுங்கா நடந்துக்க சொன்னா உடனே 'செஞ்சு பாரா'.. சரிய்யா நான் உன்வழிக்கே வரேன். இங்க இருந்து கடைசி குழந்தையை இறக்கி விட்ற வரை நீ எவ்வளவு கிமீட்டர் தூரம் ஆட்டோவை ஓட்டுவே.."

"ஒரு பத்து கிலோ மீட்டர் வெச்சுக்குங்க.."

"வெச்சுக்கவா.. சரி. இதுல 16 குழந்தைங்க.. இவங்க கிட்ட தலைக்கு நீ எவ்வளவு வாங்கறே?"

"மாசம் ஐநூறுன்னு ஒட்டுக்கால்ல வாங்கறோம்.."

"அதாவது சனி ஞாயிறு லீவு போக மாசம் 22 நாள் ட்ரிப்புக்கு 500 ரூபா அப்படிதானே?"

"ஆங்.. வெச்சுக்குங்க.."

"அப்ப ஒரு நாளைக்கு சராசரியா இருபத்தி அஞ்சு ரூவா. அதுல ஒரு ட்ரிப்புக்கு 12.50.. சரியா?"

"உம் போடுங்க.. போடுங்க.."

"பதினாறு பேருக்கு தலைக்கு 12.50 வைச்சா கிட்டதட்ட இருநூறு ரூபா.."

"சரி.. வெச்சுக்குங்க.."

"ஒரு லிட்டர் பெட்ரோல் அப்புறம் ஆயில் எல்லாம் சேர்ந்து எழுபது ரூபாயா?"

"சரியா சொல்றீங்களே.."

"இந்த ஒரு லிட்டருக்கு உன் ஆட்டோ குறைஞ்ச தூரமா இருபது கிலோ மீட்டர் போகுமா?"

"அவ்வளவு தாங்க போகுது."

"அப்ப உனக்கு பெட்ரோல் செலவு 35 ரூபா தான் ஆகுது-உனக்கு 165 ரூபா கிடைக்குது.. இதுக்கு நீ செலவழிக்கற நேரம் அதிகபட்சம் ஒரு மணி நேரம்.."

"என்ன டீச்சர் நீங்க... வண்டி வாடகை - தேயுமானத்த விட்டுட்டீங்களே..?"

"சரி அதுக்கெல்லாம் ஒரு ஐம்பது ரூபாயே வை. 115 ரூபா உனக்கு ஒரு மணி நேரத்துல கிடைக்குது."

"எல்லா நேரமும் இப்படி கிடைக்காதுல்ல டீச்சர்.."

"அதனால கிடைக்கற நேரத்துல கொள்ளை அடிப்பீங்களா?"

"உங்க கிட்ட பேச முடியாது டீச்சர்.. நான் வரேன்.."

- ஆட்டோகாரர் ஆட்டோவை கிளப்ப முயன்றார்.

அனுஷாவுக்கு உள்ளே உட்கார இடம் இல்லை. தொங்கியபடி செல்லத்தான் இடம் இருந்தது. ஒரு பேஷண்ட்டை அப்படி அனுப்புவதும் சரியா படவில்லை.

"அனு நீ இறங்கிக்கம்மா.. நான் உன்னை கொண்டு போய் விட்றேன்.." - என்றாள். அனுஷாவும் இறங்கிக் கொண்டாள்.

திரும்பவும் ஒரு முறை சங்கர நாராயணனின் அலைபேசிக்கு முயன்று பார்த்தாள். இந்த முறை நாட் ரீச்சபுள் என்று வந்தது.

"அப்பா கிடைக்கலியா டீச்சர்.."

"ஆமாம்மா.. செல்போன் கிட்ட இது ஒரு சிக்கல். இதுதான் நண்பன் - இதுதான் பகைவனும் கூட... இப்ப இது நம் வரைல பகைவன். பரவால்ல வா - உன்னை வீட்ல விட்டுட்டு அப்புறமா நான் போறேன்.."

- என்று பொறுப்போடு அவளை அழைத்துக் கொண்டு வேறு ஒரு ஆட்டோவில் புறப்பட்டாள்.

அந்த ஆட்டோக்காரர் ஒரு மூன்று கிமீட்டர் தொலைவுக்கு எண்பது ரூபாய் கேட்டார். தலையை சுற்றிக் கொண்டு வந்தது. வாதம் புரிந்தால் பத்து ரூபாய் குறையலாம் என்று தோன்றியது. ஆனாலும் அந்த அநியாய தொகைக்கு உடன்படப் பிடிக்கவில்லை. நடப்பதற்கு அஞ்சுவதால் தானே இப்படி ஒரு நிலை..?

ஆனால் அனுஷாவின் உடல் நிலை நிர்பந்தித்தது. வேறு வழியின்றி ஆட்டோவில் ஏறிக் கொண்டாள். பணத்தை தரும் போது அந்த ஆட்டோ டிரைவர் சம்பல் பள்ளத்தாக்கில் இருந்து துப்பாக்கியும் கையுமாக குதிரை மேல் ஏறிவந்து இறங்கிய ஒரு கொள்ளைக்காரனாகத்தான் தெரிந்தான்.

கடலுக்குள் உப்பு நீருக்கு நடுவில் பாலம் கட்ட இந்த அரசாங்கத்தால் முடிகிறது - அதே போல வெட்டவெளியில் ராக்கெட்டுகளை அனுப்பி உலகை சுற்றி வர முடிகிறது. ஆனால் ஆட்டோக்களை மீட்டர் போட்டு ஓடச் செய்ய இதனால் முடியவில்லை.

அரசாங்கத்தின் மேல் கோபம் கோபமாக வந்தது. அனுஷா கவனித்துக் கொண்டே இருந்தாள்.

பூட்டிக் கிடந்த வீட்டுக்கு வெளியே உள்ள திண்ணையில் அமர்ந்து கொண்டாள்.

"சாவி இல்லையா அனு.."

"அப்பா கிட்ட தான் இருக்கு. அவர் வர்றவரை நான் இங்க தான் உட்கார்ந்திருப்பேன்.."

"அடடா.. உன் அம்மா தான் உயிரோட இல்லை. தாத்தா பாட்டின்னு உன்னை பார்த்துக்க கூடவா யாருமில்லை..?"



- அவள் கேள்விக்கு பதில் கூற பக்கத்து வீட்டம்மாள் தான் வந்து நின்றாள்.

"இது யாரு அனுஷா?"

"எங்க டீச்சர்.."

"டீச்சரம்மாவா... சரிதான்! நான் உன்னை பாத்துக்க சொந்தக்காரங்க தான் வந்துட்டாங்களோன்னு நினைச்சேன்."

- அந்த பதில் அனுஷா முகத்தில் அடுத்த கட்ட வருத்தத்தை உருவாக்கியது. அதை பாரதியும் உணர்ந்தாள்.

"அனு நீ வருத்தப்படாதே.. நானும் உன் சொந்தக்காரிதான்." - என்றாள்.

"என்னவோம்மா.. நீங்களே பாருங்க - இந்த சின்ன வயசுல அம்மா இல்லாம தெருவுல நின்னு இது இப்படியா கஷ்டப்படணும்? இதோட அப்பா இன்னொரு கல்யாணம் பண்ணிகிட்டா என்ன தப்பு?"

"நாங்களும் எவ்வளவோ சொல்லிட்டோம். என் நர்மதா இடத்துக்கு யாரும் வரமுடியாதுன்னு தான் சொல்லுதே தவிர இந்த சின்ன பொண்ணோட கஷ்டத்தை பாக்கவே மாட்டேங்குது.."

- அந்த அம்மாள் பேசியதிலும் நியாயம் இருந்து அது பாரதியை யோசிக்க வைத்தது. அதையும் மீறி சங்கர நாராயணனின் மனைவி பாசம் பிரமிக்கச் செய்தது. இதற்காகவே அவனை கைகுலுக்கி பாராட்ட வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டாள்.

"ஆமாம்... என்னம்மா நீங்க வந்துருக்கீங்க - இவங்க அப்பாவை பாக்கணுமா?"

"ஆமாங்க... அனுஷாவை பத்ரமா கொண்டு வந்து விட வேண்டிய ஒரு அவசியம்.."

"ஏன்.. தினசரி இது தனியா தானே வருது?"

"அது வந்து.." - பாரதிக்கு அனுஷாவின் காக்காய்வலிப்பை பற்றி அந்த அம்மாளிடம் பேச தயக்கமாக இருந்தது.

இந்த மாதிரி வியாதிகளைப் பற்றி நாலுபேர் அறிய பேசவே கூடாது. அது வியாதிக்கு ஆளானவர்களை பெரிதும் பாதிக்கும். குறிப்பாக கல்யாண வயதில் இருக்கும் பெண்களுக்கு இந்த வியாதி சத்ரு. அவர்களை கடைத் தேற்றவே விடாது.

பாரதியிடம் விவேகம் இருந்து தடை செய்தது.

மௌனமாகவே நின்றாள்.

ஆனால் அனுஷாவோ தன் வாயாலேயே உளறிடத் தொடங்கினாள்.

"ஆண்ட்டி... இன்னிக்கு எனக்கு திடீர்னு காக்கா வலிப்பு வந்துடுச்சி. நான் பொத்துன்னு கீழே விழுந்துட்டேன். பாருங்க எவ்வளவு காயம்..!"

- அனுஷா காயத்தை காட்டவும் பக்கத்து வீட்டம்மாளிடம் பற்றிக் கொண்டது நெருப்பு.

"அடக் கொடுமையே... தனியா இருக்கற உன்கிட்ட துணையா நான் இருக்கேன்னு வந்து ஒட்டிகிச்சா இந்த வலிப்பு. இது மோசமான வியாதியாச்சே. ரோட்ல நடந்து போய்கிட்டு இருக்கும் போது இது வந்துட்டா ஒட்ற லாரி பஸ்ல விழுந்து உயிரேல்ல போயிடும்?" - என்று அந்த அம்மாள் சாவு வரை போய் விட்டாள்.

பாரதிக்கு பகீர் என்றது.

"அம்மா.. அதெல்லாம் ஒண்ணுமில்ல. அனுஷாவுக்கு காக்கா வலிப்பெல்லாம் வரலை. மயக்கம் வந்து விழுந்துட்டா. சரியான சாப்பாடு இல்லை.. வீக்னெஸ்..." என்று சமாளிக்கப் பார்த்தாள்.

"மயக்கம் போட்டு கீழே விழுந்ததுக்கா இவ்வளவு காயம்?" அந்த அம்மாள் நம்புகிற மாதிரியும் தெரியவில்லை.

"ஆமாம்மா காக்கா வலிப்புதான்.. போங்க போய் யார் யார் கிட்டல்லாம் இதை சொல்லி அனுதாபப்பட்ற மாதிரி நடிக்கணுமோ நடிங்க.. போங்க.." - பாரதி படாரென்று வெடித்து விட்டாள்.

அந்த அம்மையாரிடம் ஒரு வித திக்கு முக்காடல்...

"என்னம்மா நடிப்பு அது இதுன்னு என்னென்னமோ பேசிட்டே?"

"பின்ன.. ஒரு குழந்தையை வெச்சுகிட்டு பேசற பேச்சா இது..? தாயில்லாத குழந்தைன்னு பரிதாபப்பட்ற நீங்களே இந்த குழந்தை எதுக்க சராசரி தெருப் பொம்பளங்க மாதிரி பேசினா நான் என்ன செய்யட்டும்?"

பாரதியின் நியாயமான கோபம் அந்த அம்மாளின் வாயையும் அடைத்து விட்டது. மெல்ல விலகத் தொடங்கினாள். அனுஷாவுக்கோ பாரதி தனக்காக ஒரு தாய்க்கோழி போல சண்டை போடுவது மிகவே பிடித்து விட்டது.

"தேங்க்ஸ் டீச்சர்" என்றாள்.

"எதுக்கும்மா..?"

"அந்தம்மா எப்பவும் இப்படிதான் பேசுவாங்க. எங்கப்பாக்கு எவ்வளவு சம்பளம்..? எங்கம்மா எப்படி செத்துப் போனாங்க? ஏன் என் தாத்தா பாட்டி வரமாட்டேங்கறாங்க..? இப்படி கேள்வியா கேட்பாங்க.."



"நீ அதுக்கெல்லாம் என்ன பதில் சொல்வே?"

"எங்கப்பாகிட்டையே கேட்டுக்குங்கன்னு சொல்லிடுவேன்."

"வெல்செட்... இந்தியாவுல தெருவுக்கு தெரு இப்படி நாலு பேர் இருக்காங்க. நாமதான் ஜாக்ரதையா இருக்கணும்."

"டீச்சர் டீச்சர்.."

"என்னம்மா?"

"அந்தம்மா சொன்ன மாதிரி நான் தனியா வெளிய போகும் போது காக்கா வலிப்பு வந்துடுமா.. நான் லாரி பஸ்சுல விழுந்து அடிபட்டு செத்து போயிடுவேனா?"

- பாரதியை அனுவின் கேள்வி கிள்ளி விட்டது.

"சேச்சே.. அப்படி எல்லாம் இல்லம்மா.. உனக்கு நிச்சயமா இன்னொரு தடவை காக்கா வலிப்பெல்லாம் வராது. அதுக்கு மாத்திரை இருக்கு சாப்பிட்டா சரியாயிடும்.."

- அவள் நம்பிக்கை தரும் விதமாய் பேசிய போது மோட்டார் பைக்கில் சங்கர நாராயணனும் வந்து சேர்ந்தான்.

பாரதியை பார்த்து ஆச்சரியப்பட்டான். பைக்கை நிறுத்திவிட்டு அனுஷாவை பார்த்து அதிரவும் செய்தான்.

"அனும்மா என்ன உடம்பெல்லாம் காயம்?" - அவன் குரலில் பதட்டம் தொற்றிக் கொண்டது.

"நான் அனுவோட கிலாஸ் டீச்சர் பேர் பாரதி. காலைல கூட பார்த்தீங்களே.."

"ஆமாம்.. அனுவுக்கு எதனால இப்படி காயங்கள்?"

"உள்ள போய் பேசுவோமே.."

- பாரதி வீட்டின் வாசல் கதவை பார்த்து பேசினாள். அவனும் வேகமானான்.

ஹாலில் சோபாவில் அவளை அமரச் சொல்லி அனுஷாவை தூக்கி மடியில் வைத்துக் கொண்டு

"சொல்லுங்க... அனுஷா விளையாடும் போது தவறி விழுந்துட்டாளா?"

"ஐய்யோ அப்பா... அதெல்லாம் இல்லை. என் கிட்டே கேளுங்க நானே சொல்றேன்.."

- அனுஷா இடை மறித்து அவன் தாடையை பற்றி தன் பக்கம் திருப்பி சொல்லவும் தொடங்கினாள்.

"அப்பா எனக்கு திடீர்னு காக்கா வலிப்பு வந்துடுச்சி... பொத்துன்னு விழுந்துட்டேன்.."

- அவள் காக்காய் வலிப்பு என்ற நொடி சங்கர நாராயணனுக்கு பின் மண்டையில் சொடேர் என்று அடி விழுந்த

மாதிரி இருந்தது. பொறி கலங்கிப் போய் கண்ணிரண்டிலும் மளுக்கென்று நீரும் தெரித்து வந்தது.

"டீச்சர் இவ என்ன சொல்றா.. ஈஸ் இட் ட்ரூ..?"

- பாரதி அதற்கான பதிலாக அவ்வளவையும் சொல்லி முடித்தாள்.

சங்கர நாராயணன் அணுப் பரிசோதனை செய்யப்பட்ட களம் போல ஆகிவிட்டிருந்தான். நெடுநேரத்துக்கு பேச்சு வரவில்லை.

"உடனடியா நல்ல டாக்டர் கிட்ட காட்டுங்க.. ஒரு மாசம் வரை ஸ்கூல்ல லீவு தந்திருக்காங்க. நல்லபடியா க்யூர் ஆயிட்டா இனி வலிப்பு வராதுங்கற சர்ட்டிபிகேட் ரொம்ப முக்கியம்.."

- பாரதி கூறிக் கொண்டே போனாள். மௌனமாக கேட்டுக் கொண்டான்.

"அனுவுக்கு இப்ப உடனடி தேவை. படிப்பை விட ட்ரீட்மென்ட் தான். அடுத்து எப்பவும் பக்கத்துல ஒரு துணை. தனிமையால மன அழுத்தம் ஏற்பட்டு அது நரம்பு மண்டலத்தை தாக்கி அதனால கூட அனுவுக்கு வலிப்பு வந்துருக்கலாம்."

- பாரதி தனக்கு தோன்றிய காரணத்தையும் கூறி முடித்தாள். மௌனமாக கேட்டுக் கொண்டான் சங்கர நாராயணன்.

"உங்க போனுக்கு ரொம்ப நேரம் ட்ரை பண்ணினேன் உங்கள பிடிக்கவே முடியல.."

"இருக்கலாம்.. இன்னிக்கு பேங்க்ல நிறைய பிரச்னை செல் போனை டிராயர்ல போட்டு லாக் பண்ணிட்டேன்"

"சரி நான் புறப்பட்றேன்.."

"ரொம்ப நன்றி.. உங்க உதவியை மறக்க மாட்டேன்."

"பரவால்ல சார்.. அனுவை கவனமா பாத்துக்குங்க.."

"சரி இப்ப நீங்க எங்க போகணும்?"

"நான் ஹாஸ்டல்ல தங்கியிருக்கேன்: ஹாஸ்டலுக்கு தான் போகணும்?"

"எங்க இருக்கு அந்த ஹாஸ்டல்?"

"சொக்கி குளம்.."

"ஓ.. ஒரு அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணுங்க. கொஞ்சம் ஃப்ரெஷ் பண்ணிகிட்டு வந்துட்றேன். உங்களை நானே ஹாஸ்டல்ல ட்ராப் பண்றேன்."

"ஐயோ இருக்கட்டும் சார்.. நான் போய்க்கறேன்."

"நோநோ.. என் மகளுக்காக இவ்வளவு மெனக்கெட்டுருக்கற உங்களுக்கு நான் இதை கூட செய்யலைன்னா எப்படி?"

"பரவால்ல சார்.."



"நோ மிஸ் பாரதி... இங்க இருந்து போக சட்டுன்னு ஆட்டோவும் கிடைக்காது. ஹாஸ்டல்னா எட்டு மணிக்குள்ள போகணும்னு ரூல்ஸ் இருக்கும். இப்பவே மணி ஏழரை ஆயிடிச்சு. ப்ளீஸ்.."

- சங்கர நாராயணன் அவளை சம்மதிக்க வைத்துவிட்டு தனது உடையை மாற்றிக் கொண்டு வர வேகமாய் உள் சென்றான்.

அனுஷா சிரித்தாள்!

## 11

'காதல்'
'இது ஒரு ஜில்லென்ற நெருப்பு
இதயத்தின் இனிய தவிப்பு!
இது ஒரு குளிரான புழுக்கம்
நினைவுகளோ இனிக்கும்
இது ஒரு வினோதமான தாகம்
மனதுக்குள்ளோ மோகம்!'

உடை மாற்றிக் கொண்டு வந்த சங்கர நாராயணன் அனுஷாவை தனியாக விடாமல் பைக்கில் முன் பக்கம் பில்லியன் மேல் உட்கார வைத்துக் கொண்டான். பின்னால் பாரதி ஏறிக் கொள்ள அந்த மோட்டார் பைக் ஹாஸ்டல் நோக்கி புறப்பட்டது. கெடிகாரத்தில் பத்துநிமிடங்கள் தான் இருந்தது.

எவ்வளவு வேகமாய் சென்றும் நேரம் எட்டைக் கடந்துவிட்டது. வாட்ச்மேன் முறைத்தான்.

"வார்டனைப் பாரும்மா முதல்ல.." - என்றபடி தான் கேட்டையே திறந்தான். அப்படியே சங்கர நாராயணனைப் பார்த்து "இவர் தான் உன் லவ்வரா?" - என்றும் கேட்டான்.

சங்கர நாராயணனுக்கு கன்னத்தில் அறைந்தார் போல் இருந்தது.

"ஏய் வாட்ச்மேன்.. என்னய்யா பேசற நீ..ஒரு வாட்ச்மேன் பேசற பேச்சா இது?" - சீறினான். வாட்ச்மேனுக்கும் சங்கரனின் எதிர்ப்புக் குரல் பயத்தை அளித்தது. திருதிருவென விழித்தான். பாரதிக்கு தர்ம சங்கடமாக இருந்தது.

"மிஸ் பாரதி..டோன்ட் ஒர்ரி! அனுஷாவுக்கு உதவி செய்யப் போய் தான் லேட்டாச்சுன்னு நான் வேணா உள்ள வந்து சொல்லட்டுமா?"

என்றும் கேட்டான்.

"சான்ஸே இல்லை. இங்க எப்பவும் ஒரு வாரினிங் தான். கொஞ்சம் அப்படி ஓரமா நில்லுங்க... பெட்டி படுக்கையோட மேடம் எப்படியும் வெளிய வருவாங்க. கூட்டிகிட்டு போக வசதியாக இருக்கும்"

- வாட்ச்மேன் சொன்னது, சொன்னது போலவே பலித்தது. பாரதி தன் சூட்கேஸ் மற்றும் மினி படுக்கையுடன் வெளியில் வந்தாள்.

சங்கர நாராயணனுக்கு ஆத்திரமாக வந்தது.

"மிஸ் பாரதி... இது என்ன அநியாயம் - ஒரு ஹாஸ்டல்னா கட்டுப்பாடுங்க இருக்க வேண்டியது தான். இங்க ஆனாலும் ரொம்ப ஓவரா இருக்கே. இது காலேஜ் ஹாஸ்டலா பிரைவேட் ஹாஸ்டலா? ஒரு வயசுப் பொண்ணுன்னும் பார்க்காம உங்கள இப்படி வெளிய அனுப்பிட்டாங்களே - உங்களுக்கு இந்த ராத்திரில நடக்க கூடாத எதுவும் நடந்துட்டா யாருங்க பொறுப்பு...?"

- வாட்ச்மேன் காதில் விழுகிறது மாதிரிதான் கத்தினான்.

"இல்ல சார்... என்னை நாளைக்கு தான் ரூமை காலி பண்ணச் சொன்னாங்க. நான் தான் இப்பவே கிளம்பி வந்துட்டேன்."

"அவசரப்பட்டுட்டீங்களே... இந்த ராத்திரில எங்க போவீங்க...?"

"எதாவது ஒரு ஹோட்டல்ல ரூம் போட்டு தங்க வேண்டியது தான். நாளைக்கு ஸ்கூலுக்கும் லீவு போட்டுட்டு வேற எதாவது நல்ல ஹாஸ்டல் இல்லேன்னா சின்னதா ஒரு வீடு பாக்க வேண்டியது தான்."

- பாரதி பதட்டமேயின்றி சொன்னாள்.

"இப்படி ஆனதுக்காக உங்ககிட்ட கொஞ்சம் கூட வருத்தமே இல்லையே..."

"ஒரு ஜெயில்ல இருந்து வெளியேறும் போது சந்தோஷமா தானே சார் இருக்கும்?"

"அதுவும் சரிதான்... ஓ.கே... நீங்க இந்த ராத்திரில வேற எங்கேயும் போய் தங்கி கஷ்டப்படவேண்டாம். பேசாம என் வீட்டுக்கே வந்துடுங்க..."

- சங்கர நாராயணன் அவளுக்கு இன்ப அதிர்ச்சி அளித்தான்.

"சார்..."

"வாங்க... என் வீட்ல இருந்துகிட்டே நீங்க வேற நல்ல ஹாஸ்டலை தேடுங்க - இல்ல சின்னதா வீடு கூட பாருங்க..."

"ஹைய்யா டீச்சர் நம்ம கூட தங்க போறாங்களே..." - என்றாள். அவள் முகத்தில் எப்போதும் இல்லாதபடி ஒரு புது உற்சாகம்.



பாரதியிடம் சட்டென்று ஒரு யோசனை.

"சார்... போற வழியில அனுவை டாக்டர் கிட்ட காட்டிட்டு போயிடலாமா?" என்று கேட்டாள்.

"ஓ... தாராளமா... இதுவும் நல்ல ஐடியா தான்" என்றான். அவள் ஒரு ஆட்டோ பிடித்து பெட்டி படுக்கையை தூக்கி போட்டவளாக உள் ஏறினாள்.

"அப்பா நான் டீச்சர் கூடவே வரேன்" - என்று அனுஷாவும் அவளோடு சேர்ந்து கொண்டாள்.

சங்கர நாராயணனும் பைக்கை முன்னால் ஓட்டிச் செல்ல ஆட்டோ பின் தொடர்ந்தது. ஒரு இடத்தில் ஆஸ்பத்திரி வாசல் முன் தேங்கி நின்றது. உள்ளே சென்று டாக்டரிடம் காட்டினார்கள். டாக்டர் எக்ஸ்ரேவுக்கு எழுதிக் கொடுத்தார் - தற்காலிக நிவாரணமாக ஊசி போட்டு மாத்திரை எழுதித் தந்தார். பாரதியை தவறுதலாக தாயாக விளங்கிக் கொண்டு

"நீங்க கொஞ்ச நாளைக்கு குழந்தை கூடவே இருங்க. இன்னிக்கு வந்தது காக்கா வலிப்பு தான்னா நிச்சயம் குறிப்பிட்ட நேரத்துக்கு பிறகு ஒரு முறை வரும். காக்கா வலிப்பு போன்ற நரம்புச் சுண்டலா இருந்தா ஆபத்து இல்லை. அது திரும்ப வராது. தனியா மட்டும் குழந்தையை விட்றாதீங்க. நாளைக்கு ஸ்கேன் எடுத்துட்டு வந்து காட்டுங்க. அடுத்த கட்ட ட்ரீட்மென்ட்டை அதை பாத்துட்டு தான் செய்வேன்" - என்றார் டாக்டர்.

சங்கர நாராயணன் மிக வேகமாக டாக்டரிடம் "டாக்டர் இவங்க என் மனைவி இல்ல. அனுவோட ஸ்கூல் டீச்சர். ஒரு வெல் விஷர் அவ்வளவுதான்..." என்றான்.

அதை பாரதியும் ரசித்தாள்.

அதன் பின் வீடு வந்தனர். வழியிலேயே ஹோட்டலில் சாப்பிட்டு விட்டதால் படுக்கச் செல்ல வேண்டியதுதான் எனும் போது அந்த தொலைபேசி தகவல் வந்தது.

மாமா பத்மநாபன் தான் பேசினார்.

"சங்கரா..."

"மாமாவா... சொல்லுங்க மாமா..."

"என்னத்தப்பா சொல்ல. இனிமே நீ சந்தோஷமா இருக்கலாம்பா..."

"என்ன மாமா சொல்றீங்க... புரியற மாதிரி சொல்லுங்க..."

"நான் இப்ப ஜி.எச்ல மார்ச்சுவரி கிட்ட நின்னுகிட்டிருக்கேன்... உள்ள அஜந்தா உடம்பு கிடக்குது..."

"மாமா என்ன சொல்றீங்க...?"

"அஜந்தா தற்கொலை செய்துகிட்டாப்பா... தற்கொலை செய்துகிட்டா..."

"ஐயோ மாமா இது என்ன கொடுமை..?"

"அடபோப்பா... நீ மட்டும் என் மகளை கட்டிக்க சம்மதிச்சிருந்தா இப்படி எல்லாம் ஆகியே இருக்காது. ஒரு விதவையா அவ வாழ விரும்பல. எனக்கு பாரமா இருக்கறதா நினைச்சு இப்படி ஒரு வழியை தேர்வு செய்துட்டாப்பா.. இப்படி ஒரு வழியை தேர்வு செய்துட்டா.."

- மாமா அந்த பக்கமாய் கதறி அழுதபடி பேசுவது இந்த பக்கத்தில் பாரதி காதுகளில் கூட வேகமாய் கேட்டது.

"அஜந்தா அவசரப்பட்டுட்டா மாமா.."

"நாம எப்படி வேணா சொல்லிக்கலாம்பா.. ஆனா என் மனசு பட்ற பாடு உனக்கு இப்ப தெரியாது. உனக்கும் ஒரு பொண்ணு இருக்கால்ல... அவ வாழ்க்கைல புயல்கியல் வீசும் போதுதான் புரியும். ஆனாலும் அந்த கடவுள்கிட்ட எனக்கு வந்த மாதிரி ஒரு கஷ்டத்தை யாருக்கும் தராதேன்னு சொல்லி வேண்டிக்கறேம்பா.."

- மாமா பேச்சை முடித்துக் கொண்டார். சங்கரநாராயணனை ஒரு வகை அமைதி வந்து கவ்விப் பிடித்துக் கொண்டது.

"சார்... எதாவது கெட்ட சேதியா சார்?" - பாரதி மெல்ல ஆரம்பித்தாள்.

அனுஷா தூங்கி விட்டாள்.

"ஆமாம் மிஸ் பாரதி.."

"என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"அது- அது-"

"தயக்கமா இருந்தா வேண்டாம் - விட்றுங்க."

"எப்படி சொல்றதுன்னுதான் தெரியல எனக்கு-"

"அவ்வளவு காம்ப்ளிகேட்டான விஷயமா?"

"கொஞ்சம் அப்படி தான்."

"எதுவா இருந்தாலும் சொல்லுங்க சார். உங்களுக்கும் மனபாரம் குறைஞ்ச மாதிரி இருக்கும்ல?"

"என் பாரம் எப்பவும் எதனாலயும் குறையாது மிஸ் பாரதி."

"சார் நீங்க சாதாரணமா பாரதின்னே கூப்பிடுங்க. எதுக்கு இந்த மிஸ் மரியாதை.."

"தேங்க்ஸ்.." - அவனும் அஜந்தா பற்றிய விஷயங்களை எல்லாம் சொல்லி முடித்தான்.

"அடடா- இந்த காலத்துல இப்படி ஒரு பெண்ணா?"



"எல்லா காலத்துலயும் எல்லா விதமான பெண்களும் இருக்காங்க பாரதி. ஆனா நாம அதுல சில விதமானவங்களை தான் சந்திக்கிறோம்."

"உங்க கருத்து உண்மையா இருக்கலாம்.. பைதபை உங்கள நான் ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே..?"

"என்ன கேக்கப் போறீங்கன்னு எனக்கு நல்லா தெரியும் பாரதி."

"அப்படியா.. எங்க சொல்லுங்க பார்ப்போம்."

"நீங்க ஏன் அஜந்தாவை கல்யாணம் பண்ணிகிட்டிருக்க கூடாதுன்னு கேட்பீங்க. ஆம் ஐ கரெக்ட்?"

"ஆமாம் சார். அவங்க ஒரு விதவைங்கறதால மறுத்துட்டீங்களா?"

"சேச்சே.. சத்யமா அப்படி எல்லாம் கிடையாது. அதுலயும் அஜந்தா என் மாமா பொண்ணு - சிறு வயசுல இருந்தே அவளை எனக்கு தெரியும் அவளோட நல்லது கெட்டதுல அக்கறை உள்ள அவளோட உறவினன் நான். இன்னும் சொல்ல போனா முறைப் பையன்."

"அப்ப எதனால இந்த பிடிவாதம்.. உங்க மனைவியோட ஆத்மா மன்னிக்காதுங்கற எண்ணமா இல்ல பயமா?"

"அதுவும் இல்லை. நான் கல்யாண பந்தத்தை தான் இந்த உலகத்துலயே மிகப்பெரிய பந்தமா நினைக்கறேன். பாசத்துல தாய்ப்பாசம் பெருசுன்னு சொல்வாங்க. அதேபோல உறவுகள்ள நட்புறவு ரொம்ப பெருசுன்னு சொல்வாங்க. இதெல்லாமே கல்யாண பந்தத்துக்குள்ள அடங்கியிருக்குன்னு நான் நினைக்கறேன்.

எங்கேயோ யார் வயித்துலையோ பிறந்த ஒரு ஆணும் பெண்ணும் பரஸ்பரம் தங்கள் எதிர்காலத்தை கல்யாண பந்தத்துல தான் உருவாக்கிக்கறாங்க. குறிப்பா ஒரு பெண் தன் தாய் வீடு உற்றார் உறவினர் என்கிற எல்லாத்தையும் ஒதுக்கி வெச்சுட்டு யாரை கல்யாணம் செய்துக்கறாளோ அந்த புருஷனோட குடும்பத்துக்குள்ற ஐக்கியமாயிட்றா. அதன் பிறகு பிள்ளைகள் பிறந்து அவங்களுக்காக வாழுறதுன்னு அவ வாழ்க்கை ஓடிகிட்டே இருக்கு.

ஒரு புறம் கணவனுக்கு மனைவியா - இன்னொரு புறம் நல்ல மருமகளா, இன்னொருபுறம் நல்ல தாயா பல அவதாரங்களை அவ எடுக்க வேண்டியிருக்கு.

இதை என்னால சாதாரண ஒரு விஷயமா நினைக்க முடியல. எனக்கும் நர்மதாவுக்கும் கூட அப்படி ஒரு கல்யாண பந்தம் உருவாச்சு. நர்மதா என்னை மலை போல நம்பினா.. எனக்காக தன் தாய் தந்தையரை கூட புறக்கணிச்சா! ஒரு பெண்ணோ ஆணோ காதலிக்கும் போது பெற்றவர்களுக்கு எதிரா நடந்துக்கற ஒரு சூழ்நிலை உருவாயிடுது.

பெத்து வளர்த்து ஆளாக்கினவங்களுக்கு எதிரா கல்யாண

விஷயத்துல முடிவு எடுக்கறதுங்கறதும் தப்பு தான்.. கல்யாணம்கறது மட்டும் எல்லாருடைய விருப்பத்தின் பேர்லதான் நடக்கணும். ஆனா காதலிக்கறவங்களுக்கு இது சாத்யம் இல்லாம போயிடுது.

எங்க வரையிலையும் அதுதான் நடந்தது.

இவ்வளவு கஷ்டப்பட்டு கல்யாண வாழ்க்கையை தொடங்கின எனக்கு அதுக்கான கொடுப்பினை இல்லை. இரண்டே வருஷத்துல நர்மதாவை மஞ்சள்காமாலைங்கற நோய் வந்து கொண்டு போயிடிச்சு.

எனக்கும் நர்மதாவுக்குமான உறவுக்கு சாட்சியா அனுஷா மட்டும் ஒரு வயசுக் குழந்தையா என் கைல.. அந்த நொடில தான் நான் வாழ்க்கை பத்தியும், உறவுகள் சுற்றங்கள் பற்றியும் தெளிவா புரிஞ்சுகிட்டேன்.

காதல்ங்கறது எவ்வளவு பெரிய விபத்துக்குரிய விஷயம்கறதும் அப்பதான் புரிஞ்சது..

இளம் வயசுல இளமைத் திமிறுல, மோகத்துல அதிகபட்சம் 15ல இருந்து ஒரு 30 வயசு காலத்துக்குள்ற வந்து போற ஒரு பிரத்யேக காமம் தான் காதல்! ஒரு ஆணுக்கு ஏற்பட்ற அதே அளவு ஒரு பெண்ணுக்கு ஏற்படும் போது இரண்டு பேரும் ஈர்க்கப்பட்டு நெருங்கிட்றாங்க. அவங்களுக்கு இந்த ஊர் உலகம் சுற்றத்தார் எல்லாருமே ஒரு தூசா மாறிட்றாங்க.

வாழ்க்கைல இறங்கி வாழ ஆரம்பிச்ச பிறகுதான் எல்லா சாயமும் வெளுக்க ஆரம்பிக்குது! வீட்டு வாடகை, மளிகை சாமான், டெலிபோன் பில், எலெக்ட்ரிக் பில்லுன்னு அழுத்தம் ஒரு புறம்.. வியர்வை, அழுக்கு, தூக்கத்துல குரட்டைங்கற உள் அழுக்குகளும் அதனால ஏற்பட்ற அழுத்தங்களும் இன்னொறு புறம்.

அழகா மேக்கப் போட்டு பரஸ்பரம் ஏமாத்தி கிட்டது உடைஞ்சு நொறுங்கி அழகற்றவைகள் சந்திக்கும் போது தான் யதார்த்தமே தெரியுது. இப்ப பார்த்து கை கொடுக்க சுற்றமும் கிடையாது. அக்கம் பக்கமும் காதலர்களை துரோகிகளா தான் பாக்கற ஒரு நிலை..

இதனால தான் நூத்துக்கு எழுபது காதல் தோல்வி காணுது. முப்பது பர்சன்ட் காதல் பல காரணங்களால அந்த தோல்வியில இருந்து மீட்கப்படுது.

எனக்கு தெரிஞ்சு ஒரு காதல் கூட உலகத்துக்கு ஒரு உதாரணமா எந்த குறைபாடுகளும் இல்லாம இல்லை. என் அனுபவத்துல சொல்றேன் மிஸ் பாரதி... காதல்ங்கறது கல்யாணத்துக்கு பிறகு மனைவிகிட்ட தான் நிகழணும். அது கல்யாணத்துக்கு முந்தி ஒருத்தருக்கு ஏற்பட்டா அது பாவத்தோட



தான் சேர்ந்ததாகும்! பாவிகளுக்கு தான் காதல் வரும்.. அவங்க தானும் கஷ்டப்பட்டு குடும்பத்தையும் கஷ்டப்படுத்தி தங்கள் பிள்ளைகளையும் கஷ்டப்படுத்திடுவாங்க.

நானும் கூட இப்ப அனுஷாவை கஷ்டப் படுத்திகிட்டு தான் இருக்கேன். பாவம் அனுக்குட்டி. எங்களுக்கு மகளா வந்து பொறந்துட்டா.."

சங்கர நாராயணன் தன் பேச்சில் பல உண்மைகளையும் சத்தியங்களையும் சொல்லியவனாக குரல் உடைந்து போய் அழவும் ஆரம்பித்தான்.

பாரதிக்குள் அவன் பேச்சு ஒரு வித குற்ற உணர்வையும் பயத்தையும்,உண்டாக்கி விட்டிருந்தது. பாவிகளுக்கு தான் காதல் வரும் என்று அவன் சொன்னது அவளை பதறவே வைத்து விட்டது.

இருந்தும் அவளுக்குள் பல கேள்விகள்.

"சார்.."

"என்ன பாரதி... என் கருத்துல உங்களுக்கு உடன்பாடு இல்லை தானே?"

"கொஞ்சம் அப்படித்தான் சார்.."

"அப்ப நீங்க யாரையாவது காதலிக்கணுமே..?"

- கண்ணீரை துடைத்துக் கொண்டே கேட்டான். அதிர்ந்து போனாள் பாரதி. மெல்ல 'ஆமாம்' என்று தலையசைத்தாள்..

"நினைச்சேன்.."

"காதலை நான் ஒரு காவிய உணர்ச்சியாதான் சார் நினைக்கறேன்."

"அப்படி நினைச்சா தானே பாரதி ஏமாந்து போய் காதலிப்போம்.."

"என்ன சார் இப்படி சொல்றீங்க... இலக்கியங்கள்ளயே காதலுக்கு தானே சார் முதல் இடம்.."

"யார் சொன்னா பாரதி... இலக்கியங்கள்ள காதலிச்சு வாழ்க்கைல ஜெயிச்சு வீரதீர சூரத்தோட வாழ்ந்த ஒருத்தரை சொல்லுங்களேன் பார்ப்போம்.."

"சட்டுன்னு நினைவுக்கு வரலை.. ஆனா ஜெயிச்சவங்களும் இருக்காங்களே சார்.."

"சரி... நூத்துக்கு ஒருத்தரோ இரண்டு பேரோ ஜெயிச்சவங்கன்னே வெச்சுப்போம் தோத்துப் போன 98 பெரிசா.. ஜெயிச்ச 2 பெருசா?"

"ஒரு பந்தயத்துல நூறு பேர் ஓடினாலும் முதல் பரிசு

ஒருத்தருக்கு தானே- அந்த ஒருத்தரா நான் இருக்கணும்னு தானே ஓட்றாங்க."

"வாழ்க்கைங்கறது இப்படி ஓடி அடைய வேண்டிய ஒரே பரிசு இல்ல பாரதி. அது ஒரு தொடர் ஓட்டம். போட்டிக்கான ஓட்டம் இல்ல அது-"

"உண்மைதான்- ஆனா சினிமா, நாடகம், கதைன்னு எதை எடுத்தாலும் அதுல காதல் தானே முதல் இடத்துல இருக்கு-"

"ஆமாம் பாரதி- அதுலதானே நம்முடைய் நிராசையை நாம பாக்கறோம். அடுத்து கற்பனைல இன்பம் காண்றது தானே மனித மனங்களோட வழக்கம்.

சினிமாவுல ஹீரோயிசம் எதனால ஜெயிக்குது? நிஜத்துல பத்து பேரை என்னால அடிக்க முடியுமா? டூயட் பாட முடியுமா? கற்பனைல அது நிகழும் போது ஒரு அல்ப சந்தோஷம் எனக்குள்ள ஏற்படுது."

"அப்ப காதலை பத்தின உங்க முடிவான கருத்து-?"

"திருமணத்துக்கு பிறகு வந்தா அது தேன் - முன்னால வந்தா அது சந்தேகமில்லாம விஷம்."

"சரி- திருத்திக்க உங்களுக்கு வாய்ப்பு வந்தும் ஏன் மறுக்கறீங்க-"

"நான் என் வாழ்க்கைல ஒரு தப்பு செய்து அதுக்கான தண்டனையையும் அனுபவிச்சிட்டவன். மொத்தத்துல ஒரு குற்றவாளி. அதோட நான் ஆசையா காதலிச்ச பெண்ணோடையே வாழ முடியாத ஒரு துரதிர்ஷ்டசாலி. என்னால இன்னொறு பெண் இன்னொறு முறை கஷ்டப்படணுமா?"

"ஏன் இனி அமையப் போற வாழ்க்கை ஒரு நல்ல வாழ்க்கையா இருக்க கூடாது... ஒரு முறை ஒருத்தர் தவறு செய்துட்டா அவர் அதுலயே தான் இருக்கணுமா அவருக்கு விமோசனமே கூடாதா?"

"நல்ல கேள்விதான்... இருந்தாலும் எனக்குள்ற ஒரு வைராக்யம். இளம்வயசுல பொண்டாட்டி செத்துட்டா உடனே மறுமணம்கறதுதான் ஒரு ஆணோட வாழ்க்கைப்பாடா இருக்கு. அதனாலதான் 'பொண்டாட்டி செத்தா புது மாப்பிள்ளைங்கற' பழமொழியே உருவாச்சு. இந்த பழமொழியை நானாவது ஜெயிக்க விரும்பறேன். அடுத்து காதலிச்ச காதலியை கடைசி வரை மனசுல வெச்சுகிட்டே வாழ்ந்த ஒரு காதலனா இந்த உலகம் என்னைச் சொல்லணும். அதனால காதல்னா பாவம்கற விஷயத்தையும் மாத்தணும்னு நினைக்கறேன்."

"ஒரு புறம் காதலை பாவமா சொல்ற நீங்க அந்த காதலை புனிதப்படுத்த நினைக்கறது வியப்பா இருக்கு சார்-"

"பாரதி- நான் இப்ப பட்டுத் திருந்தியவன். அதனால ஊருக்கு



நான் உள்ளது உள்ளபடி சொல்றேன் அதேசமயம் எனக்குள்ளே நான் அதுக்கு கௌரவம் சேர்க்க முயற்சிக்கிறேன்.

என்னைப் போல கஷ்டப்பட்டு வாழ யாரும் முன் வர மாட்டாங்க."

- அவன் பதில்கள் பாரதியை வெகுவாக யோசிக்க வைத்தது. நெடுநேரம் மௌனமாக இருந்தாள்.

அவன் அதை உடைக்கத் தொடங்கினான்.

"ஆமா உங்க காதலன் யார்- என்ன பண்றாரு?"

- அவளும் வசந்த் பற்றி விலாவரியாக சொல்லி முடித்தாள்.

"உங்க காதலுக்கு பெற்றோர் சம்மதம் கிடைக்குமா?"

"என் வீட்ல தடை இல்ல சார்- வசந்த் வீட்டுல வசந்தோட அக்காவுக்கு கல்யாணமாகிட்டா அங்கேயும் தடை இருக்காதுங்கறது என் நம்பிக்கை. ஆனா அவங்க ஒரு போலியோ பாதிப்பு உடையவங்க."

"ஒரு வேளை தடை வந்தா-"

"நீங்க செஞ்ச தப்பை நாங்களும் செய்வோம். வேற வழி?"

"ஆமாம் மனசு ஒத்துப் போய் காதலிச்சுட்டா மியூச்சுவலா பிரிஞ்சு போறதுங்கறதவிட போராடி சேர்றது தான் சரி. காதலிக்காமலே இருப்பது தான் புத்திசாலித்தனம்-"

"எங்க காதலுக்கு காதலிச்சவர்ங்கற முறைல உங்க உதவி கிடைக்குமா சார்-"

"நிச்சயமா- உலகத்துல செட்டியார், முதலியார், ஐயர்னு பல ஜாதிகள் இருக்கற மாதிரி காதலிக்கற காதலிச்ச எல்லோரும் ஒரு ஜாதி.

நாமெல்லாம் இப்ப ஒரு ஜாதி. எப்படி உதவி செய்யாம இருப்பேன்?"

"தேங்க்ஸ் சார்- எங்க எங்களை பிரிஞ்சு போயிடுங்க அதுதான் நல்லதுன்னு சொல்வீங்களோன்னு பயத்துல இருந்தேன்."

"நான் யாரையுமே காதலிக்காதீங்கன்னு தான் சொல்வேன். காதலிச்சுட்டா என்ன வந்தாலும் பிரியக் கூடாதுன்னு தான் சொல்வேன்."

"அதுக்கு எல்லாரையும் காதலிக்க சொல்லி, பிரியக் கூடாதுன்னும் சொல்லலாமே சார்- அதுல என்ன தப்பு இருக்கு- ஜாதி ஆதிக்கம் இதனால ஒழியுமே-?"

"ஜாதியை பத்தி நாம பிறகு பேசுவோம். அது வேற ஒரு கான்சப்ட். இப்ப காதலைப் பத்தி மட்டும் பேசுவோம்... காதல்ங்கறது இரண்டு பேருக்கு நடுவுல் எதனால உருவாகுதுன்னு கொஞ்சம் சொல்லுங்களேன்-"

"பரஸ்பரம் பிடிச்சுப் போறதால.."

"இது பொதுவான பதில். உங்களுக்கு உங்க காதலரை எதனால பிடிச்சதுன்னு சொல்ல முடியுமா?"

"ஓ.. என் வசந்த் முதல்ல க்யூட்டான ஒரு பர்சனாலிட்டி நல்ல சுறுசுறுப்பு. அடுத்து எனக்காக உயிரையும் கொடுக்க அவன் தயாரா இருக்கான். அவன் வரைல நானும் தயாரா இருக்கேன்.."

"அப்ப உங்க பெற்றோர் பார்த்துச் செய்யற திருமணத்துல கணவரா வர்றவர் இப்படி இருக்க மாட்டார்ங்கறது உங்க எண்ணமா?"

"நான் அப்படி சொல்லலியே.."

"அப்ப உங்க காதலோட அடி நாதம் 'பிடிச்ச தோற்றம் சுறுசுறுப்பு - உயிரையும் கொடுக்கற பாசம்.. இதுதான். சரி தானே?"

"நிச்சயமா.."

"இதெல்லாமே பொய் பாரதி.. நீங்க பார்த்தது புறத்தோற்றத்த மட்டும்தான்! பல வருடங்கள் பழகி இருந்தாலும் பிரச்சினைக்குரிய கட்டங்கள நீங்க இன்னும் சந்திக்கல."

"பிரச்சினைக்குரிய கட்டம்னு நீங்க எதை சார் சொல்றீங்க?"

"நிறைய இருக்கு பாரதி."

"பெற்றோர்கள் எதிர்ப்பு, அடியாட்கள வெச்சு பயமுறுத்தறது, ஓடஓட விரட்றது.. இவைகளை தானே?"

"இவைகள் மட்டுமில்ல பாரதி.. இன்னும் நிறைய இருக்கு."

"அது என்ன சார்..?"

"சட்டுன்னு என்னால சொல்ல முடியல. ஆனா நிறைய இருக்கு பாரதி. அது ஆளுக்கு ஆள் வேறுபடவும் செய்யும். இந்த பிரச்சினைக்குரிய கட்டங்கள் சிலருக்கு கல்யாணத்துக்கு முந்தி வரும் - சிலருக்கு பின்னால வரும்.

இந்த கட்டங்கள் முறைப்படி பெண் பார்த்து பெற்றோர்கள் விருப்பத்தோட கல்யாணம் பண்ணிகிட்டவங்களுக்கும் வரும். ஆனா இவங்க அதுல இருந்து ஈஸியா மீண்டுடறாங்க. மீள முடியாதப்ப பெற்றோர்கள் கை கொடுக்கறாங்க. காதலிக்கறவங்களுக்கு அந்த ஆதரவு இல்லாததாலயும் அந்த கட்டங்கள திடீர்னு சந்திக்கறதாலயும் தடுமாறிப் போயிட்றாங்க."

"ஏன் சார் உண்மையா காதலிச்சிருந்தா எப்படி சார் தடுமாற்றம் வரும்?"

"உண்மையா காதலிக்கப்பட்றதுன்னா உருவம் அழகை எல்லாம் மூட்டை கட்டி வெச்சுடணும். அறிவு, குணம், தியாகம், சுறுசுறுப்பு, இரக்கம் போன்ற விஷயங்களால கவரப்பட்டுதான்



காதலும் உருவாகியிருக்கணும். இன்னும் ஒரு படிமேல போய் சொல்றேன் பாரதி..

உண்மையான காதலுக்கு அழகுக்கும் கவர்ச்சிக்கும் சம்மந்தமே இல்லை. அது நான் சொன்ன அறிவு, குணம், தியாகம், இரக்கம்கற குணத்தால தான் வரமுடியும். அப்படி பார்த்தா டெலிபோன் பூத்ல வேலை பாக்கற அவ்வளவு ஊனமுற்ற பெண்களும் தான் முதல்ல காதலிக்கப்படுவாங்க."

- சங்கர நாராயணன் சொன்னது பாரதி வரையில் நெற்றிப் பொட்டில் ஆணி வைத்து அடித்த மாதிரி இறங்கியது.

"ஆமாம் சார்.. என் வசந்த் கூட நான் ஐஸ்வர்யாராய் மாதிரியே இருக்கேன்னு சொல்லிதான் என்னை வர்ணிப்பான். நானும் அவனை அஜித், விஜய்னு பலமாதிரி கற்பனை செய்து பார்த்துருக்கேன். எங்க காதல்ல தோற்றத்துக்கு பெரிய பங்கு இருக்கத்தான் செய்யுது."

"உங்க காதல்னு இல்ல.. நூத்துக்கு தொண்ணூறு காதல்ல இதுதான் நிலை. இந்த தோற்றம் மாற்றத்துக்கு உரியது. 24 மணி நேரமும் மேக்கப்போடையேவா இருக்க முடியும்? அந்த மேக்கப் கலைஞ்சு போற தருணங்கள்ள காதல்ங்கறது கரைய ஆரம்பிச்சிடுது.."

"பயமுறுத்தறீங்களே சார்.. என் காதல்ல அப்படி எல்லாம் எதுவும் நடந்துடக் கூடாது சார்.."

- பயப்படத் தொடங்கினாள் பாரதி. கெடிகாரமும் இரவு 12 ஆகிவிட்டதை சப்தம் போட்டு உணர்த்தியது.

அனுஷா எப்பொழுதோ தூங்கி விட்டிருந்ததால் நிறைய மனம் விட்டு பேச முடிந்திருந்தது.

சங்கர நாராயணனும் கொட்டாவி விட்டான்.

"சரி பாரதி போய் படுங்க... உங்களுக்கு நல்ல இடம் அமையறவரை நீங்க இங்க தானே இருக்கப் போறீங்க. நிறைய டைம் இருக்கு - அப்ப நாம இன்னும் விஸ்தாரமா பேசலாம்."

- என்றபடியே பாரதி படுத்து உறங்க கட்டிலை ஒதுக்கித் தந்தான். அவளும் போய் படுத்துக் கொள்ளத் தொடங்கினாள்.

சங்கர நாராயணன் அனுஷா அருகில் சென்று படுத்துக் கொண்டான். அனுஷாவின் முகம் நிர்மலமாய் இரவில் பூத்த ஒரு ரோஜா போல காட்சி தந்தது. நெடுநேரம் வெறித்துப் பார்த்தான். பின் குனிந்து நெற்றியில் முத்தமிட்டான்.

பாரதி கவனித்துக் கொண்டே இருந்தாள்.

அவளுக்கு மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது.

சங்கர நாராயணன் அருகில் படுத்த நிலையில் மென்மையாக மகளை அணைத்தும் கொண்டான்.

இந்தப் பாசம் தான் எத்தனை உன்னதமாக விஷயம்?

உலகில் மனித உயிர்களில் இருந்து விலங்கினங்கள் வரை காணப்படும் இதுதான் அடிப்படை கருணையா? ரத்தத்தில் வைத்தே அந்த இறைவன் படைத்து விட்டானா? இது மட்டும் இல்லாமல் போனால் மனித வாழ்வில் எதுதான் மிஞ்ச முடியும்_ பாரதிக்குள் மல்லாந்து படுந்த நிலையில் கேள்விகள் - கேள்விகள் - கேள்விகள்!

## 12

'காதல்'

'கண்ணில் தொடங்கி
இதயத்தில் புகுந்து
நரம்புகளின் வழியாக
ரத்தத்தை சூடேற்றி
விந்தணுக்களை தேடி
அணைந்து பீறிட்டு
முடிகிறது.
பருவப் பெண்ணிடம்
இப்படி என்றால்
பெற்ற பெண்ணிடம்
பாசமாய் மாறி ஆனந்தக்
கண்ணீராய் முடிகின்றது!'

ஒருவாரம் சென்று விட்டது.

அனுஷாவிடம் அற்புதமான மாற்றம்.

அந்த வலிப்பு அதன் பின் வரவேயில்லை.

டாக்டரிடம் கேட்ட போது

இதற்கு முன்பு வந்ததும் வலிப்பு வியாதி அல்ல - அது ஒரு தற்காலிக நரம்புத் தூண்டல் தான்_ மன அழுத்தம் காரணமாக சிலர் வரையில் அப்படி நடக்க வாய்ப்பு உண்டு என்றார். அனுஷா இப்போது போல் மகிழ்ச்சியோடு எப்போதும் இருந்தால் பிரச்சினையே இல்லை என்றும் கூறினார்.



சங்கர நாராயணனுக்கு அந்த பதில் இதமாக இருந்தது. அனுஷா பற்றிய கவலையும் பெரிதாக இல்லை. பாரதியே அவளை பள்ளிக்கு தன்னுடன் அழைத்துச் சென்று அழைத்தும் வந்து விட்டாள்.

சமையல்கார ராஜேஸ்வரியம்மாவையும் நிறுத்தி விட்டு அவளே சமைத்தாள். எப்படியோ சங்கர நாராயணன் வரையில் துணையாக ஒரு பெண் வந்து விட்டதாகத்தான் தெருவும் நினைத்தது.

பாரதியின் உள்காதல் பற்றி யாருக்கும் எதுவும் தெரியாததால் சங்கர நாராயணனே பாரதியை மணந்து கொள்ளலாம் என்றும் கணக்கு போட்டார்கள். இதை பக்கத்து வீட்டம்மாள் ஒரு சமயத்தில் தன் பாணியில் கேட்டும் விட்டாள்.

"டீச்சர்னு சொல்லிகிட்டு வந்தே_ தங்குனே_ நிரந்தரமா கூடவே இருக்கே - ஒரு தாலிய கட்டிகிட்டு இதை செய்தா யாரும் தப்பா நினைக்க மாட்டோம்ல?" - என்றவளை முதல் தடவையாக பதட்டத்தோடு பார்த்தாள் பாரதி.

அந்தம்மாவிற்கு எந்த பதிலையும் கூறவில்லை.

ஆனால் சரியான பதிலை கூறாமல் இப்படி ஒரு வாழ்க்கையை தொடரும் பட்சத்தில் இது பலவிதமான தவறான பேச்சுக்களில் முடிந்து ஹாஸ்டலில் இருந்து துரத்தப்பட்டது போல இங்கிருந்தும் துரத்தப்படும் நிலை வரலாம் என்று தோன்றியது.

அப்போதுதான் சில தினங்களாக வசந்த் தொலை பேசியில் பேசாததும் நினைவுக்கு வந்தது. அவனுடன் தொடர்பு கொள்ள பாரதி முயன்ற போதும் முடியவில்லை. ஸ்விட்ச்டு ஆஃப் என்றே வந்தது.

கவலையும் கலக்கமும் பாரதியை பிடித்து ஆட்டத் தொடங்கி விட்டது. வசந்த் திசை மாறிப் போவதாகவும் தோன்றியது. நல்லவேளையாக அவள் தவிப்பை அதிகப் படுத்தாதபடி அன்று அவளுக்கு ஒரு கடிதம் வந்து சேர்ந்தது. வசந்த் தான் கொரியர் தபாலில் 'அனுப்பியிருந்தான்.

அதன் ஆரம்பமே கொடுமையாக இருந்தது.

'அன்புள்ள பாரதிக்கு!'

உனது வசந்த் எழுதிக் கொள்வது. நான் இனி உனது வசந்த் அல்ல. காலம் என் அக்கா வடிவில் என்னோடு மோதி என்னை இன்னொரு பெண்ணுக்கு விலைபேசி விட்டது! அக்காவின் 'போலியோ' பாதிப்பு உனக்கு தெரியும். அதை பொருட் படுத்தாமல் அக்காவை மணக்க ஒரு மாப்பிள்ளை தயார். ஆனால்

ஒரே ஒரு நிபந்தனை தான். பதிலுக்கு அவரது 'போலியோ' பாதிப்புள்ள தங்கையை நான் மணந்து கொள்ள வேண்டும்.

ஊனமுற்ற ஒரு பெண்ணின் பாதிப்பை உணர்ந்த இரு குடும்பங்கள் ஒன்று சேர்வதால் அந்த பெண்ணுக்கு வாழ்க்கை கிடைக்கிறது என்பதுதான் இதன் அடிப்படை உண்மை.

நம் காதல் பற்றி துளியும் தெரிந்திராத நிலையில் என் அம்மா இந்த உடன்பாட்டிற்கு சம்மதித்து விட்டார்கள் அதனால் தான் கடந்த முறை நீ போனில் பேசிய போது என்னால் உன்னிடம் கலகலப்பாக பேசமுடியவில்லை. பின் மெல்ல என் அம்மாவிடம் நம் காதலை கூறி நீ காத்திருப்பதையும் சொன்னேன். அம்மாவோ உன் அக்காவுக்கு ஒரு நல்லவழி கிடைக்கப்போகும் இவ் வேளையில் சுயநலமாக நடந்து கொண்டு அவள் வாழ்க்கையை பாழக்கி விடாதே என்று கண்டிப்பாக கூறி நமது காதலை உதறி விடச் சொல்லிவிட்டார்கள். எனக்கும் என்ன செய்வது என்றே தெரியவில்லை. அக்காவோ இப்போதே கல்யாணமாகி விட்டது போல கனவுகளில் மூழ்கி விட்டார்கள். அவர்களுக்கு நமது காதலைப் பற்றி இந்த வினாடி வரை எதுவும் தெரியாது. ஒரு வேளை தெரிந்து இந்த திருமணம் நடக்க வாய்ப்பில்லாமல் போனால் அக்கா தற்கொலை செய்து கொள்ளலாம்.

நானும் கூட்டிக் கழித்துப் பார்த்து உன்னிடம் எல்லா விஷயங்களையும் கூறி இதற்கான முடிவையும் உன்னிடமே விட்டுவிடுவது என்று தீர்மானித்து விட்டேன்.

நம் காதல் இப்போது உன் கையில்!

நான் என்ன செய்யட்டும்?

நீ எதைச் சொன்னாலும் கேட்கத் தயாராக இருக்கிறேன். உரிய பதிலை வேகமாக கூறு.

அன்புடன்
வசந்த்.

- கடிதத்தை படித்த பாரதிக்கு கிறுகிறுவென்று மயக்கம் வராத குறை. சங்கர நாராயணன் அன்றைய இரவில் சொன்னது தான் நினைவுக்கு வந்தது. பிரச்சினைக்குரிய கட்டங்கள் வரும் போது தாங்குவதே காதல்.

தன் காதலும் தாங்குமா?

பாரதிக்கு கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது!



முகம் வீங்கிப் போய் சோர்வாக காட்சி தந்த பாரதியை பார்த்த மாத்திரத்தில் அவள் காதலில் தான் ஏதோ பெரிய சிக்கல் என்பது சங்கர நாராயணனுக்கு புரிந்து விட்டது.

என்னவென்று கேட்கவும் அவள் கடிதத்தை காட்டினாள். படித்துப் பார்த்த உடனேயே சிரிப்பு வந்து விட்டது சங்கர நாராயணனுக்கு.

இது என்ன சிரிக்கிற விஷயமா?

அவள் அதிர்ச்சியுடன் அவனை ஏறிட்டாள்.

"அப்படிப் பாக்காதீங்க பாரதி.. இப்படி எதாவது ஒண்ணு வரும்னு நான் எதிர்பார்த்தேன். சும்மா சொல்லக் கூடாது உங்க காதலனை! முடிவை நீயே எடுன்னு பந்தை உங்க கையலயே கொடுத்துட்டாரே.."

"என்ன சார் அவர் சாமர்த்யத்தை ரசிக்கறீங்களா இல்லை என் நெருக்கடியையா?"

"ரெண்டுமே இல்ல பாரதி.. காதலிச்சாலே இப்படி தான். காதல்ங்கறது ஒரு நான் வெஜ் ஐட்டம் மாதிரி. ஒரு உயிர் போயே தீரணும்."

"சார் எனக்கு விளக்கங்கள்ளாம் வேண்டாம். எனக்கு ஒரு நல்ல வழி காட்டுங்க ப்ளீஸ்.."

"என் காதல்லயே முழுசா ஜெயிக்காதவன் நான் உங்களுக்கு எப்படி வழி காட்ட முடியும்?"

"இப்படி சொன்னா எப்படி சார்.. நாமல்லாம் காதல்ங்கற புது ஜாதியை சேர்ந்தவங்க - கட்டாயம் உதவி செய்வேன்னு சொன்னீங்களே.."

"சரி நான் என்ன செய்யணும்?"

"எங்களுக்காக வசந்த் அம்மா கிட்ட பேசுங்களேன்.."

"வக்காலத்தல்லாம் ஜெயிக்காது பாரதி. இங்க ஒரு பெண் இயலாமையோட இருக்கா. அவ வாழ்க்கைக்கு குந்தகம் வராம முடிவு எடுக்கணும்."

"அது எப்படி சார்.. யாராவது ஒருத்தர் தானே இங்க வாழ முடியும்?"

"அப்ப அந்த பெண்ணை பற்றி கவலைப்படாம உங்க காதலரை இங்க வரச் சொல்லுங்க. நானே கல்யாணத்த பண்ணி வைக்கறேன்."

- சங்கர நாராயணன் பளிச்சென்று தீர்வை அளித்தான்.

பாரதிக்கும் ஒரு புது தெம்பு வந்து அவனோடு பேசிட செல்போனை கையில் எடுத்தாள். எடுத்த வேகத்தில் மௌனமானாள்.

"என்ன பாரதி?"

"இல்ல.. உங்க மாமா மகள் அஜந்தா மாதிரி இவங்களும் தற்கொலை செய்துகிட்டா.."

"அதுக்கு நாம என்ன செய்ய முடியும்?"

"இல்ல சார்.. வேண்டாம் சார்.." - போனை வீசி எறிந்தாள்.

"என்ன வேண்டாம்.."

"வசந்த் இனி எனக்கு வேண்டாம் சார். ஒரு பெண் வாழ்க்கையை அழிச்சுட்டு நான் வாழறதுக்கு நான் காதல்ல தோத்துட்றது எவ்வளவோ மேல் சார்.."

"நிஜமாவா சொல்றீங்க?"

"சத்யமாவே சொல்றேன் சார்.."

"உங்கள பத்தி தெரிஞ்சுதான் உங்க காதலரும் இப்படி ஒரு கடிதம் எழுதியிருக்காரு போல.."

"என்ன சொல்றீங்க?"

"இவ்வளவு சீக்கிரம் விட்டுக் கொடுத்திட்டீங்களே.."

"என்ன சார் பண்ண.. எனக்குதான் கொடுப்பினை இல்லையே?"

"பின்னால வருத்தப்படக் கூடாது."

"வருத்தப்படாம எப்படி இருக்க முடியும். ஆனா அது காலத்தால சரி ஆயிடும்."

"சரி இப்படியே எத்தனை நாளைக்கு இருக்க முடியும் வேற ஒருத்தரை நீங்களும் கல்யாணம் பண்ணிக்கலாமே."

"போதும் சார்.. அந்த பேச்சையே எடுக்காதீங்க. உங்க மனைவி நினைவா ஒரு தனிமை வாழ்க்கையை உங்களால வாழ முடியும்னும் போது நானும் என் வசந்தை மானசீகமான கணவனா நினைச்சுகிட்டே வாழ்ந்துடுவேன் சார்.."

"நீங்க பேசறது சினிமா காதல்ல தான் சாத்யம் நிஜத்துல ரொம்ப கஷ்டம்.."

"அதுக்காக இப்ப என்னை என்ன பண்ண சொல்றீங்க?"

"பிராக்டிகலா யோசியுங்க.."

"இந்த விஷயத்துல ஒரே பதில் தான் சார். உங்களால உன்னதமான ஒரு காதல் வாழ்க்கை வாழ முடியும்னா என்னாலயும் முடியும்.."



- தீர்மானமாக பதில் கூறினாள் பாரதி. ஆனாலும் விழியோரம் கண்ணீர். அதை கூர்ந்து பார்த்த சங்கர நாராயணனிடமும் ஒரு மாற்றம். வசந்தின் கடிதத்தை கிழித்தவன் அப்போதே அவள் எதிரில் சென்னைக்கு புறப்பட தயாரானான்.

"அனுவை பத்ரமா பார்த்துக்குங்க.. உங்க வசந்தோட வரேன்" என்றவனாக புறப்பட்டான்.

"அவரை பார்க்கறதால என்ன சார் பிரயோஜனம்?"

"அது அவரோட நான் வரும் போது புரியும்.."

- அந்த பதிலுக்குள் ஆயிரம் அர்த்தங்கள்!

இரண்டு நாட்கள் சென்று விட்டது.

அனுஷா அப்பா அப்பா' என்று ஏங்கத் தொடங்கி விட்டாள். கண்ணிரண்டும் வாசற்படி மேலேயே தான் இருந்தன. பாரதிக்கும் பார்வை வெளியே தான் இருந்தது.

சங்கர நாராயணன் என்ன செய்திருப்பான்..

வசந்தோடு வருவானா?

யாருக்கும் பாதகம் இல்லாமல் தன் காதல் ஜெயிக்குமா? கேள்விப் பந்துகளோடு உருண்டபடியே ஓய்ந்து போய் விட்டாள் பாரதி.

நல்லவேளையாக வீட்டு வாசலில் ஒரு கார் தேங்கி நின்றிட வசந்தும், சங்கர நாராயணனும் இறங்கினர். கூடவே வசந்தின் அம்மா அக்கா என இருவரும் இறங்கினர்.

பாரதிக்கு படபடப்பாக இருந்தது.

பாய்ந்து வந்து வரவேற்றாள்.

வசந்த் முகத்தில் அப்படி ஒரு மகிழ்ச்சி.

பாரதியை பார்த்த மாத்திரத்தில் வெற்றி என்று கட்டை விரலைத்தான் காட்டினான்.

ஆனால் எப்படி என்பதற்கு பதிலை சங்கர நாராயணனின் செயல்கள் கூறிக் கொண்டிருந்தன.

அவன் அனுஷாவை வசந்தின் அக்கா உஷாவுக்கு காட்டிய படி "இவதான் நம்ம மக.." என்ற போதே புரிந்து விட்டது. உச்சி மண்டையில் ஜிலீர் என்ற உணர்ச்சி பரவினது போலவும் இருந்தது - அவன் விசுவரூபம் எடுத்து வானுக்கும் மண்ணுக்குமாக நிற்கிற

மாதிரியும் இருந்தது.

உஷா நர்மதாவின் படத்தை பார்த்து கை கூப்பி வணங்கினாள். சங்கரும் மெல்ல பாரதி அருகே வந்தான்.

"உஷாவை ஜெயந்திக்கும் நிச்சயம் பிடிக்கும்னு நான் நம்பறேன். அனுஷாவுக்கும் உஷாவை பிடிக்கும்னு நம்பறேன். ஒருத்தருக்கு இரண்டு பேருக்கு வாழ்க்கை கிடைக்கும் போது என் தனித்த வாழ்க்கைல பெருசா என்ன அர்த்தம் இருந்துட முடியும்..? காதல்னா பாவம்னு சொன்ன நான் காதல்னா விட்டுக் கொடுப்பது - தியாகம் செய்வது - உதவி செய்வதுன்னும் மாற்றிப் பார்க்க விரும்பறேன். அதுக்கு உங்களால ஒரு வாய்ப்பு வந்துருக்கும் போது அதை கோட்டை விட்டா நான் எல்லாம் என்ன மனுஷன் மிஸ் பாரதி?" என்று கேட்டான்.

பாரதி பிரமிப்போடு மெல்ல அவன் கால்களில் விழத் தொடங்கினாள். ஓடிப்போய் வசந்தும் சேர்ந்து கொண்டான்!

- முற்றும் -

வெளியீடு :

**விசால் பப்ளிகேஷன்**

*278, ஞானகிரி நகர், சிவகாசி - 626 189.*

போன் : *04562 - 224034, 225034*

செல் : *98430 52034, 94426 64785*

**E-mail : vivekfinearts@gmail.com**